# திட்டம்
மாத இதழ்

மலர் 50
இதழ் 10

ஜூன் 2018
ஜெய்ஷ்த - ஆஷாத 1939

முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
இணை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**
துணை ஆசிரியர்
**சஞ்சய் கோஷ்**

கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**

உதவி இயக்குநர்
**திட்டம்**
வெளியீட்டுப்பிரிவு
A Wing இராஜாஜி பவன்
பெசன்ட் நகர்
சென்னை -600 090
தொலைபேசி : 044-2446 5382


## உள்ளடக்கம்

- தலையங்கம்
- சேலம் சீர்மிகு நகரம் - R. சதீஷ்
- மோடி அரசின் மேம்பாட்டு அணுகுமுறை : ஒரு பார்வை - ராஜீவ் அஹூஜா
- தூய்மை இந்தியா: தூய்மையை நோக்கி அடியெடுத்து வைத்தல் - பரமேஸ்வரன் ஐயர்
- சித்தர் யோகம் - டாக்டர் ஆர்.எஸ். ராமசுவாமி
- மின்னணுப் பரிமாற்றம் மூலம் மேம்பாடு - அமிதாப் காந்த்
- பெண்களையும் குழந்தைகளையும் பாதுகாக்க ஆதரவுக்கரம் - ராஜேஷ் ஸ்ரீவத்ஸ்சவா
- பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம் பெண் குழந்தைகளைப் படிக்கவைப்போம் - வே. அமுதவல்லி
- பசுமை வழியில் நீலப்புரட்சி - எஸ். பெலிக்ஸ், எம். மேனகா
- தப்பியோடி வாழும் பொருளாதாரக் குற்றவாளிகள் சட்டம் 2018 - டாக்டர். வி. முரளி
- பிரதமமந்திரி பாரத மக்கள் மருந்துத்திட்டம் (பிரதமமந்திரி பாரதிய ஜன ஔஷதி பரியோஜனா) - (PMBJP) - பிப்லப் சட்டர்ஜி
- உங்களுக்குத் தெரியுமா?

Log on to **http://publicationsdivision.nic.in/**
*in collaboration with* **bharatkosh.gov.in**

# புதிய தொடுவானம்

சிந்து சமவெளி நாகரிகம், எகிப்தியர், ரோமானியர், கிரேக்கர்கள், மெசபடோமியர்கள் யாராக இருந்தாலும் சரி, நினைவிற்கு எட்டாத காலம் தொடங்கி ஒவ்வொரு ஆட்சியாளரும், தனது ராஜ்ஜியம் எப்போதும் வளர்ச்சியின் பாதையில் முன்னேறிச் செல்லவேண்டும் என்றுதான் விரும்புவார்கள். மிகவும் அண்மைக்காலத்தில், அக்பர், கிருஷ்ண தேவராயர், சந்திரகுப்த மௌரியர், ராஜராஜ சோழன், திப்புசுல்தான் போன்ற பேரரசர்கள் பலரும் தங்கள் ராஜ்ஜியங்களுக்காக சிறந்த நிர்வாக அமைப்பு முறைகளை உருவாக்கவே முயன்றார்கள். தங்கள் ராஜ்ஜியம் செழிப்பதற்கு தங்களது குடிமக்களின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சி முக்கியமானது என்பதை அறிந்திருந்தார்கள்.




இன்றைய தேசத்தின் உண்மையான வளர்ச்சிக்கு பலவிதமான முன்னுதாரணங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இன்று வளர்ச்சி என்பது வெறும் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி மட்டும் சிந்திப்பதல்ல. கல்வி, சுகாதாரம், விவசாயிகள் நலன், திறன் வளர்ச்சி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு போன்ற பல பிரிவுகளின் அளபுருக்களையும் உள்ளடக்கியதாக வளர்ச்சி என்பது இருக்கிறது.

தேசத்தின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் இந்திய அரசாங்கம் தனது முயற்சிகளில் ஒருபோதும் பின்தங்கிவிடவில்லை. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதே தேசத்தின் இன்றைய மந்திரம். அப்போதுதான் வளர்ச்சியின் பயன்கள் ஏழையினும் ஏழைக்கும் சென்று சேரும். இதனை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் திட்டங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

சரக்கு மற்றும் சேவை வரியை (GST) அறிமுகப்படுத்தி வரி அமைப்பு முறைகளை அரசாங்கம் சீர்திருத்தியது. வங்கித்துறையில் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தது. ஜிஎஸ்டி இந்தியாவின் மிகப் பெரிய வரி சீர்திருத்தம் ஆகும். இந்தியாவில் வரி வசூலை காலப்போக்கில்

இது அதிகரிக்கும். வரி தகவல் கட்டமைப்பு (Tax Information Network - TIN), மின்னணு முறையில் வரி கணக்குகளை சமர்ப்பித்தலும் அவற்றை ஒருங்கிணைத்தலும் (Electronic Return Acceptance and Consolidation System - ERACS), இ சஹாயோக் போன்றவை நேரடி வரிவிதிப்புகளை எளிமைப்படுத்தியுள்ளன.

உலகமே மின்னணு மயமாகிவரும் போது இந்தியா பின்தங்கி நிற்கலாகுமா? வணிக வழிமுறைகளுக்கான பொறியியல் தொழில்நுட்பம், தரவுகளின் பகுப்பாய்வு ஆகியவற்றின் மூலம் மின்னணுத் தொழில்நுட்பத்தை பல்வேறு துறைகளிலும் விரைவாக மேற்கொண்டிருப்பது, அரசின் திட்டங்கள் வடிவமைக்கப்படும் வழிமுறைகளையும், செயல்படுத்தப்படும் வழிமுறைகளையும் மாற்றியமைத்திருக்கிறது. நேரடிப் பண ஆதாயம், பொது நிதி நிர்வாக வழிமுறை, மின்னணுச் சந்தை, BHIM செயலியின் மூலம் மின்னணுப் பணப்பரிமாற்றங்கள் போன்றவை, புதிய வகை இடைமுகப்புகள் மூலம் பதில் கூறும் பொறுப்பை அரசாங்கத்திற்கு உருவாக்கித் தந்துள்ளன.

தூய்மை இந்தியா திட்டம் உண்மையில் ஒரு மக்கள் இயக்கமாகவே மாறி இருக்கிறது. இந்தத் திட்டத்திற்குக் கிடைத்திருக்கும் வரவேற்பு பிரமாண்டமானது. அக்டோபர் 2, 2014 முதல் 7.1 கோடிக்கும் அதிகமான வீடுகளில் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. ஊரகத் துப்புரவுத் தழுவல் அளவு அக்டோபர், 2014இல் இருந்த 39 சதவீதத்திலிருந்து இரண்டு மடங்காகி இன்று 83 சதவீதமாக உள்ளது.

வளர்ச்சியின் இன்னொரு முக்கியமான கோணம் நலப்பாதுகாப்பு. ஏழைகளுக்கு நியாயமான விலையில் தரமான மருந்துகள் கிடைப்பது ஒரு சவாலாகவே இருந்து வந்தது. பிரதான் மந்திரி ஜன் ஔஷதி பரியோஜனா திட்டம் நாடு முழுவதிலும் உள்ள தனது மையங்களின் மூலம் இந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு முயற்சித்து வருகிறது.

எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடியவர்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் முக்கியமான கடமை. பெண் குழந்தைகளுக்கு எதிரான மனப்போக்கை மாற்றும் விதத்தில் பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளைப் படிக்கவைப்போம், பாலின சாதனையாளர்கள் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஆபத்தில் இருக்கும் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் தொலைபேசி உதவி எண்கள், வன்முறையால் பாதிக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு ஆகிய திட்டங்களின் மூலம் பெண்களும், குழந்தைகளும் அச்சமற்ற சூழ்நிலையில் வாழ்வதையும், தேசத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் பங்களிப்பதையும் உறுதி செய்வதற்கு அரசாங்கம் எப்போதும் முயற்சித்து வருகிறது.


தேசத்தின் முன்னேற்றத்திற்கு ஊரக வளர்ச்சி முக்கியமானது. தேசிய உணவு பாதுகாப்புத்திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம், பிரதம மந்திரியின் பயிர் பாதுகாப்புத்திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், அவர்களின் வருவாயை இரட்டிப்பாக்கவும், கிராமத்திற்கும், நகரத்திற்கும் உள்ள இடைவெளியைக் குறைக்கவும் அரசு முயற்சித்து வருகிறது.

வளர்ச்சி என்பது எதிர்பாராமல் நிகழ்வது அல்ல. ஒன்று சேர்ந்து உழைப்பதால் உருவாவது. இந்தியாவில் ஒன்றிணைந்து உழைக்கும் சக்திகள் சரியான திசை நோக்கி நகர்ந்து தேசத்தை புதிய தொடுவானத்தினை நோக்கி இட்டுச் செல்கின்றன.

**- ஆசிரியர்**

# சேலம் சீர்மிகு நகரம்

-- R. சதீஷ்,




மத்திய அரசின் சீர்மிகு நகரம் (ஸ்மார்ட் சிட்டி) திட்டத்தில் நாடு முழுவதும் தேர்வு செய்யப்பட்டுள்ள 100 நகரங்களில் தமிழ்நாட்டில் சேலம் மாநகராட்சி உள்பட 12 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. 31.07.2015 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) அரசு ஆணை எண்.112இன் படி இத்திட்டத்தினை செயல்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சீர்மிகு நகரம் திட்டத்தில் இரண்டாம் கட்டத் தேர்விற்காக “நகர அளவிலான கொள்கைத் திட்டவரைவு” (City Level Conceptual Plan) தயார் செய்யப்பட்டு 30.06.2016 அன்று மத்திய நகர்ப்புற அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சீர்மிகு நகரம் திட்டத்திற்கு சேலம் மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக 20.09.2016 அன்று மத்திய நகர்புற அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டம் சேலம் மாநகராட்சியில் இரண்டு பிரிவுகளாக செயல்படுத்தப்பட உள்ளது.

## 1. பகுதிகளின் அடிப்படையில் அபிவிருத்தி செய்தல் (Area Based Develpoment)

சேலம் மாநகரப் பகுதிகளின் அடிப்படையில் அபிவிருத்தி செய்தல் திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசின் வழிகாட்டுதலின் படியும், சேலம் மாநகர மக்களின் கருத்து வாக்கெடுப்பு, திட்ட ஆலோசகரின் கள ஆய்வு ஆகியவற்றின்படியும் பழைய பேருந்து நிலையம், வ.உ.சி. மார்க்கெட் பகுதிகளை உள்ளடக்கிய 690 ஏக்கர் பகுதி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளை உள்ளடக்கிய முழுமையான உள்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகளை செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ள வரைவுத் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

### I - பகுதிகளின் அடிப்படையில் அபிவிருத்தித் திட்டம் போக்குவரத்து மேலாண்மை

பேருந்து முனையம் அபிவிருத்தி செய்தல், நவீன பல்லடுக்கு வாகன நிறுத்தம் அமைத்தல், நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட பேருந்து மேற்கூரை அமைத்தல், பொதுப்போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல், சாலை வடிவமைப்பு மற்றும் மறு வடிவமைப்புப் பணிகள், நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய தானியங்கி சிக்னல்கள் அமைத்தல்.

### II - அபிவிருத்தித் திட்டங்கள்

அரசுகட்டிடங்கள், வணிக வளாகங்கள் அபிவிருத்தி, வ.உ.சி. அங்காடிகளைப் புதுப்பித்தல்.

## III - உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் புலப்படத்தக்க மேம்பாடு

திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டம், போஸ் மைதானம் அபிவிருத்திப் பணிகள், பசுமை வெளி பூங்காக்கள் அமைத்தல், சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்தல், மின்சேமிப்பு, தெரு விளக்குகளில் எல்.இ.டி. விளக்குகள் பொருத்துதல், அனைத்து சோடியம் விளக்குகளையும் எல்.இ.டி. விளக்குகளாக மாற்றியமைத்தல்

## IV - அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல்

குடிநீர்த் திட்டம், திடக்கழிவு மேலாண்மை செயலாக்கம்



## 2. நகர் முழுமைக்குமான திட்டம் (Pan City)

சேலம் மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் கீழ், நகர் முழுமைக்கும் மின்ஆளுகை மூலம் செயலமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. குடிநீர் விநியோகத்தில் அளவுமாணி பொருத்துதல், போக்குவரத்து மேலாண்மையினை கணினி மூலம் கையாளுதல், நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய சிக்னல்கள் பொருத்துதல், பாதுகாப்பான வாகன நிறுத்துமிடங்களை அமைத்தல், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், தெருவிளக்குகளை கண்காணிப்பு செய்தல் உள்ளிட்ட வசதிகளை கண்காணித்திட ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு அறை அமைத்தல், குமரகிரி ஏரியினை மேம்படுத்துதல், சீர்மிகு சாலைகள் அமைத்தல், பொன்னம்மாபேட்டை இரயில்வே கேட்டில் புதிய மேம்பாலம் அமைத்தல், மாநகரப் பகுதிகள் முழுவதும் உள்ள அனைத்து பூங்காக்களையும் மேம்படுத்துதல் என அனைத்துப் பணிகளும் சுமார் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.



- **R. சதீஷ்**, ஆணையாளர், சேலம் மாநகராட்சி.

# மத்திய அரசின் மேம்பாட்டு அணுகுமுறை : ஒரு பார்வை

- ராஜீவ் அஹுஜா

மேம்பாடு, விரைவான மேம்பாடு, முழுமையான மேம்பாடு என்பதை தற்போதைய அரசு தன்னுடைய மூன்று முக்கிய குறிக்கோள்களாக அறிவித்துள்ளது. மற்றொரு வகையில், மேம்பாடு என்பது ஒரு வெகுஜன மக்கள் இயக்கமாக மாறவேண்டும் என்று கூறியுள்ளது.

தற்போதைய அரசு, மேம்பாட்டை அரசியலின் மையக்கருத்தாகக் கொண்டுவந்துள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது. வளர்ச்சியையும், மேம்பாட்டையும் ஊக்குவிக்க அரசு பல திட்டங்களைத் துவக்கியுள்ளது. அவையாவன: ஜன்தன் திட்டம், மின்மயத்திட்டம், இந்தியாவில் உருவாக்குவோம் திட்டம், திறன்மிகு இந்தியா, முத்ரா வங்கித்திட்டம், தூய்மை இந்தியா, சுகாதாரமான பாரதம் மற்றும் பிற திட்டங்கள். கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு துவக்கிய இந்த பல திட்டங்களை மக்கள் எப்படிப் புரிந்துகொள்வது?

ஒரு பார்வையில் இந்த பலவகையான சீர்திருத்தங்களையும், திட்டங்களையும் பொருளாதார வளர்ச்சிக்கும், மாறுதல்களுக்குமான காரணிகளாகக் கருதலாம். ஒரு குறுகிய கண்ணோட்டமானாலும் இதில் சில விஷயங்கள் தெளிவாகத் தெரிகின்றன. இந்த வகையில் மேற்கூறப்பட்ட சீர்திருத்தங்களையும், திட்டங்களையும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம் : (i) உடனடியாக பலனளிக்கக்கூடியது (ii) மத்திம காலத்திலும், நீண்ட காலத்திலும் பயனளிக்கக்கூடியது (iii) குறுகிய கால இடர்பாடுகளும், தொல்லைகளும் இருந்தாலும் நீண்ட நாட்களுக்குப்பிறகு பயனளிக்கக்கூடியது.

மத்திய சுகாதாரப் பணியில் வேலைசெய்யும் மருத்துவர்களின் ஓய்வு வயதை உயர்த்தி நாட்டில் மருத்துவர்களின் பற்றாக்குறையை சமாளிப்பதும், இந்தியக்காடுகள் சட்டத்திலிருந்து மூங்கில்களுக்கு விலக்கு அளித்து அதனை காடுகள் இல்லாத இடங்களிலும் வளர்க்க ஊக்கமளித்து விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தியதும் உடனடியாகப் பலனளிக்கக்கூடிய திட்டங்களாகக் கூறப்படுபவையாகும். பல மாநிலங்களிலும், பகுதிகளிலும் அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள் போன்று புதியனவற்றை அமைத்தல் மற்றும் வட இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தப்படும் அதிநவீன தொழில்நுட்ப புல்லட் ரயில்கள் ஆகியன மத்திம, நீண்ட காலத்திற்குப் பிறகு பயனளிக்கும் திட்டங்களாகக் கருதப்படுபவை. அதைப்போலவே, அடிப்படை சீர்திருத்தங்களான சரக்கு மற்றும் சேவை வரி, பணமதிப்பிழப்பு ஆகியவை குறுகிய காலத்தில் தொல்லைகள் கொடுத்தாலும் நீண்ட காலத்தில் மிகுந்த பொருளாதாரப் பயன்களை அளிக்கக்கூடியவை.



## பொருளாதார நிபுணர்களின் கண்ணோட்டம்

பலவகையான பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் அரசுத் திட்டங்களை பொருளாதார நிபுணர்களின் கண்ணோட்டங்களிலிருந்தும் பார்க்கலாம். அவை, சந்தையால் ஏற்படும் தோல்விகளையும், அரசால் ஏற்படும் தோல்விகளையும் சீர்செய்ய மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களும் திட்டங்களும் ஆகும். பொதுச்சந்தைகளில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருப்பவர்கள் கூட அவை சில சமயங்களில் சரியும் போது அதை சரிசெய்ய அரசு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதை உணர்வார்கள். இதற்கு உதாரணமாக பொதுமக்களுக்குத் தேவையான பொருள்களைக் கட்டாயமாக வழங்கவேண்டிய நிலைமை, அத்தியாவசியப் பொருள்கள் வழங்குவதில் ஏற்படும் சிக்கல்களைக் களைதல், சந்தையின் பெரும் பகுதியை சில

நிறுவனங்கள் ஆக்கிரமித்துக் கொள்ளுதலால் ஏற்படும் விளைவுகளை சமாளித்தல், பொருளாதார மேல்மட்ட நிலைமைகளை சமன் செய்வதற்கான செயல்பாடுகள் மற்றும் மக்களின் வாங்கும் சக்தி குறைபாடுகளுக்கான சீர்திருத்த நடவடிக்கைகளாக நாம் பார்க்கலாம்.

### சந்தைத் தோல்விகளை சீர்செய்வது

தற்போதைய அரசு உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு அளித்திருக்கும் பலமான அழுத்தம் புதிய திட்டங்களுக்கு மட்டுமல்லாமல் முந்தைய அரசுகளால் துவக்கப்பட்டு செயல்படாமல் இருக்கும் திட்டங்களையும் செயல்படுத்த - பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய பொருள்கள் திட்டம் பாதித்திருப்பதை சீர்செய்வதற்கான ஒரு திட்டமாகும். இது அல்லாமல் பன்னாட்டு சூரியசக்தித் திட்டத்தில் இணைவதன் மூலம் உலகளாவிய பொது நலத் திட்டத்திற்கென தானே முன்வந்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மின்னணு சேவைத் திட்டங்களுக்கு ஊக்கம் அளிப்பவையாக இருந்தாலும், தேசிய சத்துணவு இயக்கத்திற்கு மறுஅழுத்தம் கொடுப்பதாக இருந்தாலும், சுத்தமான பாரத இயக்கத்தைத் துவக்குவதாக இருந்தாலும் இவையெல்லாம் நாட்டின் வளர்ச்சிக்கு மிகுந்த பயனளிக்கின்றன என்ற உணர்வின் காரணத்தால்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதைப்போலவே, வாகனங்களிலிருந்து வெளியேறும் நச்சுவாயுவைக் குறைப்பதற்காக புகைவெளிப்பாடு அளவை நான்கிலிருந்து ஆறாக பாரத் ஸ்டேஜ் உயர்த்தியிருப்பதும் ஆக்ஸிடாசின் என்ற வேதியியல் பொருளை இறக்குமதி செய்வதையும், விற்பதையும் தடை செய்யும் திட்டம் ஆகியவை மோசமான சூழல் விளைவுகளைத் தடுப்பதற்கான திட்டங்களாகும்.

இது அல்லாமல், தற்போது ஜன்தன்திட்டத்தின் மூலம் எல்லோருக்கும் வங்கி வாய்ப்பு அளிப்பது, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான வீட்டுக்கடன்களுக்கு வட்டிமானியம் அளிப்பதன் மூலம் எல்லோருக்கும் வீட்டுவசதியை வழங்குவது மற்றும் திறன்மிகு இந்தியா மூலம் எல்லோருக்கும் தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகளை அளிப்பதாகும்.

மக்களுக்கு தற்போது கிடைக்காத சில சேவைகளையும் இந்த அரசு வழங்கியுள்ளது. அவையாவன: மேல்மட்ட பொருளாதார நிலைத்தன்மையை உறுதிசெய்ய பொருளாதார வளர்ச்சி அவசியம். நிலைத்து நிற்கும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க பல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. உதாரணமாக, விவசாய உற்பத்தி மற்றும் திறனையும் ஊக்குவிக்கும் திட்டங்கள் (பிரதமமந்திரி விவசாயப்பாசனத்திட்டம், மண்வளத்திட்டம், பயிர்க்காப்புத் திட்டங்கள் ஆகியன). எளிதான வங்கிக்கடன் மூலம் சிறுதொழில் முனைவோரையும், புதியனவற்றைக் கண்டுபிடிப்பவர்களையும் ஊக்குவிக்கும் திட்டங்கள் (முத்ரா திட்டம், புதியன உருவாக்கு இந்தியா திட்டம், நிமிர்ந்து நில் இந்தியா திட்டம்) ஆகியன. இது அல்லாமல் அரசு, மிகப்பெரிய இலக்குகளை தன்முன் வைத்துள்ளது : 2022இல் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது, அடுத்த மூன்று ஆண்டுகளில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நம்நாட்டிற்கு வரும் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது, 2022க்குள் 100கிகாவாட் சூரிய



மின்உற்பத்தியை உருவாக்குவது போன்றவையாகும். இந்த அரசு, மேற்கொண்டுள்ள பொருளாதார வளர்ச்சி உந்துதல்களைப் பார்க்கும்போது வளர்ச்சிக்கான ஆதாரங்களைப் பரவலாக்குவதோடு, சமுதாயத்தின் அனைத்து தரப்பு மக்களின் திறமைகளை வெளிப்படுத்த ஜனநாயக வளர்ச்சிமுறைகளை மேற்கொண்டிருப்பது தெரிகிறது.

சந்தைத் தோல்விகள் அல்லாமல், அரசின் நோக்கங்களும் தோல்வியடையலாம். அரசு, சந்தைத் தோல்விகளை சமன் செய்ய முடியாமல் போகலாம். மக்களின் ஏழ்மையைக் குறைப்பதிலும், எல்லோருக்கும் சமவாய்ப்பை வழங்குவதிலும் அரசுத்திட்டங்கள் தோல்வியடையலாம்.

## அரசின் தோல்விகளை சமன் செய்தல்

சந்தை சார்ந்த பொருளாதாரத்தில் அதன் தரத்தை நிர்ணயித்து, ஒழுங்குமுறை நெறிகளை செயல்படுத்துவது அரசின் ஒரு முக்கிய கடமையாகும். இந்த அரசு, புதிய ஒழுங்குமுறை அமைப்புகளை உருவாக்கி ஏற்கனவே உள்ளவற்றை வலுப்படுத்தியுள்ளது. வீட்டுக்கட்டுமானத்துறையில் வெளிப்படைத்தன்மையை உருவாக்கவும், வீடுகளை வாங்குபவர்களின் நலனைக்காக்கவும் ரியல் எஸ்டேட் சட்டத்தை இந்த அரசு உருவாக்குகிறது. அதைப்போலவே இந்த அரசு உணவுப்பாதுகாப்பு நெறிமுறைகளை வலுவாக்கியுள்ளது. வங்கிசார்ந்த நெறிமுறைகளையும் கடுமையாக்கியுள்ளது. மருத்துவர்கள், கணக்காயர்கள், ஆடிட்டர்கள் போன்றவர்களின் செயல்களை நெறிப்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. சமுதாயத்துறையிலும் அரசு பல நெறிமுறைகளை உருவாக்கியுள்ளது. உதாரணமாக, மருத்துவ சிகிச்சைத்துறையில், ஒழுங்குமுறை ஆணையர் இல்லாத நிலைமையில் மருந்துகள், மருத்துவப்பொருள்கள் துறையில் பலகுறைபாடுகளும் லஞ்ச லாவண்யங்களும் உள்ளன. இவை, இப்போது அரசின் கவனத்திற்கு வந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாட்டை மேம்படுத்த அரசு அவைகளின் பங்குகளை விற்க ஒரு பெரிய இலக்கை வைத்துள்ளது. அது அல்லாமல், மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலையில் இந்தப் பொதுத்துறை நிறுவனங்கள் வலுப்பெற்று சிறப்புடன் விளங்கவும் ஊக்கமளித்து வருகிறது. இதற்கு உதாரணமாக, இந்தியத் தபால்துறை வங்கியை ஆரம்பித்து, அந்தத்துறையில் செயல்படும் 1.5 இலட்சம் தபால் நிலையங்களை நவீனமயமாக்கி வருகிறது. இது அல்லாமல் பொதுத்துறை நிறுவனங்களில் அரசின் தலையீட்டைக் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

குறைந்தபட்ச ஆளுமை அதிகபட்ச அரசுப் பயன்கள் என்ற முயற்சியில் அரசு அதன் துறைகளில் மின்னணு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொதுமக்கள் சேவைகளை எளிதாக அளிக்கவும், தொழில்கள் மற்றும் தொழில் முனைவோர் சிறப்பாகச் செயல்படவும் கணினி சார்ந்த தொடர்பை விரிவுபடுத்தி பணியாளர்கள் நேரடியாக ஈடுபடாத வண்ணம் மாற்றிவருகிறது.

## சமத்துவத்தைப் போற்ற

நாட்டில் சமத்துவத்தைப் போற்ற இன்றைய அரசு குறிப்பிட்ட பகுதிகளிலும் குறிப்பிட்ட மக்களுக்கும் புதிய திட்டங்களை உருவாக்கியுள்ளது. பல்லாண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட வடகிழக்கு மாநிலங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அந்தப்பகுதியில் சமத்துவமான மேம்பாட்டை உருவாக்க பல புதிய வளர்ச்சித்திட்டங்கள் துவங்கப்பட்டுள்ளன. வளர்ச்சியில் பின்தங்கியுள்ள ஆனால், முன்னேறவேண்டும் என்று துடிக்கும் 100முக்கிய மாவட்டங்களை இந்த அரசு தேர்ந்தெடுத்துள்ளது. ஊக்கமிகுந்த மாவட்டங்களை மாற்றியமைத்தல் என்ற திட்டத்தின்கீழ் இந்த மாவட்டங்களுக்கு தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. சமத்துவமான முன்னேற்றம் என்ற அடிப்படையில் தான் பொறுப்பேற்ற முதல் 1000 நாட்களிலேயே மோடி அரசு எல்லா கிராமங்களுக்கும் மின்சாரவசதி அளிக்கும் திட்டத்தை செயல்படுத்திவருகிறது. இந்தத்திட்டத்தோடு எல்லா வீடுகளுக்கும் மின்சாரம்

கிடைக்கச் செய்யும் வகையில் ஒரு திட்டமும் செயல்பட்டு வருகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல் நலத்தைப் போற்ற மத்திய அரசு உஜ்வலா திட்டம் என்று அறிவித்து அதன்படி வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள பெண்களுக்கு இலவச சமையல் எரிவாயு வழங்குகிறது. இது போலவே, ஏழை மற்றும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் நோய்வாய்படும்போது அதிக செலவு ஏற்படுவதைத் தடுக்கும் வண்ணம் தேசிய உடல்நல சிகிச்சைப் பாதுகாப்புத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஆளுகைத் திறனை மேம்படுத்தவும் மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும், பயன்களும் அவர்களுக்கு நேரடியாக சென்றடையும் வண்ணம் அனைத்துப் பயன்களும் வங்கிகள் மூலம் நேரடியாக வழங்கப்படுகிறது.


**மற்றொரு நோக்கம்**

சந்தைகளில் ஏற்படும் தோல்விகளை சீர்செய்யவும், சமத்துவத்தை அடையவும் அரசு ஒரு குறுக்கீட்டு நடைமுறையை ஏற்று மக்களின் எண்ணங்களையும் செயல்களையும் மாற்றும் முயற்சியையும் மேற்கொண்டு வருகிறது. பெண் குழந்தையைப் போற்றுவதிலும், திறந்த வெளியில் மலம் கழிப்பதிலும் மக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உண்மையில் பிரதமரும் தன்னுடைய சிறந்த பேச்சுத்திறமையைப் பயன்படுத்தி இந்த மனமாற்றத்தை ஏற்படுத்திவருகிறார். இதற்கு உதாரணமாக அவர் மக்கள் உடல்நலத்தோடு வாழ யோகா பயிற்சிகளை மேற்கொள்ளவும், கதர் உற்பத்தியாளர்கள் பயன்பெற மக்கள் கதர் துணிகளைப் பயன்படுத்தி ஊக்குவிக்கவும், வசதிபடைத்தோர் சமையல் எரிவாயு மானியத்தை விட்டுக்கொடுக்க வற்புறுத்தியும், மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த மக்கள் எல்.இ.டி பல்புகளைப் பயன்படுத்தவும் பிரச்சாரங்களை செய்துவருகின்றார்.

**மேம்பாடே நல்ல அரசியல்**

மேற்கூறப்பட்ட உதாரணங்கள் விளக்கங்களுக்காகவே. சீர்திருத்தங்களும், திட்டங்களும் நீண்டுகொண்டே போகின்றன. இந்த சீர்திருத்தங்களையும் திட்டங்களையும் அலசி ஆராயும் போது மக்களை திருப்திபடுத்தும் திட்டங்களிலிருந்து அரசு விலகி இருப்பதைக் காணமுடிகிறது. மக்களை திருப்திபடுத்துவதற்காக வளர்ச்சிப்பணிகளை விட்டுக் கொடுக்கவில்லை. இந்த சீர்திருத்தங்களும், திட்டங்களும் சமுதாயத்தின் எல்லா தரப்பு மக்களுக்கும், எல்லா வயதினருக்கும் பயனளிக்கக்கூடியவை. இப்படிச் செய்வதன் மூலம் மேம்பாட்டையும் அரசியலையும் ஒருங்கிணைத்தே செயல்பட்டிருக்கிறது.




மக்களின் எதிர்பார்ப்புக்கள் அதிகரித்துக்கொண்டே போகும் இந்த நாட்டில் திட்டச் செயல்பாடுகள் பற்றாக்குறை இருக்கும் நிலையில் பல துறைகளில் அரசின் கவனம் தேவைப்படுகிறது. அரசு, பல வகையான முனைப்பு செயல்பாடுகளில் ஒரே சமயத்தில் செயல்படுகிறது. அது செல்லும் பாதை சரியாகவே உள்ளது. ஆனால், இந்த சீர்திருத்தங்கள் மற்றும் திட்டங்களின் செயல்பாட்டின் வேகம் பல நிலைகளைப் பொறுத்துள்ளது. அரசின் வளங்கள், ஏற்கனவே பயன்பெறுபவர்களால் ஏற்படும் சவால்கள் போன்றவையாகும். இந்தக்கட்டுரையில் அரசின் சீர்திருத்தத்திட்டங்கள் பற்றி மட்டுமே ஆராயப்படுவதால் அவை எப்படி செயல்படுகின்றன என்பதைபற்றி நாம் கூறவில்லை. அதை நாம் வேறொரு சமயத்தில் பார்ப்போம்.

- **ராஜீவ் அஹூஜா,** வளர்ச்சிசார் பொருளாதார நிபுணர்.

•

# தூய்மை இந்தியா: தூய்மையை நோக்கி அடியெடுத்து வைத்தல்


- பரமேஸ்வரன் ஐயர்

மக்கள் ஆரோக்கியமாக இருக்க பாதுகாப்பான துப்புரவு வசதியும் ஆரோக்கியமான குடிநீரும் மிகவும் அடிப்படையான தேவையாகும். இவை இரண்டுமே ஒருங்கிணைந்த மனித மேம்பாட்டுக்கு மையமான அம்சங்களாக உள்ளன. உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கான மக்கள் அதிலும் பெரும்பான்மையான குழந்தைகள் இறந்துபோகிறார்கள். போதுமான குடிநீர் விநியோகம் இல்லாதது, துப்புரவு மற்றும் சுகாதாரம் போதாமை ஆகியவற்றோடு தொடர்புடைய நோய்களால்தான் இவர்கள் இறந்துபோகிறார்கள். உயிர் வாழ்வதற்கு சுத்தமான குடிநீர் மற்றும் பாதுகாப்பான துப்புரவு ஆகியன முக்கியமானவையாகும். இவை இரண்டும் இல்லாவிட்டால் உலகம் எங்கும் மக்களின் சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம் ஆகியன பாதிக்கப்படும். இவற்றை அடிப்படைத் தேவை மற்றும் முக்கியமான மனித உரிமைகளுள் ஒன்று எனக் கருதுவதால்தான் கடந்த சில பத்தாண்டுகளாக அரசாங்கங்கள் துப்புரவுப் பிரச்சாரங்களை மேற்கொண்டன. திறந்த வெளியில் மலம் கழிக்காத நிலை, மாதவிடாய் கால ஆரோக்கியப் பராமரிப்பு போன்ற பல்வேறு விஷயங்களில் பாதுகாப்பான துப்புரவு தேவை என்பதை வலியுறுத்தி இத்தகைய பிரச்சார முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதில் இதுவரையிலும் முன் மாதிரி இல்லாத ஒன்றாக தூய்மை இந்தியா இயக்கம் உள்ளது. நடத்தையில் மாற்றம் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பிரச்சாரம் உலகிலேயே நடத்தை மாற்றத்தைக் கோரும் மிகப் பெரிய பிரச்சாரமாக உள்ளது. 2019ஆம் ஆண்டுக்குள் "தூய்மை இந்தியா" என்ற இலக்கை அடைவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பொதுவான மேம்பாட்டை உருவாக்குவது, துப்புரவு செய்யப்படும் இடங்களை அதிகரித்தல், நீடித்த நிலையான துப்புரவு நடைமுறைகளைக் கடைபிடிக்க மக்களை ஊக்கப்படுத்துதல், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையில் கவனம் செலுத்துதல் ஆகியவற்றின் மூலம் இலக்கை அடைய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2014ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று இந்தியாவின் பிரதம மந்திரி செங்கோட்டையில் இருந்து நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் 2019ஆம் ஆண்டுக்குள் தூய்மை இந்தியாவை உருவாக்கிவிடவேண்டும் என்று அழைப்புவிடுத்தார். ஏனெனில் அந்த வருடம்தான் (2019) மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்ததினமாகும். மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த பிரதம மந்திரியின் இந்த அறிவிப்பானது, பெருமை மிகுந்த பயணத்தை நோக்கி இந்தியாவை நகர்த்தியது. உலகின் மிகப்பெரிய துப்புரவுத் திட்டமான தூய்மை இந்தியா இயக்கத்தின் தீர்மானம் என்பது அக்டோபர் 2019க்குள் இந்தியாவை சுத்தமான மற்றும் திறந்தவெளியில் மலம் கழிக்காத நாடாக மாற்றுவதே ஆகும். இந்தத் தீர்மானம் வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத நிகழ்வாக உள்ளது. இது முதன் முதலில் அறிவிக்கப்பட்ட போது இந்தியாவில் 550 மில்லியன் மக்கள் திறந்த வெளியில்தான் மலம் கழித்துக்கொண்டு இருந்தனர். இந்த எண்ணிக்கை இப்போது 200 மில்லியன் என்ற அளவில் வெகுவாகக் குறைந்துள்ளது.

அரசாங்கத்தின் தலைமைப்பொறுப்பில் உள்ளவரால் தைரியமாக வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட மற்றும் குறிக்கோள் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இந்த சுத்தம்

மற்றும் துப்புரவு குறித்த நடவடிக்கையானது உண்மையில் உலகத்திலேயே தைரியமான நடவடிக்கையாகத் திகழ்கிறது. இதனால் தேசிய கொள்கை மற்றும் வளர்ச்சியில் முதல் வரிசையில் துப்புரவுக்கு முக்கியத்துவம் என்று இரட்டை கவனத்துடன் முன் வைக்கப்பட்டுள்ளது. உலக அளவில் பொருளாதார வல்லரசாக 21ஆம் நூற்றாண்டு இந்தியா மாற முயற்சிக்கும் பயணத்தில் மாற்றவும் பிரதம மந்திரி முயற்சித்து வருகின்றார். இந்த அம்சம்தான் கடந்த ஆண்டுகளில் இது போன்று நடைமுறைப்படுத்தப் பட்ட திட்டங்களில் இருந்து தூய்மை இந்தியா இயக்கம் மாறுபட்டு இருப்பதற்கான அடையாளமாக உள்ளது. இது இப்போது தேசிய அளவில் முன்னுரிமை பெற்றுள்ளது. தூய்மை பாரதம் திட்டத்தை, கடந்த ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டு வந்த இதே ஊரகப்பகுதி துப்புரவு வசதியானது இரண்டு மடங்காகியுள்ளது. அக்டோபர் 2014இல் 39 சதவிகிதமாக இருந்த கழிப்பறை வசதியானது இன்று 83 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இதை சரியான கண்ணோட்டத்தில் சொல்லவேண்டுமென்றால், சுதந்திரம் பெற்றதில் இருந்து 2014ஆம் ஆண்டு வரையிலான 67 ஆண்டுகளில் ஏற்படுத்தித் தரப்பட்டதை விட, கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஏற்படுத்தித் தரப்பட்ட துப்புரவு




**மக்கள் தொகை கணக்கெடுப்பு 1981 முதல் ஊரகப் பகுதிகளில் துப்புரவு**

குப்பைகளுக்கோ பொதுஇடத்தில் மலம் கழிப்பதற்கோ வாய்ப்பு ஏதும் இல்லாமல் இருக்கவேண்டும். துப்புரவு மற்றும் தூய்மைக்குப் பின்னணியில் பிரதம மந்திரி தனது அரசியல் தகுதியை முன்னிறுத்த முடிவெடுத்துள்ளார். மேலும் இவற்றை தேசிய முன்னுரிமைக்கான அம்சங்களாக போன்ற செயல்திட்டங்களில் இருந்து வேறுபட்டதாக நிர்ணயம் செய்வதற்கான மிகப் பெரும் காரணியாக இது உள்ளது.

2014ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதியில் இருந்து 7.1 கோடிக்கும் அதிகமாக தனிநபர் வீட்டுக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. அதாவது வசதியானது அதிகமான அளவில் உள்ளது. 3.6 இலட்சத்திற்கும் அதிகமான கிராமங்கள், 382 மாவட்டங்கள், 13 மாநிலங்கள் (அருணாச்சலப் பிரதேசம், சட்டீஸ்கர், குஜராத், அரியானா, இமாச்சலப்பிரதேசம், கேரளா, மகாராஷ்டிரா, மேகாலயா, மிசோராம், பஞ்சாப், இராஜஸ்தான், சிக்கிம் மற்றும்

உத்தராகண்ட்), நான்கு யூனியன் பிரதேசங்கள் (அந்தமான், நிக்கோபார் தீவுகள், சண்டிகர், டாமன் - டையூ மற்றும் தாத்ராநகர் ஹவேலி) ஆகியன திறந்த வெளியில் மலம் கழிக்காத பகுதிகளாக மாறியுள்ளன. திறந்த வெளியில் மலம் கழிக்காத இந்தியா என்ற இலக்கை அடைவதற்கான பயணத்தில் ஊரக இந்தியா குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இணைந்தாக வேண்டும். அதாவது 2019ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதிக்குள் தூய்மை இந்தியா என்ற தீர்மானமான காலக்கெடுவுக்குள் இலக்கு எட்டப்பட்டாகவேண்டும்.

உந்துதலையும் உத்வேகத்தையும் ஏற்படுத்துவதன் மூலம் உண்டாகும் வளர்ச்சியானது, தூய்மை இந்தியா - கிராமம் திட்டம் தளராமல் பீடுநடை போட்டு முன்னேற வழிவகுத்துள்ளது. கடந்த ஆண்டுகளில், முந்தைய திட்டங்களில் இருந்து தூய்மை இந்தியா திட்டத்தை தனித்துக் காட்டுவதாக இயக்கத்தின் சில கூறுகள் இருந்தன. மேலும் மாற்றத்தை உருவாக்கும் பாதையில் இக்கூறுகளே இந்தத் திட்டத்தைக் கொண்டுசெல்கின்றன. தெளிவாகக் கூற வேண்டுமென்றால் அதிகாரத்தின் உச்சநிலையில் உள்ளவரின் ஆதரவு தொடர்ந்து இந்தத்திட்டத்திற்கு இருப்பதால், மாற்றம்வேண்டும் என்ற உந்துதல் ஏற்படுகிறது. இது குறித்து முதன்மைப் பிரச்சாரம் செய்பவராக பிரதம மந்திரியே இருக்கிறார். அனைத்து தரப்பினரையும் ஈடுபடுத்தி துப்புரவு குறித்த உரையாடலை அவரே உருவாக்குகிறார். மேலும் இது ஒவ்வொருவரின் கடமை என்றும் வலியுறுத்துகிறார்.

ஒவ்வொருவரையும் சென்றடைதல், எல்லா இடத்தையும் சென்றடைதல் என்ற முறையில் வடிவமைப்புச் செயலிலேயே அளவுகோல் முறையை உள்ளடக்கிய புத்தாக்க நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்தின் பங்குதாரர்கள் அனைவருடனும் இணைந்து திட்டத்தைச் செயல்படுத்துபவர்களுக்கு தொடர்ச்சியாக ஆணைகள் வழங்குவதும் அவர்களை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்துவதும் இயக்கத்தின் முக்கியமான செயல்களாக உள்ளன. அப்படிச் செய்தால்தான் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்கள் உத்வேகத்தையும் உந்துதலையும் குறையாமல் பார்த்துக்கொள்வார்கள். அப்போதுதான் அனைத்து நிலைகளிலும் ஒரே வகையான தகவல் தொடர்பு செயல்பாடுகள் மேற்கொள்வதும் சாத்தியமாகும்.



உத்வேகம் உருவாக்கப்படுவதுடன் நாளுக்கு நாள் மக்களின் பங்கேற்பும் (ஜன் அந்தோலான்) வலுப்பட்டுவருகிறது. இந்த நிலையில் அமைச்சகம் நிறைவேற்ற வேண்டிய முக்கியமான பணி எதுவெனில் தரமான மற்றும் சிறப்பான வீட்டுப் பராமரிப்பு நடைமுறைகளை உறுதி செய்வதே ஆகும். இதற்காக அமைச்சகம் தூய்மை இந்தியா இயக்கத்துக்காக (ஊரகம்) ஒரு விரிவான மற்றும் முழுமையான ஆன்லைன் தளத்தை உருவாக்கி உள்ளது. 2012-13ஆம் ஆண்டில் அடிப்படை நிலை சர்வே மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தகவல்களை மாநிலங்கள் வழங்கியுள்ளன. இந்த

கணக்கெடுப்புகளைப் பயன்படுத்தி நாட்டின் அனைத்து கிராமங்களிலும் உள்ள துப்புரவு வசதிகள் குறித்த தனிநபர் வீட்டு அளவிலான தரவுகள், மேனேஜ்மென்ட் இன்ஃபர்மேஷன் சிஸ்டத்தில் (MIS) கிடைக்கும் வகையில் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை மேம்படுத்தும் வகையில் அமைச்சகம் மூன்றாம் தரப்பு முகமைகளைப் பயன்படுத்தி மிகப்பெரிய தேசிய மாதிரி அடிப்படையிலான சர்வேக்கள் மூலம் ஊரகத் துப்புரவு குறித்த தகவல் தொகுப்பை மேற்கொண்டுள்ளது. 2013இல் மே மாதம் முதல் ஜூன் மாதம் வரை இந்திய தரக் கவுன்சில் ஒரு சர்வேயை நடத்தியது. நாடு முழுவதும் தற்செயல் தேர்ந்தெடுப்பு மூலம் 4626 கிராமங்களில் 1.4 இலட்சம் வீடுகளில் இந்த சர்வே நடத்தப்பட்டது. இதில் 91.29 சதவிகித கழிப்பறை பயன்பாடு உள்ளது என சர்வே எடுத்துக்காட்டியுள்ளது.

தூய்மை இந்தியா இயக்கத்திற்கான உலக வங்கியின் செயல்திட்ட உதவியின் கீழ் மிக சமீபத்தில் தேசிய வருடாந்திர ஊரகத் துப்புரவு கணக்கெடுப்பு -(SSNRASS) 2017-18 மேற்கொள்ளப்பட்டது. 6,136 கிராமங்களில் 92,000 வீடுகள் மாதிரியாக எடுத்துக் கொள்ளப்பட்டு இந்த கணக்கெடுப்பு செய்யப்பட்டது. தனிப்பட்ட சரிபார்க்கும் முகமை (GVAGVA) தங்களது கண்டுபிடிப்புகளை தேசிய வருடாந்திர ஊரகத் துப்புரவு கணக்கெடுப்பை மேற்பார்வை செய்வதற்காக அமைக்கப்பட்ட நிபுணர் பணிக்குழுவிற்கு (EWG) அளித்துள்ளது. இந்தக் குழுவில் உலகவங்கி, யுனிசெஃப், வாட்டர் எய்ட், பில் - மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளை, இந்தியா சானிட்டேஷன் கோயாலிஷன், சுலப் இண்டர்நேஷனல், நாலெட்ஜ் லிங்க், நிதி ஆயோக், புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர். இந்த நிபுணர் பணிக்குழு கணக்கெடுப்பு திருப்திகரமான அளவில் நிறைவுற்றுள்ளது என்பதை கவனத்தில் கொண்டுள்ளது. இது கழிப்பறை பயன்பாடு 93.40 சதவிகிதம் எனத் தெரிவித்துள்ளது. திறந்தவெளியில் மலம் கழிக்காத கிராமங்களில் சரிபார்ப்பை மேற்கொண்டு திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலை 95.6% என உறுதிப்படுத்தியுள்ளது.

தூய்மை இந்தியா இயக்கத்தின் (கிராமம்) விளைவுகளுக்கான குறிகாட்டியாக கழிப்பறைப் பயன்பாடும், திறந்த வெளியில் மலம் கழிக்கும் செயலைக் கட்டுப்படுத்துவதும் இருக்கின்றன. ஒரு கிராம் எடை அளவிலான மலத்தில் 10,000,000 வைரஸ்கள், 1,000,000 பாக்டீரியாக்கள் மற்றும் 1,000 ஒட்டுண்ணி முட்டைகள் உள்ளன. ஒரு கிராமம் முழுவதும் திறந்தவெளியில் மலம் கழிக்காத நிலையை அடையாவிட்டால், மலத்தில் உள்ள கிருமிகள் வாய்வழியாக உடலுக்குள் சென்றுகலக்கும் நிலைமை தொடரத்தான் செய்யும். எனவே ஆரோக்கியமான எதிர்காலத்திற்கான பாதை என்பது தனிநபர் சார்ந்தது அல்ல. சமுதாயமே சேர்ந்து இணைந்து பணியாற்றி புதிய பழக்க வழக்கங்களை உருவாக்கியாக வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளில் தூய்மை இந்தியா இயக்கம் ஏற்கனவே குறிப்பிடத்தக்க ஆரோக்கியம் மற்றும் பொருளாதாரத் தாக்கங்களை அடிமட்டத்தில் ஏற்படுத்தியுள்ளன. "இந்தியாவில் தூய்மை இந்தியா இயக்கம் ஏற்படுத்திய நிதி மற்றும் பொருளாதாரத் தாக்கம் (2017)" என்ற அறிக்கையில், யுனிசெஃப் நிறுவனமானது ஊரக இந்தியாவில் திறந்த வெளியில் மலம் கழிக்காத கிராமத்தில் உள்ள ஒரு வீடு ஒவ்வொரு ஆண்டும் ரூ.50,000 சேமிப்பதாக கணக்கிட்டுள்ளது. பில் - மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளை (BMGF) வெளியிட்டுள்ள மற்றொரு ஆய்வின் தரவுகள் வயிற்றுப்போக்கு ஏற்படுவதைக் கட்டுப்படுத்துவதிலும், வயதிற்கேற்ற உயரம் இல்லாமல் குழந்தைகள் குள்ளமாக இருப்பதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என சுட்டிக்காட்டுகின்றன. அதாவது வேறு மாற்றங்கள் ஏதும் இல்லாத நிலையில் திறந்த வெளியில் மலம் கழிக்கும் கிராமத்தோடு ஒப்பிட திறந்தவெளியில் மலம் கழிக்காத கிராமங்களில் இந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

மக்கள் பங்கேற்பை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த இயக்கத்தால், கிராமங்கள் திறந்த வெளியில் மலம் கழிப்பவர்கள் இல்லாத கிராமங்களாக அறிவிக்கப்படுகின்றன. கிராம மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மக்கள் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றவேண்டும். கிராம மக்கள் பிறகு "நிக்ரானி சமிதி" களை உருவாக்கவேண்டும். இது கழிப்பறையைப் பயன்படுத்துவேன் என்று புதிய விதியில் இருந்து எவரும் மாறுபடாமல் இருப்பதை உறுதி செய்கின்றது . பிறகு வட்டார, மாவட்ட மற்றும் மாநில நிலையில் மூன்றாம் தரப்பினர் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத தகுதி நிலையை சரிபார்க்கின்றனர். மிக விரிவான தரவுத்தளத்தில் அனைத்து தரவுகளும் தனிநபர் வீடு என்ற நிலைவரை பராமரிக்கப் படுகின்றன. தூய்மை இந்தியா (கிராமம்) வலைத்தளத்தில் இந்தத் தரவுகள் பொதுமக்களின் பார்வைக்குக் கிடைக்கும்.

தூய்மை இந்தியா (கிராமம்) திட்டத்தின் மற்றொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை ஆகும். பொருளாதார ரீதியிலும் திறன்மிக்க செயல்பாட்டு அடிப்படையிலும் திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மையின் பூர்வாங்க நடவடிக்கைகளை அமல்படுத்த, அடிமட்ட நிலையில் சொத்துரிமையும் அனைத்து நிலைகளிலும் சமுதாயத்தாரின் ஈடுபாடும் மிகவும் முக்கியமானவை ஆகும். இது தொடர்பான ஒரு பூர்வாங்க நடவடிக்கை என்பது சுயமதிப்பீட்டுக்கான விரிவான உபகரணமான கிராமத் தூய்மைக் குறியீட்டு எண் என்பதை உருவாக்கிப் பயன்படுத்தச் சொல்லி இருப்பதேயாகும். சுத்தத்தை மதிப்பிட்டு அளவிடுவதற்காக இந்தக் குறியீட்டு எண் உருவாக்கப்பட்டுள்ளது. எத்தனை சதவிகித வீடுகளில் பாதுகாப்பான கழிப்பறையைப் பயன்படுத்துகிறார்கள், வீடுகளைச் சுற்றிலும், பொது இடங்களிலும் குப்பைகள் உள்ளனவா, வீட்டைச் சுற்றி தண்ணீர் தேங்கி உள்ளதா என இந்தக் கேள்விகளை மையமாகக் கொண்டு பெறப்படும் தூய்மைக்கான மதிப்பெண்களாக கிராமத் தூய்மைக் குறியீட்டு எண் தரப்படுகிறது. கிராமசபைக் கூட்டங்களில் கிராம மக்கள் தாங்களாகவே ஜனநாயக ரீதியில் சுயமதிப்பீட்டைச் செய்கிறார்கள். ஏப்ரல் 2018 வரையில் 4இலட்சத்திற்கும் கூடுதலான கிராமங்கள் தங்களது கிராமத் தூய்மைக் குறியீட்டு எண் அளவுகளை அறிக்கையாகத் தந்துள்ளன.

துப்புரவு இடையீட்டு நடவடிக்கைகளில் சமுதாயம் தனது சொந்த மூலவளங்களை (குறிப்பாக நிதி சார்ந்த மூலவளங்கள்) முதலீடு செய்யும்போது, அத்தகைய நடவடிக்கைகள் மிக நீண்டகாலம் நீடித்து நிலைத்து இருக்கவேண்டும் என்பது பலமுறை திரும்பத் திரும்ப கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. கழிப்பறை என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டால், தூய்மை இந்தியா இயக்கம் கழிப்பறையைக் கட்டுதல் என்பதையும் தாண்டி நடத்தை மாற்றத்துக்கான அடித்தளத்தை உருவாக்க முனைகிறது. இந்த நடத்தை மாற்றம் என்பது குறித்து தனது தூய்மை இந்தியா திட்டம் (கிராமம்) பற்றிய பேச்சுகளில் பிரதம மந்திரி தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றார். 2016ஆம் ஆண்டு பிரதமர் தனது உரையில் "சுத்தம் என்பதை பட்ஜெட் ஒதுக்கீட்டால் மட்டுமே அடையமுடியாது. நடத்தை மாற்றம்தான் இதற்கான தீர்வு ஆகும். இது மக்கள் பங்கேற்பு இயக்கமாக மாறவேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் தூய்மைக்கான கனவின் உள்ளார்ந்த அம்சமாக நடத்தை மாற்றம் இருக்கும். அதே வேளையில் அதுவே மிகப்பெரும் சவாலாகவும் தொடர்ந்து வருகிறது. மிகப்பெரிய அளவில் நடத்தை மாற்றம் ஏற்படுத்துவது குறித்துப் பேசும்போது, இந்தியாவின் பன்முகத்தன்மை, சிக்கல் மற்றும் வித்தியாசம் ஆகியன குறித்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த இயக்கத்தின் கீழ் புத்தாக்கமான பல செயல்திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு நடைமுறைகள் மிகச் சிறப்பாக இருக்கும் என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அதில் ஒன்று முன்தூண்டுதல். நடத்தை மாற்றத்தைத் தூண்டிவிடுவதன் மூலம் கிடைக்கும் வெற்றி என்பது முன்தூண்டுதல் மூலமாக



மேற்கொள்ளப்படும். கிராமம் குறித்த தகவல்களைத் திரட்டுதல், அக்கிராமத்தில் வசிப்பவர்கள் குறித்த தகவல்களைத் திரட்டுதல் ஆகியவையும் இதில் அடங்கும். மேலும் கிராமத்தில் வசிக்கும் மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளுதல், அதிகாரிகளைத் தயார்செய்தல், தூண்டுதலுக்காக கிராமத்தைத் தயார்செய்தல் ஆகியனவும் இதில் அடங்கும். ஊரகத் துப்புரவு தொடர்பான சமுதாய அணுகுமுறையில் சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் உதவும் வகையில் தூண்டுதல் செய்யப்படவேண்டும். நாங்கள் ஒரு சமுதாயத்தை ஒரு அலகாக எடுத்துக்கொள்கின்றோம். அப்போதுதான் கிராமங்கள் இதன் முக்கியத்துவத்தை உணரும். தங்களது கிராமங்களின் பொறுப்புக்கும் பொறுப்புடைமைக்கும் அவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

இந்த "தூண்டுதல்கள்" தூய்மை இந்தியா - கிராமம் திட்டத்தின் ஸ்வச்கிரஹிகள் எனப்படும் அடிமட்டப் படையினர் மேற்கொண்ட பல முன்னோடி நடவடிக்கைகளில் ஒன்றாகும். ஸ்வச்கிரஹிகள் என்பவர்கள் சமுதாய அளவிலான அடிமட்ட வீரர்கள் மற்றும் ஊக்குநர்கள் ஆவர். இவர்கள்தான் துப்புரவுக்கான சமுதாய அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்துகின்றனர். திறந்த வெளியில் மலம் கழிக்காத நாட்டை உருவாக்கும் பணியில் முன்னேறிச் செல்ல இவர்களே முக்கியமானவர்களாக உள்ளனர்.

ஸ்வச்கிரஹிகள் என்பவர்கள் பொதுவான, இயல்பான தலைவர்கள் ஆவர். அதாவது ஏற்கனவே இருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகள், பஞ்சாயத்து ராஜ், சமுதாயம் சார்ந்த தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படும் தலைவர்கள், ஆஷா, அங்கன்வாடி பணியாளர்கள், மகளிர் குழுவினர், சுயஉதவிக்குழுவினர் ஆகியோர் ஸ்வச்கிரஹிகளாகச் செயல்படுகின்றனர். இவர்கள் ஏற்கனவே கிராமப் பஞ்சாயத்தில் பணிபுரிபவர்கள். இவர்களில் சிலர் ஏற்கனவே துப்புரவுப் பணிகளில் தன்னார்வமாக ஈடுபட்டு இருப்பவர்கள். இன்றைய தேதியில் 4.3இலட்சம் ஸ்வச்கிரஹிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஸ்வச்கிரஹியாவது இருக்க வேண்டும் என்பதே இயக்கத்தின் நோக்கமாகும். அதாவது மார்ச் 2019க்குள் நாடு முழுவதும்

குறைந்தது 6.5 இலட்சம் ஸ்வச்கிரஹிகள் கொண்ட படையை உருவாக்கிவிட வேண்டும்.

மக்கள் பங்கேற்பை மிகப்பெரும் அளவில் தொடர்ந்து பராமரிக்க அமைச்சகமானது முயற்சி செய்து வருகின்றது. அதன் ஒரு நடவடிக்கையாக முன் எப்போதும் இல்லாத வகையில் ஏப்ரல் 2018இல் ஸ்வச்கிரஹிகளுக்கான மாபெரும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, ஏப்ரல் 10, 1917இல் மகாத்மா காந்தி சம்பாரண் சத்யாகிரகம் என்பதைத் தொடங்கினார். அடிப்படைக்கல்வி, திறன் மேம்பாடு, மகளிருக்கு அதிகாரம் அளித்தல், தூய்மை ஆகியவை உள்ளிட்ட பீகார் மக்களின் நிலைமையை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக சம்பாரண் சத்யாகிரகம் தொடங்கப்பட்டது. சம்பாரண் சத்யாகிரகத்தின் நூற்றாண்டு விழா நிறைவு ஏப்ரல் 10, 2018இல் நடந்தது. இது ‘‘சத்யாகிரகம் சே ஸ்வச்கிரகம்‘‘ என்ற பிரச்சார முகாமாக நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் நினைவாக குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகமானது பீகார் அரசுடன் சேர்ந்து ஏப்ரல் 3ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை நாடு முழுவதும் தூய்மை என்ற செய்தியைப் பரப்ப ‘‘சத்யாகிரகம் சே ஸ்வச்கிரகம்’’ என்ற பிரச்சார முகாமை நடத்தியது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 10,000க்கும் அதிகமான ஸ்வச்கிரஹிகள் பீகாரில் ஒன்று கூடினர். ஏற்கனவே அங்கு இருந்த 10,000 ஸ்வச்கிரஹிகளுடன் இவர்களும் ஒன்று சேர்ந்து மாநிலத்தில் உள்ள 38 மாவட்டங்கள் முழுவதிலும் நடத்தை மாற்றத்தைத் "தூண்ட" பணி ஆற்றினர். மக்கள் பங்கேற்பை மேலும் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்கான உந்துதலை இவர்கள் உருவாக்கினார்கள்.

இந்தப் பெருவாரியான தூண்டுதல் மிகப்பெரும் கிளர்ச்சியுடனும் உற்சாகத்துடனும் தொடங்கியது. பீகாரின் கிராமங்களில், வெளிமாநிலங்களில் இருந்து வந்த ஸ்வச்கிரஹிகளின் துப்புரவு, விழிப்புணர்ச்சி செய்திகளை அக்கறையுடன் கவனித்து உள்வாங்க உதவியது. வெளிமாநிலத்தில் இருந்து வந்திருந்த ஸ்வச்கிரஹிகள் தங்களுக்கு இருந்த மொழி தெரியாத பிரச்சினையை உள்ளூர் ஸ்வச்கிரஹிகள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களின் உதவிகள் மூலம் சமாளித்தனர். ஸ்வச்கிரஹிகளின் இடையீடு அதிக அளவில் பயன் அளிப்பதாக இருந்தது என நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு குழுக்களிடம் ஆரோக்கியமான போட்டியையும் இது வளர்த்தது. அதனோடு ஒருவருக்கு ஒருவர் கற்றுக்கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டது.

அதாவது பீகார், உத்திரப்பிரதேசம், ஒடிசா, ஜம்மு - காஷ்மீர் ஆகிய சவால் மிகுந்த நான்கு மாநிலங்களில் மாநிலங்களில் 13 மார்ச் 2018 முதல் 10 ஏப்ரல் 2018 வரை கூடுதலாக 30.91 இலட்சம் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. இதில் ஏப்ரல் மாதம் 4ஆம் தேதி முதல் 10ஆம் தேதி வரை மட்டுமே 14.82 இலட்சம் கழிப்பறைகள் கட்டப்பட்டன.

இந்த ஒட்டுமொத்த நடைமுறையிலும் ஒற்றுமை என்ற உணர்வானது இந்தியாவை திறந்த வெளியில் மலம் கழிக்காத நாடாக மாற்றவேண்டும் என்ற சமுதாயத்தினரின் வலுவான உணர்வை மேலும் வலுப்படுத்தவதாக அமைந்தது. தூய்மை இந்தியா இயக்கத்தினரின் மொத்த சாராம்சத்தையும் மீண்டும் வலியுறுத்தும் ஒரு நடவடிக்கையாக இது அமைந்துவிட்டது மட்டுமல்லாமல் மக்கள் பங்கேற்பின் உண்மையான சக்தியையும் பிரதிபலித்தது. அனைவருக்கும் துப்புரவு வசதிகள் கிடைக்கச் செய்வதை மேம்படுத்துதல், ஐக்கியநாடுகள் சபையின் நீடித்த வளர்ச்சி இலக்கு 6ஐ தீவிரமான இயக்க நடவடிக்கையில் அடைதல், அனைவருக்கும் தண்ணீரும் துப்புரவு வசதியும் கிடைக்கச்செய்தல், அவற்றை நீடித்த, நிலையான முறையில் மேலாண்மை செய்தல் ஆகிய அம்சங்களில் உலகின் பிற பகுதிகளுக்கு இந்தியாவை ஒரு முன்மாதிரியாக எடுத்துக்காட்டவும் இந்த தூய்மை இந்தியா இயக்கம் முயல்கிறது.

---

- **பரமேஸ்வரன் ஐயர்,** செயலாளர், குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம், இந்திய அரசு, புதுதில்லி

●

# சித்தர் யோகம்

- டாக்டர்.ஆர்.எஸ்.ராமசாமி

**அறிமுகம்:**

யோகம் என்பதற்கு ஐக்கியம் என்று பொருள். ஜீவஆன்மா (தனி நபர் உணர்வு நிலை) பரமான்மாவுடன் (இயற்கை முழுவதையும் அளாவிய உணர்வு நிலை) இணைவதே மனிதப்பிறப்பின் இறுதி இலக்கு. ஐம்புலன்களை அடக்குவதன் மூலம் ஒற்றைப் பொருள் மீது கவனத்தைக் குவித்து, முடிவை சாதிப்பதற்கு மனதை ஒருமுகப்படுத்துவதை இயலச் செய்வதற்கு யோகம் என்று பெயர். யோகத்தை திருமூலர் எனும் சித்தர் திருமந்திரத்தில் விரிவாகக் கையாண்டிருக்கிறார். இந்தக் கட்டுரை யோகம் பற்றி திருமூலர் போன்ற சித்தர்களின் முக்கியமான பார்வைகளை விளக்குகிறது. யோகம் சித்த மருத்துவத்தின் ஒரு பகுதியாகும்.

சித்தர் திருமூலரின் திருமந்திரம், சித்த மருந்துகளைப் பின்வருமாறு வரைமுறை செய்கிறது.

**மறுப்பதுடல் நோய் மருந்தெனலாகும்**
**மறுப்பதுள நோய் மருந்தெனலாகும்**
**மறுப்பதினி நோய் வாராதிருக்க**
**மறுப்பது சாவை மருந்தெனலாமே**

பிற மருத்துவ முறைகளைப் போலன்றி, சித்த மருத்துவம் உடல், மனம் தொடர்பான நோய்களைத் தீர்ப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டிராமல் அகத்தூய்மையின் மூலம் சித்தியை அடையச்செய்து ஆன்மாவின் நோயையும் தீர்க்க முனைகிறது. மேற்கண்ட பாடலின் இறுதி அடி சித்தா ஆன்ம நலத்திற்குமானது என்பதைச் சுட்டுகிறது. நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு யோகத்தைக் கடைபிடிப்பதை திருமூலர் வலியுறுத்துகிறார். திருமூலரின் கூற்றுப்படி, யோகத்திற்கு எட்டு அங்கங்கள் உள்ளன. அதனால் தான் யோகத்தை அவர் அட்டாங்க யோகம் என்று அழைக்கிறார்.

**இயம நியமமே எண்ணிலா ஆதனம்**
**நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரம்**
**சயமிகு தாரணை தியானம் சமாதி**
**அயமுறும் அட்டாங்கம் ஆவது மாமே**

என்பது திருமூலர் பாடல்

**அட்டாங்க யோகம்:**

இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு உறுப்புக்களை உடையது அட்டாங்க யோகம் . காயகல்பம் (இளமையை மீட்கும் சிகிச்சை முறை) ஒரு முக்கியமான சிகிச்சை முறையாகும். இது ''கல்ப அவிழ்தம்', 'கல்பயோகம்' என்று சித்த மருத்துவ முறையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. வரும் முன் காக்கும் மருந்துகள், வந்தபின் குணமாக்கும் மருந்துகள் ஆகிய இரண்டைப்பற்றியும் பேசுவது 'கல்பாவிழ்தம்' ஆகும். 'கல்பயோகம்' என்பது உடல், மனம், ஆன்மா இவை மூன்றையும் நீண்ட காலம் ஆரோக்கியமாக வைத்திருக்கக்கூடிய யோக நுட்பங்களைப் பற்றியது. திருமூலரின் கூற்றுப்படி யோகத்தின் முதல் பகுதி இயமம் ஆகும். மிக முக்கியமான இறுதிப்பகுதி மனிதப் பிறப்பின் உண்மையான இலக்கான 'சமாதி' என்பதாகும்.

**இயமம் (செய்யத்தகாதவை):**

காமம், கோபம், பொறாமை, தற்பெருமை ஆகிய அழுக்குகள் இல்லாத தூய்மையான மனநிலையைப் பெறுவதற்கு இந்த இயமப் பயிற்சி இட்டுச்செல்லும். இத்தகைய அழுக்குகள் இல்லாத மனம் நோய்களில் இருந்து விடுதலை பெற்று இருக்கும்.

**நியமம் (செய்ய வேண்டியவை):**

தூங்கி அதிகாலையில் எழுவது முதற்கொண்டு இரவில் படுக்கைக்குப் போகும் வரையிலும் ஒருவர் மேற்கொள்ளும் அன்றாட



நடவடிக்கைகள் ஆரோக்கியமான நிலைமைக்கு ஒருவரை இட்டுச் செல்லும் பயிற்சி ஆகும். செயல்களில் தூய்மையைக் கடைபிடிப்பது நியமம் ஆகும். ஒருவரின் செயல் பரப்பில் ஆரோக்கியமான சூழ்நிலையை நியமம் உறுதிப்படுத்துகிறது.

**ஆதனம் (இருக்கை நிலைகள்) :**

உடலை, ஒரு குறிப்பிட்ட அமைவு நிலையில் ஒரு குறிப்பிட கால அளவுக்கு அசைவின்றி, நிலை கொள்ள வைத்திருப்பதற்கான பயிற்சி ஆதனமாகும். திருமூலரின் கருத்துப்படி இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான அங்கஸ்திதிகள் எனப்படும் அமைவு நிலைகள் இருக்கின்றன. ஆதனப் பயிற்சி பல நோய்களைத் தடுக்கிறது. ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. மறு நிவாரணத்தையும் இது அளிக்கிறது. நமது சக்தியை செலவழிக்கும் நிலையை ஏற்படுத்தும் உடல் பயிற்சிகளைப் போல் அல்லாமல், ஆற்றலை குறிப்பாக உயிர்காந்த ஆற்றலை ஆதனம் வருவிக்கிறது. வெளிப்புற உடலமைப்புகள், தன் விருப்பத்தில் செயல்படுகிற தசைகளை மட்டுமின்றி, உள்ளுறுப்புகளை (குறிப்பாக இதயம், நுரையீரல், வயிறு, கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள், கருப்பை) தூண்டி அவற்றின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்துகிறது. நாளங்களின் சுரப்பு, உணவு செரிமானம், கழிவுகளின் வெளியேற்றம் ஆகியவற்றையும் ஒழுங்குபடுத்தி சீரான இரத்த ஓட்டம், காற்றோட்டம், உடல் சூடு ஆகியவற்றையும் பராமரிக்கிறது.

வாழ்நாளை அதிகரிக்கிற நாளமில்லா சுரப்பிகளின் சுரப்புகளைத் தூண்டி அவற்றின் செயலை முறைப்படுத்துகிறது.

நோய்களைத் தடுப்பதிலும், குணப்படுத்துவதிலும் முதன்மையான சிகிச்சை முறையாகவோ, துணை சிகிச்சை முறையாகவோ ஆதனம் அமைகிறது. ஆதனம் செய்யும் போது இரத்தக் குழாய்கள், நரம்புகள், தசைகள் ஆகியவை கடுமையான உடற்பயிற்சி செய்வதைப்போன்று விரைப்படையாமல் மென்மையாகவும், நெகிழ்ச்சித்தன்மையுடனும் மாறுகின்றன.

**பிராணாயாமம் (மூச்சுப் பயிற்சி):**

மூச்சினைக் கட்டுப்படுத்தும் பயிற்சியே பிராணாயாமம் ஆகும். உடல் செல்களுக்கு, குறிப்பாக



நரம்பு மண்டலத்திற்கு சக்தி வழங்கும் எண்ணற்ற மூச்சுப்பயிற்சிகளை இது குறிக்கிறது. எண்ணிக்கையின் அடிப்படையில் ஒருவரின் சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறை என்று பிராணாயாமத்தை திருமூலர் குறிப்பிடுகிறார். பிரணாயமப் பயிற்சி எமனை விலகி நிற்கச் செய்யும். வருமுன் காப்பது, குணப்படுத்துவது, இளமை உணர்வைக் கொடுப்பது ஆகியவற்றையும் பிராணாயாமம் செய்யும். நுரையீரலின் திறனை அதிகரித்து உடல் செல்களுக்கு போதுமான ஆக்ஸிஜன் கிடைப்பதை இது உறுதி செய்கிறது. இதற்கு வசியோகம் என்று பெயர். திருமூலர் பூரகத்தின் (சுவாசத்தை உள்ளிழுத்தல்) கால அளவையும் குறிப்பிடுகிறார். கும்பகம் (மூச்சை தேக்கி வைத்திருத்தல் அல்லது மூச்சை உள்ளிழுத்தல், மூச்சை வெளிவிடல் இரண்டுக்கும் இடையே தாமதம்), இரேசகம் (மூச்சை வெளிவிடுதல்). இவற்றிற்கு முறையே 16 மாத்திரை, 64 மாத்திரை, 32 மாத்திரை கால அளவுகள்.

### பிரத்தியாகாரம் (உடலுள் பார்ப்பது):

நாக்கு, கண், தோல், காது, மூக்கு ஆகிய உறுப்புகளால் உணரப்படும் சுவைத்தல், பார்த்தல், தொடுதல், கேட்டல், நுகர்தல் ஆகிய ஐம்புலன்களின் செய்கைகளையும் கட்டுப்படுத்தும் பயிற்சி. ஐம்புல உணர்ச்சிகள், ஐம்புலன்கள் இவை இரண்டுக்கும் இடையே தொடர்பை ஞானேந்திரியங்கள் உண்டாக்குகின்றன.

சித்தர்கள் வழிமுறையின்படி பஞ்சபூதங்கள் எனப்படும் ஐந்து கூறுகள் பேரண்டத்தையும், மனிதனையும் உருவாக்கியுள்ளன. அவையாவன: மண், நீர், தீ, வளி/காற்று, வெளி. ஐம்பொறிகளாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி. ஐம்புல நுகர்வுகள்: சுவை, ஒளி (பார்வை), ஊறு (தொடு உணர்வு), ஓசை (கேட்டல்), நாற்றம் (நுகர்தல்). பஞ்சபூதங்கள் புலன்களோடு இவ்வகையில் தொடர்பு கொண்டுள்ளன: சுவை தண்ணீர், ஒளி (தீ), ஊறு (காற்று), ஓசை ( வெளி), நாற்றம் (பூமி) மனிதனுக்கு ஆறாவது அறிவு ஒன்றும் உள்ளது. தமிழ் இலக்கண இலக்கியங்களில் தொன்மையான தொல்காப்பியம் ‘மாவும் மாக்களும் ஐயறிவினவே, மக்கள்தாமே ஆறறிவுயிரே’ என்று குறிப்பிடுகிறது. சிந்திக்கும் ஆற்றலில் மனிதன் பிற விலங்குகளிலிருந்து வேறுபடுகிறான். மேம்பட்ட நிலையில் இருக்கிறான் என்பது இதன் பொருள். இதன் துணை கொண்டு மனிதன் பாவங்கள் செய்வதைத் தவிர்த்து ஒழுக்கமான வாழ்க்கை வாழமுடியும். இதன் மூலம் அவன் மனிதப்பிறப்பின் உண்மையான முடிவான வீடுபேறு அடைய முடியும்.

### திருவள்ளுவர் கூறுகிறார்:

புலன்களை அடக்குவது பற்றி திருவள்ளுவர் இப்படிக் கூறுகிறார்:

**சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு.**

ஐம்புலன்களை முறையாக பயன்படுத்துவோரின் அறிவாற்றலால்தான் இவ்வுலகம் இயங்குகிறது என்பது இதன் பொருள்.

### பத்திரகிரியார் என்ற சித்தர் கூறுகிறார்:

## ஆங்காரம்

நான் எனும் அகந்தையை வெல்லுங்கள். உங்கள் ஐம்பொறிகளையும் அடக்கி தன்னை உணரும் நிலை வரை தியானத்தில் ஈடுபடுங்கள்.

புலன் உணர்வும், இன்பம் அனுபவித்தலும் உயிர் ஆற்றலை செலவழிக்கிறது. எனவே, இவை இயல்பான நிலையில் கட்டுக்குள் இருக்கவேண்டும். புலன் இன்பங்களில் அதிக அளவில் நாட்டம் கொள்வதும், ஈடுபடுவதும் உயிர் ஆற்றலை உறிஞ்சிவிடும். சித்தர்கள் தங்களின் புலன்களை முற்றிலுமாகக் கட்டுப்படுத்தி தங்களின் உயிர் ஆற்றலை நீண்ட காலத்திற்கு பாதுகாத்து வைத்திருந்தனர். நீண்ட காலம் உயிர் வாழ்ந்தனர். தெய்வீகப் புனித அறிவைப் பெற்று பிறருக்கு சேவையும் செய்தனர்.

### தாரணை (பாவிக்கும் முறை):

மனதை நிலை நிறுத்துவதற்கும், ஒருமுகப்படுதுவதற்குமான பயிற்சி. தியானத்திற்கு இது முன் நிபந்தனை.

### தியானம் (மனதைக் குவித்து, ஒன்றின்மேல், இறைவன்மேல் நிறுத்துதல்):

முழுவதுமாக மனதைக் கட்டுப்படுத்தும் கலை. அது ஒன்றைத்தவிர்த்த பிற



சிந்தனைகள் அனைத்தையும் நிறுத்தி வைத்தல் என்று தியானத்தை வரையறுக்கலாம். யோகா நிபுணரின் வழிகாட்டுதலின் கீழ் சமமான தரையில், மென்மையான படுக்கை விரிப்பின் மீது அமர்ந்து சுகாசனம் அல்லது பத்மாசனம் செய்யலாம். தினமும் காலையிலும், மாலையிலும், இரவிலும் 20 முதல் 30 நிமிடங்களுக்கு தியானம் செய்யலாம். மன அழுத்தத்தினல் வரக்கூடிய நோய்களை இது தவிர்க்கும்.

தியானம் நம்மை நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது. சரியான உறக்கம் இல்லாதவர்களுக்கு ஆழ்ந்த உறக்கத்தைத் தருகிறது. மன வலிமையையும், உடல் வலிமையையும் அதிகரித்து பிரச்சினைகளை தைரியமாக எதிர்கொண்டு திறமையாக தீர்க்கும் வல்லமையைத் தருகிறது.

எந்த நேரமும் தியானம் செய்வதற்கு உகந்த நேரம் தான் என்றாலும், அதிகாலை நேரமான பிரம்ம முகூர்த்தமும், சூரியன் மறையும் நேரமும் மிகுந்த பயனளிக்கக் கூடிய சிறந்த நேரமாகக் கருதப்படுகிறது. ஒரு படுக்கை விரிப்பின் மேல் வடக்கு நோக்கியோ அல்லது கிழக்கு நோக்கியோ அமர்ந்துகொண்டு தியானம் செய்வது சிறந்தது.

**சமாதி (இறைவனோடு ஒன்றுதல்):**

யோகத்தின் இறுதிப்படியே சமாதி. சமம்+ஆதி அதாவது, கடவுளுக்கு நிகரான நிலையை அடைவது. பதி, பசு, பாசம் என்ற தத்துவத்தின் மூலம் ஆராயும் போது, சமாதி என்பது பசு எனப்படும் ஜீவான்மாவின் (தனி நபர் ஆன்மா) நிலையாகும். பாசம் எனப்படும் பொருள்கள் மீதான பந்தத்திலிருந்து விடுபட்டு பதி எனப்படும் பரமாத்மாவுடன் (பேரண்ட ஆன்மா) ஒன்றுபடும் நிலையே சமாதி.

சமாதி என்பதை சிந்தனை நீங்கிய சுய தியானம் என்றும் அழைக்கலாம். உடலுக்குள் ஐம்புலன்களோடு வசிக்கும் ஆன்மா அதிலிருந்து தனிப்பட்டு நின்று ஆசைகளற்ற ஆன்ம நிலையை அடைவதே சமாதி நிலை. ஒருவர் தன்னையும், தனது சூழ் நிலையையும் மறக்கும் உயர்வான நிலையாகும் இது. இந்த நிலை உணர்வு நிலை, உணர்ச்சி நிலை ஆகியவற்றிற்கு முற்றிலும் அப்பாற்பட்ட உயரிய நிலையாகும். சமாதி நிலை என்பது இதுதான்.

**ராஜ யோகம்:**

சித்தர்கள் ராஜயோகம் பற்றியும் விளக்கியுள்ளனர். மூலாதாரத்திலிருந்து ஆக்கினைக்கு குண்டலினி சக்தியை உயர்த்தி நிலைபேறுடைய பேரின்பத்தை அடைவது ராஜயோகம்.

**முடிவுரை:**

ஜூன் 21 ஆம் நாள் சர்வதேச யோகா தினத்தை கொண்டாடுவதன் மூலம் இந்தியா தனது ஆன்ம அறிவியலான யோகத்தை உலகிற்கு அளித்ததில் பெருமை கொள்கிறது. அமைதி,ஒத்திசைவு ஆகியவற்றை தனக்குள்ளும், வெளியிலும் நிலவச் செய்வதற்கு யோகா உதவும்.

- **டாக்டர்.ஆர்.எஸ்.ராமசாமி,** தலைமை இயக்குநர், சித்தமருத்துவ ஆராய்ச்சி மத்திய குழு, ஆயுஷ் அமைச்சகம், இந்திய அரசு.

●


# மின்னணுப் பரிமாற்றம் மூலம் மேம்பாடு

- அமிதாப் காந்த்

தொழில் நிறுவனங்கள் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதாகட்டும், சாதாரண மக்கள் அன்றாட செயல்பாடுகளை செய்வதாகட்டும், அரசுகள் குடிமக்களுக்கு சமூக சேவைகளை வழங்குவதாகட்டும் இவை அனைத்திலும் இன்றைய உலகு மின்னணு பரிமாற்றத்தில் வேகமாக வளர்ந்துவருகிறது. இப்போது அசுர வேகத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்பதிவுத்தகவல்கள், அவற்றை சேமித்து வைக்கும் செலவில் பெரும் சரிவு மற்றும் கணினி உள்கட்டமைப்பு வசதிகளின் விலை குறைவால் மின்பரிவர்த்தனைகள் வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ள இந்நிலைமையை நாம் இப்போது நான்காவது தொழில் புரட்சி என்று கூட கூறுகிறோம். மின்பதிவுப் பரிமாற்றத்தால் ஏற்படக்கூடிய பெரும் மாற்றத்தின் சாத்தியக்கூறுகளை மத்திய மாநில அரசுகள் நன்றாகவே புரிந்துகொண்டு இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளாக இந்திய ஆளுமையில் பெரும் மேம்பாடு ஏற்பட்டு அதற்கு வணிகச்செயல்பாடு மறுமுனைவு, தொழில்நுட்பம் மற்றும் தகவல் ஆய்வுகளைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளது. அரசுத்திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதில் தொழில்நுட்பம் வெகுவாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தத் தொழில்நுட்பப் பயன்பாட்டினால் சிறந்த செயல்பாட்டு முறைகளும் திறன்மிகு செயல்பாடுகளும், சிறந்த ஆளுமையும் உருவாகியுள்ளன.

அரசு, பல சிறிய, பெரிய வலைதளம்சார் ஆளுமை மற்றும் மின்னணு பரிமாற்றத் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. அவையெல்லாம் தற்போது “மின்னணுமய இந்தியா” என்ற திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இ-க்ராந்தி தேசிய வலைதளம்சார் ஆளுமை திட்டம் 2.0ன் கீழ் 31 முனைப்புத் திட்டங்களைத் துவக்கிய பின் “மொபைல் மற்றும் க்ளவுட்” செயல்முறைகளைப் பயன்படுத்தியபின் வலைதளம்சார் ஆளுமையை பெருமளவுக்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதன்படி, தற்போது அனைத்து வலைதளம்சார் அரசு செயல்பாடுகளும் “இ-க்ராந்தி” செயல்பாடு மூலமாகவே நடைபெறுகிறது. அதாவது, சாதாரண மாற்றம் அல்லாமல் முற்றிலும் மாற்றியமைத்தல், தனித்தனி சேவைகளாக இல்லாமல், ஒருங்கிணைந்த சேவைகள், அரசின் செயல்பாட்டில் புதிய வடிவமைப்பு ஆகியவை மேற்கொள்ளப்படும்.




தனித்துவம் வாய்ந்த பயோமெட்ரிக் பதிவுகள் மூலமாகவும் எல்லோரையும் உள்ளடக்கிய நிதி சேவைகள் மூலமாகவும் போலியானவர்கள் சமூகப்பாதுகாப்பையும், நலப்பயன்களையும் பெறுவதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். பயனாளிகளுக்கு நேரடியாக பணப்பரிமாற்றச் செயல்பாடு 437 திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு இதுவரை 83000கோடி ரூபாய் சேமிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் செயல்பாட்டால் 2.57கோடி போலி

மற்றும் தவறான ரேஷன் கார்டுகள் நீக்கப்பட்டுள்ளன, 3.85கோடி போலி மற்றும் பயன்படுத்தப்படாத சமையல் எரிவாயு மானிய பயன்பாட்டாளர்கள் விலக்கப்பட்டிருக்கிறார்கள்.

## எல்லோரையும் உள்ளடக்கிய நிதிநிலைமையில் இந்தியா முன்னணி

தற்போதைய நிலைமை முந்தைய அரசின் செயல்பாடுகளுக்கு முற்றிலும் எதிர்மறையானது. நான் முன்பு கேரளாவில் மீன்வளத்துறையில் பணி செய்தபோது எனது ஒரு முக்கிய பொறுப்பு பாரம்பரிய மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதாகும். அந்தத்துறையில் இடைத்தரகர்கள் மிகுந்து மீனவர்களுக்கு அவர்கள் பிடித்த மீன்களின் மதிப்பில் 25 சதவிகிதமே கிடைத்துவந்தது.

நாங்கள் அவர்களுக்கு சுயஉதவிக்குழுக்களை அமைத்து தொழில்நுட்பத்தையும் வழங்கினோம். ஃபைபர் கிளாஸ் படகுகள், மோட்டார் என்ஜின்கள், மீன்பிடிவலைகள் ஆகியவை மூலம் அவர்களுடைய உற்பத்தித்திறனைப் பெருக்கினோம். கடற்கரையிலேயே ஏலங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு அன்றாட வசூலை வங்கிக்கணக்கில் போட நினைத்தோம். ஆனால், பல முறை முயற்சி செய்தும் வங்கிக்கணக்குகளைத் துவக்க 10 மாதங்களாயிற்று. வாடிக்கையாளர்கள் சார்ந்த விவரங்கள் ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது.

சென்ற மாதம், நான் ஒரு வங்கிக் கிளைக்குச் சென்று பயோமெட்ரிக் முறையில் கையடக்க மின்னணு கருவியில் பதிவு செய்து ஒரு நிமிடத்திலேயே கணக்கைத் துவங்கினேன். முன்பு 10 மாதம் தேவைப்பட்ட நிலையில் இன்று ஒரு நிமிடத்தில் கணக்கைத் துவக்கமுடியும்.

ஜாம் என்றழைக்கப்படும் ஜன்தன், ஆதார் மற்றும் கைபேசி வங்கிச்செயல்பாடு பலவகையான மின்மயப்பரிமாற்றங்களுக்கு உதவுகிறது வாடிக்கையாளர் விவரங்கள், மின்கையெழுத்து, உடனடி பணப்பட்டுவாடா, ஃபைல்கள் சேமிப்பு ஆகியவற்றிற்கு அடித்தள உள்கட்டமைப்பு வசதியாக இது உருவாகி, எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையை ஏற்படுத்துகிறது. உலக வங்கி வெளியிட்டுள்ள க்ளோபல் ஃபின்டெக்ஸ் அறிக்கையின்படி 2014-17களில் உலகெங்கும் துவக்கப்பட்ட வங்கிக் கணக்குகளில் 55சதவிகிதம் இந்தியாவில் துவக்கப்பட்டுள்ளன. 2014முதல் இதுவரை ஜன்தன் திட்டம் மூலம் துவக்கப்பட்டுள்ள 31கோடிக்கும் மேலான வங்கிக்கணக்குகளினால் இந்தியாவில் வயது வந்தவர்கள் வங்கிக்கணக்கு வைத்திருப்பதன் சதவிகிதம் 2014இல் 53ஆக இருந்தது, 2017இல் 80ஆக உயர்ந்துள்ளது.

## பொதுநிதியம் மற்றும் பொதுகொள்முதல் மின்னணுமயமாக்கம்

பொதுநிதி மேலாண்மை செயல்பாட்டு (PFMS) முறைப்படி எல்லா திட்டப்பணிகளுக்கும் நிதிசார் மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட்டு பயன்பெறும் அனைத்து அமைப்புகளின் தகவல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு அவை வங்கிகளின் அடிப்படை செயல்பாட்டுடனும் அரசு கருவூலங்களுடனும் இணைக்கப்பட்டு அரசுத்திட்டங்களின் பயன்கள் உரிய பயனாளிகளுக்கு குறித்தநேரத்தில் சரியாக சென்றடைகிறதா என்பது கண்காணிக்கப்படுகிறது. இந்தச்செயல்பாட்டின் மூலம் கடைசி நேரத்தில் அளிக்கப்படும் நிதியைக்கூட பயன்படுத்தி



திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. இந்த வகையில், மார்ச் 28ஆம் தேதி இந்த மின்னணு நேரடி பணப்பரிமாற்ற திட்டத்தின்கீழ் 98இலட்சம் பரிமாற்றங்களில் ரூ.72,000கோடி விநியோகிக்கப்பட்டது. ஒரே நாளில் மின்மய பரிவர்த்தனையில் விநியோகிக்கப்பட்ட தொகை இதுவே மிக அதிகமாகும்.

2016இல் பொருள்களைக் கொள்முதல் செய்வதற்காகவும், சிறுமதிப்புப்பொருள்கள் மற்றும் சேவைகளுக்காகவும் அரசு வலைதளசந்தை (GeM) என்ற ஒற்றைச் சாளரத் திட்டத்தைத் துவக்கியது. இ-ப்ரக்குயூர்மென்ட் என்ற அரசு பொதுகொள்முதல் தளத்தின் மூலம் ரூபாய் இரண்டு இலட்சத்திற்கும் மேலான பொருள்களைக் கொள்முதல் செய்யமுடியும். GeM தளம் மூலம் அரசு நேரடியாக கொள்முதல் செய்யவும், வலைதளம்சார் ஏலங்கள் நடத்தவும் அரசுசார் பயன்பாட்டாளர்கள், பொருள்கள் மற்றும் சேவைகளை அளிப்பவர்கள் ஆகியோர் பதிவுசெய்யவும், இவர்கள் எல்லாம் இணைந்த ஒரு பொதுசந்தையையும் உருவாக்கியுள்ளது. இந்த ஆண்டு ஏப்ரல் வரை இந்த தளத்தில் ஏற்கனவே 22,000 அரசு சார்ந்த கொள்முதல் அமைப்புகளும், பொருள்கள் மற்றும் சேவைகள் வழங்கும் 1,00,000 பேரும், 2.31 இலட்சம் பொருள்களும் பதிவுசெய்யப்பட்டு ரூ.6500 கோடிக்கும் மேலாக பரிவர்த்தனைகள் நடந்துள்ளன. இதில், 44சதவிகிதம் கொள்முதல் குறு, சிறு, நடுத்தர உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

### நுகர்வோர் பணப்பரிவர்த்தனை மின்மயமாக்கலில் இந்தியா முன்னிலை

யூனிஃபைடு பேமண்ட்ஸ் இண்டர்ஃபேஸ் (Unified Payment Interface - UPI) பாரத் பில் பேமெண்ட் சிஸ்டம் (Bharat Bill Payment System - BPPS) என்ற இரு செயல்பாடுகள் மூலம் தனியார்துறையில் நுகர்வோர் தாங்கள் வாங்கும் அரசு பொருள்களுக்கும், சேவைகளுக்கும் மின்மயப்பணபரி மாற்றங்களை செய்வதற்கான பல செயலிகளை பல தனியார் துறையினர் உருவாக்கியுள்ளனர். ஏப்ரல் 2017இல் துவங்கப்பட்ட BPPS மூலம் செய்யப்பட்டுள்ள பணப்பரிவர்த்தனைகள் இரண்டு மடங்காகும். அவற்றின் மொத்த பண மதிப்பு 46சதவிகிதம் உயர்ந்துள்ளது. KPNGஇன் ஒரு அறிக்கையின்படி 2016இறுதியில் இந்தியாவில் இவ்வகையான பணப்பரிவர்த்தனையின் மொத்தஅளவு 5.85ட்ரில்லியன் ரூபாய்களாக இருந்தது. இதில், 70சதவிகிதம் பணமாகவோ, காசோலையாகவோ வழங்கப்பட்டன. இப்படிப்பட்ட பணப்பரிவர்த்தனைகள் 2020ஆம் ஆண்டு வாக்கில் 9.4 ட்ரில்லியன் ரூபாயாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது துவங்கப்பட்டுள்ள பாரத் இன்டர்ஃபேஸ் ஃபார் மணி **(Bharat Interface for Money)** என்ற பணப்பரிவர்த்தனை மூலம் மின்னணுமயமான பணப்பரிவர்த்தனை மிகவும் எளிதாகிவிட்டது. கூகுள் தேஜ் மற்றும் செயலி மூலமான பரிவர்த்தனைகள் துவங்கிவிட்டன. 2017-18இல் இந்தியாவில் ஒரு பில்லியனுக்கும் மேலான மின்னணு பணப்பரிவர்த்தனைகள் ஒரு ட்ரில்லியன் ரூபாய்க்கு மேலாக நடந்துள்ளன. புதிதாக இதில் ஈடுபடுபவர்கள் மற்றும் புதிய தொழில் நுட்பங்களால் இது மேலும் அதிகரிக்கும். க்ரெடிட்ஸ் ஸ்யூஸின் (Credit Suisse projects)






ஒரு அறிக்கையின்படி 2023இல் இந்தியாவில் மின்மய பணப்பரிமாற்றத்தின் அளவு ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலருக்கும் மேல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### அரசின் நிதிசார் பரிமாற்றங்கள் மின்மயமாக்கம்

அரசின் நேரடி வரிகளின் வசூல் மின்மயமாக்கப் பட்டிருப்பதால் பெரிய பலன்கள் விளைந்துள்ளன. நிதியாண்டு 2017-18க்கான வருமானவரி படிவங்கள் 26 சதவிகிதம் உயர்ந்து 6.84 கோடியாக உள்ளது. கூடுதலாக ஒரு கோடிக்கும் மேல் புதிய வரிபடிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதில் 98.5 சதவிகிதம் வருமான வரிபடிவங்கள் வலைதளம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பொருள்கள் மற்றும் சேவைகள் வரி செயல்படுத்தப்பட்டபின், முந்தைய நிலைமையைவிட இப்போது, மறைமுகவரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 50சதவிகிதம் வரை அதிகரித்துள்ளது. 3.4 மில்லியன் புதிய மறைமுக வரி செலுத்துவோர் பொருளாதாரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.


### ஆளுமையும் மின்மயம் மூலம் கண்காணிப்பும்

பிரகதி என்று அழைக்கப்படும் **'Proactive Governance and timely implementation'** என்ற பிரதம மந்திரியின் திட்டத்தின் மூலம் அரசின் தன்முனைவு ஆளுமை மற்றும் தகுந்த கால செயல்திட்டச் செயல்பாட்டின் மூலம் பல துறைகளையும் பூகோள எல்லைகளையும் கடந்து அரசின் திட்டங்கள் விரைவாக செயல்படுத்தப்படுகின்றன. பல ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த சமூகநல மற்றும் உள் கட்டமைப்புத் திட்டங்களைக் கண்காணித்து பரிசீலனை செய்து அவற்றின் செயல்பாட்டை தொடர்ந்து ஆராய்வதற்கு பிரதமர் மத்திய, மாநில உயர் அதிகாரிகளுடன் நேரடி தொடர்பில் இருக்கிறார். காணொளிக் காட்சிகள் மூலமாக பிரதமர் 25 திட்ட செயல்பாட்டுக்கூட்டங்களை நடத்தி ரூ.10.5இலட்சம் கோடி மதிப்பிலான 227 திட்டங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறார்.

சமீபத்தில் துவக்கப்பட்டுள்ள ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் மூலம் எல்லா ஆரம்ப மற்றும் சமூக மருத்துவ மையங்களும் வலைதளம் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. ஐந்து இலட்சம் ரூபாய் வரையிலான மருத்துவக்காப்பீட்டுத் திட்டம் 50கோடி இந்தியர்களுக்குப் பயனளிக்கும். இது காகிதமற்ற, பணமற்ற, வலைதளம்சார் செயல்பாடு மூலம் எளிதாக இயக்கப்படும். ஆதார் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் இந்தத்திட்டம் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும்.

## அதிநவீன தொழில்நுட்பங்களால் ஏற்படும் மாற்றங்கள்

அக்ஸென்சர் நிறுவனத்தின் ஒரு ஆய்வின்படி செயற்கை நுண்ணறிவு சார்ந்த பொருள்கள் உற்பத்தியால் 2035வாக்கில் இந்தியாவின் பொருளாதாரம் 957 பில்லியன் அமெரிக்க டாலர் அளவில் அதாவது, இப்போதுள்ள மொத்த மதிப்பீட்டில் 15சதவிகிதம் இருக்கும் என்று கருதப்படுகிறது. இந்திய நிலைமைகளில் உள்ள பல சவால்களை இந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டின் மூலம் சீர்செய்யமுடியும். இது அல்லாமல், மைக்ரோசாப்ட் இண்டர்நேஷனல் டேடா கார்ப்பரேஷனின் ஆய்வு ஒன்றில் “ஆசியா பசிபிக் பகுதியில் மின்மயப் பரிமாற்றங்களால் ஏற்படும் பொருளாதார நற்பயன்கள், என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வறிக்கையில் 2021வாக்கில் மின்மயப் பரிவர்த்தனைகளால் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மேலும் 154 பில்லியன் அமெரிக்க டாலர் ஆக உயரும் என்று கூறுகிறது



அதாவது ஆண்டு வளர்ச்சி ஒரு சதவிகிதம் கூடும். 2017இல் மின்மயப் பரிவர்த்தனைகளாலும், செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டினாலும் செய்யப்பட்ட பரிவர்த்தனை உள்நாட்டு மொத்த உற்பத்தியில் நான்கு சதவிகிதமாக இருந்தது.

அரசு புதிய தொழில்நுட்பங்களையும், அவைகளால் ஏற்படும் நல்விளைவுகளையும் ஆராய்ந்து அரசின் திட்டங்களையும், செயல்பாடுகளையும் பயன்படுத்திவருகிறது. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவான வழிவகைகளை ஏற்படுத்த பணிக்கப்பட்டுள்ள நிதிஆயோக் அமைப்பானது, எல்லா அமைச்சகங்கள் கல்வி நிலையங்கள், தொழில் நிறுவனங்கள், ஆய்வுக்கூடங்கள் மற்றும் பொதுத்தொழில் வியாபாரம் துவங்குவோர் ஆகியோருடன் கலந்து ஆலோசித்துவருகிறது. இதன் மூலம், புதிய தொழில் நுட்பங்களின் உபயோகம் அதனால் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவை அனைத்தும் ஆராயப்படும். சில திட்டங்களில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டை நிதிஆயோக் ஏற்கனவே துவக்கியுள்ளது. செயற்கை நுண்ணறிவுப் பயன்களை உறுதியாக்கும் திட்டம் என்று பெயரிடப்பட்டு விவசாயத்தில் நுண் செயல்பாடு, நிலப்பதிவேடு, மருத்துவசிகிச்சை, நோய்கண்டறியும் துறைகளில் இது பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களிலும் மற்ற பிற அரசுத்திட்டங்களிலும் எந்த அளவிற்கு நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தமுடியும் என்பதைக் கண்டறிவதுதான் இதன் நோக்கம்.

பல்லாண்டுகளாக இந்தியாவில் சாமானியர்கள் அரசின் சேவைகளைப் பெற அணுகவே முடியாத நிலை இருந்துவந்தது. தற்போது, மின்மயப்பரிமாற்றத் தொழில்நுட்பத்தால் எல்லாத் துறைகளிலும் அலுவலர்களின் நேரடி தொடர்புகளால் ஏற்படும் தடங்கல்களை நீக்கி, அரசின் பயன்களை மக்கள் பெறுவது எளிதாக்கப்பட்டுள்ளது. இதனால், அரசின் ஆளுமையும், திறனும் மிகுந்துள்ளன.

---

- **அமிதாப் காந்த்**, தலைமை செயல் அலுவலர், நிதி ஆயோக்

●

# பெண்களையும் குழந்தைகளையும் பாதுகாக்க ஆதரவுக்கரம்

ராஜேஷ் ஸ்ரீவத்ஸ்சவா

நமது சமூகத்தில் பல ஆண்டுகளாக பெண்களும் குழந்தைகளும் **ஆண்களுக்குச்** சமமாக நடத்தப்படுவதில்லை. நமது மக்கள்தொகையில் இவர்கள் மூன்றில் இரண்டு பங்கு என்ற அளவில் இருந்தாலும்கூட அவர்களின் முக்கியமான கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. வளர்ச்சிக்கான கருத்தாடல்களில் அவர்கள் ஓரம் கட்டப்படுகின்றனர். இத்தகைய வளர்ச்சி முறையானது நீடித்துநிலையாக இருக்காது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை உறுதிப்படுத்தாமலோ சமூகத்தில் அவர்களுக்கு சமமான இடத்தைத் தராமலோ எந்த நாடும் அல்லது எந்தக் கலாச்சாரமும் உண்மையான வளர்ச்சியை அடையமுடியாது. இந்தக் கருத்தை நடைமுறையில் செயல்படுத்துவதற்கு அரசு உறுதி கொண்டுள்ளது. எனவே நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் அந்தஸ்தை மேம்படுத்துவதில் தனது பொறுப்புணர்வை அரசு முழுமையாக உணர்ந்துள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் நல்வாழ்வையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு அரசு ஒரு முழுமையான அணுகுமுறையைக் கொண்டுள்ளது. அதிகாரம் அளித்தல் மற்றும் பாதுகாப்பு அளித்தல் என்ற இரண்டு அம்சங்களும் சமஅளவில் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். மேலும் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை ஆகும். இதில் ஒன்றில்லாமல் மற்றொன்றை எவராலும் அடையமுடியாது. எனினும் இந்தக்கட்டுரையின் நோக்கத்துக்காக அதிகாரம் அளித்தல் என்ற அம்சத்தை நீக்கி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக அரசு எடுத்துவரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் மட்டுமே கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பையும், நல்வாழ்வையும் உறுதிப்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பெண்களும் குழந்தைகளும் ஆக்கப்பூர்வமாகப் பங்கேற்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதையும் அவர்களுக்கு சமமான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதையும் இந்தத்திட்டங்கள் நோக்கங்களாகக் கொண்டுள்ளன. இத்தகைய முன்னோடி நடவடிக்கைகள் மாற்றங்களை உள்ளடக்கியவை ஆகும். மாறிவரும் தேவைகளைக் கருத்தில் கொண்டவை ஆகும். மேலும் அந்தத்திட்டங்கள் தொழில்நுட்பப் பயன்பாட்டை திறம்படப் பயன்படுத்தி வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

## மன அமைப்பை மாற்றுதல்

பாதுகாப்பான, சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு ஆரம்ப நிலையிலேயே செயல்படத் தொடங்கி மனஅமைப்பு என்ற பிரச்சினையின் வேரைக் கண்டடைந்து அதனைக் களையவேண்டும். இதற்காகத்தான் அரசாங்கம் "பெண் குழந்தைகளைக் காப்போம் - பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" என்ற திட்டத்தை நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளது. விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கருக்கலைப்பைக் கண்காணித்தல் மற்றும் பெண் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதை ஊக்குவித்தல் ஆகிய செயல்பாடுகள் மூலம் "பெண் குழந்தைகளைக் காப்போம் - பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" என்ற திட்டம் வெற்றி அளிக்கத் தொடங்கியுள்ளது. முதற்கட்டமாக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தொடக்கநிலை இடையீட்டு நடவடிக்கைகள் நல்ல பலனைத் தந்துள்ளன. இவற்றில் இந்தத்திட்டம் செயல்படுத்தப் பட்டுவரும் பாதியளவு மாவட்டங்களில் குழந்தைப் பிறப்பின் போதான பாலின விகிதம் அதிகரித்து வருவது தெரியவருகிறது.

இதே போன்று "பாலின சாம்ப்பியன்" என்ற முன்னோடி நடவடிக்கை கல்வி நிறுவனங்களில்

நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பாலினம் குறித்து மாணவர்கள் புரிந்துகொள்ள உதவும் வகையிலும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குப் பாதகம் ஏற்படுத்தும் வழிகளில் செயல்படாமல் அவர்களைத் தடுக்கும் வகையிலும் இந்தத் திட்டமானது அமைந்துள்ளது. 150 பல்கலைக்கழகங்கள் மற்றும் 230 கல்லூரிகள் இந்தப் பாலின சாம்ப்பியன் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கியுள்ளன.

### புகார் அளிக்க ஊக்கப்படுத்துதல் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவு அளித்தல்

காவல்துறையை நேரடியாக அணுகி புகார் அளிப்பதற்குப் பல பெண்களும் குழந்தைகளும் தயக்கம் காட்டுகின்றனர். அதனால்தான் நாடு முழுவதும் பல பகுதிகளில் "நிர்பயா நிதியத்தின்" கீழ் எல்லா சேவைகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் 182 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்கள் வன்முறைக்கு ஆளாகும் பெண்களுக்கு ஒரே இடத்திலேயே அனைத்து உதவிகளும் கிடைக்கச்செய்யும் ஒற்றைச்சாளர மையங்களாகச் செயல்படுகின்றன. அதாவது பாதிக்கப்பட்ட பெண் காவல்துறை, மருத்துவத்துறை, சட்டத்துறை, உளவியல்துறை என அனைத்துத் துறைகளின் உதவிகளையும் ஒரே இடத்தில் பெறுவதோடு ஒரு சில நாட்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கான இருப்பிட வசதியையும் இதன் மூலம் பெறமுடியும். இதுவரை இந்த மையங்கள் 1.31 இலட்சம் பெண்களுக்கு இத்தகைய உதவிகளை வழங்கியுள்ளன.

மேலும் பெண்கள் மீது நிகழ்கின்ற வன்முறை குறித்து 181 என்ற பெண்கள் தொலைபேசி உதவி எண்ணில் புகார்கள் தெரிவிக்கலாம். ஆபத்தில் உள்ள பெண்களுக்கு அவசரகால மற்றும் அவசரம் அல்லாத சாதாரண காலத்திலும் உதவி செய்யக்கூடிய வகையில் நாடு முழுவதிற்கும் பொதுவான கட்டணம் இல்லாத இலவச தொலைபேசி அழைப்பாக இது செயல்படுகின்றது. பெண்கள் இந்த எண்ணில் அழைத்து தங்களின் ஆபத்துக்காலச் சூழல் குறித்து தெரிவிக்கலாம், ஆலோசனை பெறலாம் அல்லது சட்டம், காவல், உளவியல் சார்ந்த தகவலைத் தெரிந்து கொள்ளலாம். இந்த எண்ணில் மேலும் கூடுதலான வாய்ப்புகள் உள்ளன. இதுவரை 30 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் பெண்கள் உதவித் தொலைபேசி வசதி அமைக்கப்பட்டுள்ளது. இந்நாள் வரையிலும் 16.5 இலட்சம் பெண்கள் இந்த வசதி மூலம் உதவிபெற்றுள்ளனர். அதேபோன்று ஆபத்தான சூழல்களில் உள்ள குழந்தைகளுக்காக நாடு முழுவதும் 1098 என்ற கட்டணமில்லா உதவித் தொலைபேசி எண் செயல்பட்டுவருகிறது. இந்த எண்ணிற்கு கடந்த ஆண்டில் மட்டும் 1.8 கோடிக்கும் அதிகமான அழைப்புகள் வந்துள்ளன.

காவல்துறையில் பெண்களுக்காக 33% இடஒதுக்கீடு செய்யப்பட்டதைக் குறிப்பிடத்தக்க நடவடிக்கை என்று கூறலாம். இந்த நடவடிக்கையானது பெண்களும் குழந்தைகளும் காவல்துறையை அணுகி குற்றங்களைப் புகார் செய்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்துவதாக அமையும். இது தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டு, 22 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் இந்த இடஒதுக்கீடு முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது உள்துறை அமைச்சகத்துடன் இணைந்து பாலினம் தொடர்பான வழக்குகளில் காவல்துறையின் ஒட்டுமொத்த அணுகுமுறையை மேம்படுத்தத் திட்டமிட்டுவருகிறது. அதேபோன்று காவல்துறையில் அதிக அளவு மகளிர் வெளிப்படையாகத் தெரிவது போன்ற நடவடிக்கைகளுக்கும்



திட்டமிடப்பட்டுவருகிறது. இந்த நடவடிக்கைகள் காலியிடத்தை நிரப்புவது மற்றும் காவல்துறையில் பெண்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பது என்பதாக மட்டுமல்லாமல் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நட்பான முறையில் காவல்துறை உதவுவதாகவும் அமையும்.

குழந்தைகள் தாக்குதலுக்கும் தவறான பயன்பாட்டுக்கும் அடிக்கடி உள்ளாகின்றனர். குழந்தைகள் இத்தகைய நுண்ணுணர்வான அனுபவத்தையும், பாதிப்பையும் புகாராக அளிப்பதை எளிமையாக்கும் வகையில் **"போக்ஸோ இ-பாக்ஸ்"** என்ற ஆன்லைன் போர்ட்டல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் போர்ட்டலில் எந்த ஒரு குழந்தையோ அல்லது குழந்தையின் சார்பாக ஒருவரோ குறைந்தபட்ச தகவல்களுடன் ஒரு புகார் செய்யமுடியும். புகார் அளிக்கப்பட்ட உடன் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகப் பயிற்சி பெற்ற ஆலோசகர் ஒருவர் பாதிக்கப்பட்ட குழந்தையை அணுகி உதவிகள் செய்வார். தேவைப்படும் சூழலில் அவர் குழந்தையின் சார்பாக முறைப்படியான புகாரைத் தாக்கல் செய்வார்.

### வலிமையான சட்ட அமைப்பை உருவாக்குதல்

ஆள்கடத்தல் என்ற வெளிப்படையாகத் தெரியாத ரகசியமான குற்றத்தில் இருந்து பெண்களையும் குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காக சட்ட அமைப்பை வலுவானதாக்கும் வகையில் அமைச்சகமானது ஆள்கடத்தல் (தடுத்தல், காப்பாற்றுதல் மற்றும் மறுவாழ்வு) மசோதோ 2018ஐ அண்மையில் தயாரித்துள்ளது. இந்த மசோதாவானது தற்போதுள்ள இடைவெளிகளை நிரப்புவதாகவும் ஆள்கடத்தலின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்குவதாகவும் இருக்கிறது. பாதிக்கப்படுபவர்களுக்கு உதவும் வகையில் வலிமையான சட்ட, பொருளாதார மற்றும் சமூக சூழ்நிலையை உருவாக்கித் தருவதன் மூலம் ஆள்கடத்தலை சமாளிக்கலாம் என இந்த மசோதா முன்மொழிகின்றது. இதற்காக மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் அர்ப்பணிப்பாகச் செயல்படக்கூடிய நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் இந்த மசோதா முன்மொழிகின்றது.

குழந்தைத்திருமணம் போன்ற சமுதாய நடைமுறைகளில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கக் கூடிய சட்ட அமைப்பு முறையானது வலுவாக்கப்படுவதோடு அது கண்டிப்பாகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம், 2006 என்ற சட்டமானது குழந்தைத் திருமணத்தை ஊக்குவிக்கும், நடத்தும் மற்றும் ஆதரிக்கும் நபர்களுக்குத் தண்டனை அளிக்கிறது. இந்தச் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என மாநில அரசுகளை அமைச்சகம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.



இதற்காக அமைச்சகம் நேரடியாக மாவட்ட ஆட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டு கண்காணிக்கிறது. நாங்கள் இந்தச் சட்டத்தில் குழந்தைத் திருமணங்களை சட்டப்படி செல்லாதவை என்று அடிமுதலே அறிவிக்குமாறு ஒரு திருத்தத்தை முன்மொழிந்து உள்ளோம். குழந்தைத் திருமணம் என்ற நடைமுறையை கைவிட இந்த சட்டத்திருத்தம் சிறப்பான முறையில் உதவும்.

அதே போன்று பணியிடத்தில் பெண்களுக்குப் பாலியல் தொந்தரவுகள் (முன்தடுப்பு, தடைசெய்தல் மற்றும் குறைதீர்ப்பு) சட்டம் 2013ஐ அமைச்சகம் தீவிரமாக செயல்படுத்திவருகிறது. இந்தச்சட்டம் குறித்து பயிற்சி வகுப்புகள் மற்றும் பயிலரங்குகள் நடத்த 112 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளன. தொலைக்காட்சி, வானொலி மற்றும் ஆன்லைனில் பெரிய அளவிலான பிரச்சார முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் உள்ள பெண்கள் பணியிடத்தில் தங்களுக்கு ஏற்படும் பாலியல் தொந்தரவுகள் குறித்து ஆன்லைனில் புகார் செய்வதற்காக "SHe –BOX" என்ற எளிதில் பயன்படுத்தக்கூடிய ஆன்லைன் போர்ட்டல் தொடங்கப்பட்டுள்ளது. பெண்கள் தங்களது பதவிநிலை அல்லது நிறுவனம் எதுவாக இருந்தாலும் அதுகுறித்து கவலைப்படாமல் இந்தப் போர்ட்டலில் புகார் செய்யலாம். வேலை செய்யும் இடத்தில் பாதுகாப்பான சூழல் இருந்தால் அது உழைப்புச்சக்தியில் மேலும் பெண்கள் சேர்வதற்கு ஊக்கம் அளிப்பதாக இருக்கும்.

வீட்டுக்கு உள்ளேயும் வீட்டுக்கு வெளியிலும் பெண்களுக்கு பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கி அமைச்சகம் செயலாற்றிவருகின்றது. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் PWDVA - 2005ஐ நடைமுறைப்படுத்த நாடு முழுவதும் உந்துதல் தரப்பட்டு வருகின்றது. இத்தகைய வழக்குகளைப் புகார் செய்வதற்கு பெண்களுக்குத் தேவையான பாதுகாப்பும் உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது. சமூகக்கொடுமையான வரதட்சணை என்ற பிரச்சினையை எதிர்கொள்வதன் தேவையை உணர்ந்ததால் அமைச்சகமானது வரதட்சணை தடுப்புச்சட்டம் அமல்படுத்தப்படுவதை தீவிரமாகக் கண்காணித்து வருகின்றது. இந்தச் சட்டமானது வரதட்சணை என்பதற்கு விளக்கம் தருவதோடு வரதட்சணை வாங்குகின்ற, தருகின்ற அல்லது ஆதரிக்கின்ற நபர்களையும் குற்றவாளி எனக் கூறுகிறது.

இத்தகைய சட்டங்கள் குறித்த ஒரு ஊடகப் பிரச்சாரமும் வடிவமைக்கப்பட்டு அது தற்போது தொலைக்காட்சி, வானொலி மற்றும் ஆன்லைனில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் டாக்சி கொள்கை வழிமுறைகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இதில் பெண்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் சிறப்பான முறையில் முன்வைக்கப் பட்டுள்ளன. அதாவது ஜி.பி.எஸ் ஆபத்துக்கால கருவிகள் கட்டாயம் பொருத்தப்படுதல், சைல்டு லாக்கிங் அமைப்பைச் செயலிழக்கச்செய்தல், வாகனத்தில் ஓட்டுநர் குறித்த அடையாளத்தை புகைப்படத்துடனும் பதிவு எண்ணுடனும் பயணியின் பார்வைக்குத் தெரியும் வகையில் வைத்தல், பெண் பயணிகள் விருப்பம் தெரிவித்தால் மட்டுமே கூடுதலான பயணிகளை அனுமதித்தல் போன்ற அம்சங்கள் அனைத்து டாக்சிகளிலும் கட்டாயமாக இருக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. பெண்களும் குழந்தைகளும் டாக்சிகளைப் பயன்படுத்தும் போது அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### நிதியத்துக்கான புதிய செயல்திட்டங்கள்

நிர்பயா நிதியம் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்று தவறாகச் சித்தரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் உண்மையில் பெண்களின் பாதுகாப்புக்கான புதிய திட்டங்கள் ரூ.6223.79 கோடிக்கு செயல்படுத்தப் படுகின்றன. நமது நாட்டில் ஆபத்துகாலப் பொத்தான்கள் என்ற அம்சம் அனைத்து மொபைல் போன்களிலும் விரைவில் கிடைக்கும். ஆபத்தான சூழலில் உள்ள பெண்களுக்கான அவசரக்கால உதவி கிடைக்க இந்த ஆபத்துக்காலப் பொத்தான்கள் என்ற அம்சம் உதவியாக இருக்கும். இந்தப் பொத்தான் அருகில் உள்ள பிசிஆர்க்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்ப உறவினர்கள் / நண்பர்கள்

ஆகியோருக்கும் ஆபத்துக்குள்ளான பெண்கள் இருக்கும் இருப்பிடத்தை அடையாளம் கண்டுபிடிக்கும் வகையில் செயற்கைக்கோள் அடிப்படையிலான ஜிபிஎஸ் மூலம் சங்கேதங்களை அனுப்பும். இந்த வசதி குறித்த முதற்கட்ட பயனாளர் சோதனை உத்திப்பிரதேசத்தில் முழுமை அடைந்துள்ளது. விரைவில் இந்த வசதியானது நாடு முழுவதும் அமல்படுத்தப்படும்.

நாட்டில் உள்ள எட்டு முதன்மை நகரங்களைப் பெண்களுக்குப் பாதுகாப்பான நகரமாக மாற்றுவதற்கான விரிவான திட்டங்களுக்கும்கூட நிர்பயா நிதியத்தில் இருந்து நிதி அளிக்கப்படுகின்றது. இந்த நகரங்களில் தெருவிளக்கு, பாதுகாப்பான போக்குவரத்துவசதி, மேம்படுத்தப்பட்ட காவல்துறை முதலானவை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுக்கும் நிதி அளிக்கப்படுகின்றது. இந்த எட்டு நகரங்களும் மற்ற நகரங்கள் பின்பற்றக்கூடிய மாதிரி நகரங்களாகச் செயல்படும். பாலியல் வன்புணர்ச்சி மற்றும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான வழக்குகளில் பாதிக்கப்பட்டவரின் தரப்புக்கு சிறப்பாகவும் விரைவாகவும் உதவிடும் வகையில் ஆய்வுக்கூடங்களில் தடயவியல் வசதிகளை மேம்படுத்தும் பணிகளும் நிர்பயா நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## பாதுகாப்புக்காக தகவல் தொழில்நுட்பத்தை அதிக அளவில் பயன்படுத்துதல்

தொழில்நுட்பம் வளர வளர பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை பிரயோகிக்க டிஜிட்டல் தளத்தைப் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. அரசு இதனை கவனத்தில் எடுத்துக் கொண்டு அதற்கு ஏற்றவாறு எதிர்வினை ஆற்றிவருகிறது. டிஜிட்டல் தளத்திலும் பாதுகாப்பு கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் தற்போதைய அமைப்புகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக மத்திய புகார் அளிப்பு அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த அமைப்பானது ஒரு ஹாட்லைன் போன்று செயல்படும். யார் வேண்டுமென்றாலும் இதில் சைபர் குற்றம் பற்றி புகார் செய்யலாம். குழந்தை ஆபாசப்படங்கள், பாலியல் வன்புணர்ச்சி மற்றும் கூட்டாகப் பாலியல் வன்புணர்ச்சி முதலானவற்றைச் சித்தரிக்கும் காட்சிகள் போன்றவற்றை நீக்குவதற்கான எளிய வழிமுறைகளும் இதில் உள்ளன. சைபர் குற்றங்கள் நிகழ்வதற்கு முன்பே அதனைத் தடுப்பதற்கும் குற்றம் நிகழ்ந்தால் அவற்றை எதிர்கொள்வதற்குமான விழிப்புணர்வு பொதுமக்களிடமும் அதிகாரிகளிடமும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது குழந்தைகளின் பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறது. அந்த வகையில் குடிமக்கள் பயன்படுத்தும் வகையில் "கோயா பாயா" (காணாமல் போதல் - கண்டுபிடித்தல்) என்ற ஆன்லைன் போர்ட்டல் ஒன்றை அமைச்சகம் உருவாக்கியுள்ளது. இந்தப் போர்ட்டலில், காணாமல் போன அல்லது யாருடைய துணையும் இன்றி கண்ணில் படும் தனித்து அலையும் குழந்தைகள் குறித்த தகவல்கள் பதிவு செய்யப்படும். இதன் மூலம் அவர்களைக் கண்டுபிடித்து அவர்களின் குடும்பத்துடன் சேர்த்து வைக்கமுடியும். இந்தப் போர்ட்டல் தொடங்கப்பட்ட 2015ஆம் ஆண்டில் இருந்து காணாமல் போன - கண்ணில்படும் தனித்து அலையும் குழந்தைகள் 10,000 பேர் குறித்த பதிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு ஆதரவான இத்தகைய முன்னோடி நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் என்.சி.ஆர்.டி (NCERT) பாடப்புத்தகங்களின் மேலட்டையின் உட்புறம் வெளியிடப்பட்டுவருகின்றன. இதனால் குழந்தைகளிடத்தில் அதிகபட்ச விழிப்புணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது.

## வன்முறையில் தப்பிப் பிழைத்தவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்

பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டு உயிர் பிழைத்து வாழ்பவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் என்பது அரசின் விரிவான இடையீட்டுச் செயலின் ஒரு முக்கிய அம்சமாகவே உள்ளது. தாக்குதலுக்கு உள்ளானவர்களுக்கான மத்திய இழப்பீட்டுத்திட்டம் செயல்படுகின்றது. வன்முறைக்கு ஆளான நிர்பயா நிதியத்தின் கீழ் பெண்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு மாநில அரசுகளுக்கு கூடுதல் உதவியை இந்தத்திட்டம் வழங்குகிறது. அமில வீச்சினால் பாதிக்கப்பட்ட பெண்ணின் வாழ்க்கை நீண்ட



நெடிய காலத்திற்கு சிரமமானதாகவே இருக்கும். மேலும் அவர்களுக்குத் தொடர்ச்சியாக மருத்துவப் பராமரிப்பும் தேவைப்படும். இந்த அம்சங்களைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது அமில வீச்சால் ஏற்பட்ட சேதம் அல்லது உருவச் சிதைப்பை குறிப்பிட்ட ஊனங்கள் என்ற பட்டியலில் சேர்த்துக் கொள்ளுமாறு சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. அண்மையில் இயற்றப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் 2016இல் அமில வீச்சுத் தாக்குதலும் ஒருவித ஊனமாகவே சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் அமில வீச்சுத் தாக்குதலுக்கு ஆளானவர்கள் இப்போது மாற்றுத் திறனாளிகளுக்கான பலன்களைப் பெறமுடியும்.

ஒரு புதிய முயற்சியாக அமைச்சகம் நாடு முழுவதும் 60 முக்கிய ரெயில் நிலையங்களில் குழந்தைகளுக்கான உதவி மையங்களை அமைத்துள்ளது. குழந்தை கடத்தல் தொழிலில் குழந்தைகளைக் கைப்பற்றும் மற்றும் கையளிக்கும் இடங்களாக இந்த ரெயில் நிலையங்கள் உள்ளன. இந்த ரெயில் நிலையங்கள் அனைவருக்கும் தெரிந்த இடங்களாகும். அதற்காகவே இந்த ரெயில் நிலையங்களில் இத்தகைய குழந்தை உதவிமையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆபத்தான சூழலில் உள்ள குழந்தைகளை அடையாளம் காண்பது, மீட்பது, குடும்பத்துடன் சேர்ப்பது மற்றும் மறுவாழ்வு அளிப்பது ஆகிய பணிகளுக்கு இந்த மையமானது உதவிகள் செய்கின்றது. இந்நாள்வரை இந்தச் சேவை மூலம் 34,000 குழந்தைகளுக்கு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

### இறுதி இலக்கை அடைதல்

அரசின் பாதுகாப்பு நடவடிக்கை முறைகள் ஊரகப்பெண்களுக்கும் சென்று சேர்வதை உறுதிசெய்யும் வகையில் மிக அண்மைக்காலத்தில் **மகிளா சக்தி கேந்திரம்** என்ற திட்டமானது தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஊரகப்பெண்களுக்கு அவர்களது வசிப்பிடங்களிலேயே உதவிச்சேவைகளை அளிக்கிறது. மிகவும் பின்தங்கிய 115 மாவட்டங்களில் 3 இலட்சம் மாணவத் தன்னார்வலர்கள் இந்த உதவிச் சேவைகளை வழங்குகின்றார்கள். அரசு வழங்கும் இதர பலன்களோடு இந்த மாணவர்கள் ஊரகப்பெண்களுக்கு விழிப்புணர்வும் அளிக்கின்றார்கள். அதாவது வன்முறையால் பாதிக்கப்பட்டு உயிர்பிழைத்து வாழ்பவர்களுக்கான ஆதரவுச் சேவைகள் குறித்து எடுத்துரைப்பதோடு அத்தகைய சேவைகளை வழங்கும் நிறுவனங்களோடு அவர்களுக்குத் தொடர்பும் ஏற்படுத்தித் தரப்படுகின்றது.

பாதுகாப்பையும் அரவணைப்பையும் இந்தியாவில் உள்ள பெண்கள் உணர்ந்தால்தான் அவர்களால் பொதுவாழ்வில் முழுமையாக ஈடுபடவும் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்காற்றவும் முடியும். அதே போன்று வன்முறை இல்லாத சூழல் குழந்தைகளுக்கு அளிக்கப்படாவிட்டால் அவர்கள் ஆக்கப்பூர்வமானவர்களாக வளர்வது என்பது முடியாத ஒன்றாகிவிடும். ஒரு அரசாக, நாங்கள் இந்தியாவின் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு குழந்தையும் அவர்களது வீட்டை விட்டு பயம் இல்லாமல் வெளியே வரவேண்டும் என விரும்புகிறோம். இத்தகையச் சூழ்நிலை அடையப்படும் என்பதை உறுதிப்படுத்த நாங்கள் முயற்சிக்கிறோம்.

---

**ராஜேஷ் ஸ்ரீவத்ஸ்சவா,** செயலாளர், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், புதுதில்லி.

# பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம் பெண் குழந்தைகளைப் படிக்க வைப்போம்

- வே. அமுதவல்லி

ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்தை வலியுறுத்த தன் உடலில் சரி பாதியை சிவபெருமான் தன் மனைவி உமையவளுக்கு கொடுத்ததாக புராணக் கதைகள் சொல்வதுண்டு. சக்தி இல்லையேல் சிவம் இல்லை. என்ற பொன்மொழி சொல்லப்பட்டு வந்தாலும் தற்போதைய சூழலில் இந்த நிலை இருக்கிறதா என்று பார்த்தால் விடை 'இல்லை' என்பதே ஆகும்.

தொண்ணூறுகளில் தமிழ்நாட்டில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டிப் பகுதியிலும், சேலம் மாவட்டத்திலும் பிறந்த பெண் குழந்தைகளை நெல் மணியைக் கொடுத்தோ அல்லது கள்ளிப்பால் கொடுத்தோ கொலை செய்த சம்பவங்களை நம்மால் மறக்க முடியாது. பல ஆண்டுகளுக்கு முன்பு வந்த கருத்தம்மா திரைப்படத்தையும் அவ்வளவு சுலபமாக மறந்து விட முடியாது. சரி இத்தகைய சூழ்நிலை ஏன் வந்தது?

வறுமை, ஆண் குழந்தை மட்டுமே தனக்கு அந்திமக் கடமைகளைச் செய்ய முடியும் என்பதால் வந்த மனப்பாங்கு, திருமணம், குழந்தைப் பிறப்பு உள்ளிட்ட கலாச்சார நடைமுறைகளினால் பெண் குழந்தைகளை வளர்ப்பதற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம் மற்றும் பெண் குழந்தை பாதுகாப்பு ஆகிய காரணங்களினால் சமூக அமைப்பில் பெண் குழந்தை வேண்டாம் என்ற எண்ணம் நிலவி வருகிறது.

பிறந்த குழந்தை முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகளில், 1000 ஆண் குழந்தைகளுக்கு எத்தனை பெண் குழந்தைகள் இருக்கின்றன என்பதைக் கணக்கிடுவதே குழந்தைப் பாலின விகிதம் ஆகும். 2011 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விபரத்தின் படி, குழந்தைப் பாலின விகிதம் தேசிய அளவில் 918 ஆகவும், தமிழ்நாட்டில் 943 ஆகவும் இருந்தது.



பெண் குழந்தைகளின் எண்ணிக்கை குறையும் பொழுது அவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிக்கக் கூடும் என்ற சூழலை கணக்கில் கொண்டு இத்தகைய ஆபத்தான சூழல் உருவாக்காமல் தடுக்கும் விதத்தில் மத்திய அரசால் உருவாக்கப்பட்ட சிறப்புத் திட்டமே, "பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளைப் படிக்க வைப்போம்' (BETI BACHAO BETI PADHAO) ஆகும். பெண் குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கவும் அவர்கள் கல்வி கற்பதை உறுதி செய்யவும், இந்த திட்டம் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் நாள் ஹரியானா மாநிலம் பானிபட் நகரில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகம் இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, குழந்தைப் பாலின விகிதம் தேசிய அளவினை விட தமிழகத்தில் கூடுதலாக இருந்தாலும், சில மாவட்டங்களில் இந்த எண்ணிக்கை தேசிய அளவை விடக் குறைவாக இருந்தது. கடலூர் மாவட்டத்தில் இந்த எண்ணிக்கை 896 ஆகும். ஆறு வயது வரை உள்ள ஆண் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை இப்படி இருந்தாலும், 2015 ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைகளை ஆய்வு செய்த போது 1000 ஆண் குழந்தைகளுக்கு 886 பெண் குழந்தைகள் என்ற எண்ணிக்கையிலேயே இருந்ததால் இந்த திட்டத்தைச் செயல்படுத்த கடலூர் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் நோக்கம் கருவில் இருக்கும் குழந்தையின் பாலினத்தை ஸ்கேன் மூலம் அறிந்து கருக்கலைப்பு செய்யும் நடவடிக்கைகளை அறவே ஒழித்தல், பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்புடன் கூடிய நல்வாழ்வை உறுதி செய்தல், பெண் குழந்தைகள் கல்வி கற்பதை உறுதி செய்தல் ஆகியவை ஆகும். இந்த திட்டத்தினை மாவட்ட ஆட்சி தலைவர் சமூக நலத்துறை அலுவலர் மூலமாக செயல்படுத்தி வருகிறார்.

**திட்டத்தின் செயலாக்கம்**

மாவட்ட அளவில், சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், கல்வித்துறை, சுகாதாரத்துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து மாதம் இருமுறை ஒருங்கிணைப்பு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கும் பஞ்சாயத்து அமைப்பில் செயல்படும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும், களப்பணியாளர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் ஒவ்வொரு மாதமும் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையையும் அதில் ஆண் குழந்தைகள் எத்தனை பெண் குழந்தைகள் எத்தனை என்ற விபரத்தையும் பொது இடத்தில் வெளிப்படையாக எழுதி வைக்கும் விளம்பரப் பலகைகள் நிறுவப்பட்டன. கடலூர் மாவட்டத்தில் இருக்கும் 683 கிராமப் பஞ்சாயத்தில் உள்ள 2342 கிராமங்களிலும் இத்தகைய விளம்பரப் பலகைகள் நிறுவப்பட்டன. இதன் மூலம் பொது மக்களுக்கு நமது கிராமத்தில் ஆணும் பெண்ணும் சமமான எண்ணிக்கையில் இருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அது மட்டும் இல்லாமல் ஒவ்வொரு மாதமும் ஏழாம் தேதி, கடலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த நாளில் மருத்துவமனையில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு மாவட்ட ஆட்சி தலைவரின் கையொப்பமிட்ட பாராட்டு சான்றிதழும், ஒரு பலா மரக்கன்றும் வழங்கப்பட்டு வருகிறது.

அரசு விழாக்களில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மூலம் பயன் பெறும் குழந்தைகளுக்கு இடையே போட்டி நடத்தி 'கொழு கொழு குழந்தை', தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த குழந்தைக்குப் பரிசு வழங்கப்பட்டது.

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க, பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் அவசியமானது ஆகும். இத்தகைய சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் குழந்தைத் திருமணம் நடக்காமல் தடுப்பது முக்கியத்துவம் பெறுகிறது. இதற்காக கடலூரில் புதிய முயற்சி மேற்கோள்ளப்பட்டது. உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் படிக்கும் பெண் குழந்தைகளுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவரின் முகவரி அச்சிடப்பட்ட அஞ்சல் அட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டது. எந்த ஊரிலாவது குழந்தை திருமணம் நடக்கும் தகவல் அந்த பெண் குழந்தைகளுக்கு தெரிய வரும் பட்சத்தில் இதை அந்த அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்ப கேட்டு கொள்ளப்பட்டது, இதன் மூலம் கடலூர் மாவட்டத்தில் பல குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு உள்ளன.

கடலூர் மாவட்டத்தில் இயங்கி வந்த ஸ்கேன் மையங்களைக் கண்காணித்து, சட்டத்துக்குப் புறம்பாக நெய்வேலியில் செயல்பட்ட மையம் ஒன்று கருவில் இருக்கும் குழந்தையின் பாலினத்தை வெளிப்படுத்துவது கண்டு பிடிக்கப்பட்டு அந்த மையத்தின் மீது குற்றவியல் நடவடிக்கை

மேற்கோள்ளப்பட்டது. அது மட்டும் இல்லாமல் அந்த மையத்தை நடத்தி வந்த மருத்துவரின் உரிமமும் ஐந்து ஆண்டுகளுக்கு ரத்து செய்யப்பட்டது.

கிஷோரி சக்தி யோஜனா திட்டத்தின் மூலமாக 11 முதல் 18 வயதுடைய வளர் இளம் பெண்களை கண்டறிந்து அவர்களுக்கு அவர்களுக்கு தன் சுத்தம், சுகாததாரம், சட்ட உரிமைகள், குடும்ப நலன் ஆகிய தகவல்கள் வழங்கப்பட்டு, இவர்களை விளம்பர தூதர்களாக பயன்படுத்தி இவர்கள் மூலம் தகவல்கள் பரப்பும் முறையும் கையாளப்பட்டு வருகிறது.

இது தவிர தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் மூலமாக இரண்டு பெண் குழந்தைகளுடன் பெற்றோரில் ஒருவர் குடும்ப நல அறுவை சிகிக்சை செய்து கொண்டால் அந்த குழந்தைகளுக்கு தலா 25,000 ரூபாய் தமிழ்நாடு அரசால் அந்த பெண் குழந்தைகளின் பெயரில் வைப்பு தொகையாக செலுத்தப்பட்டு வருகிறது. அந்த குழந்தைகள் பதினெட்டு வயதை அடையும் போது முதிர்வுத் தொகை ஒவ்வொரு குழந்தைக்கும் 1,50,000 ரூபாய் அளவில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டம் குறித்த விழிப்புணர்வும் பொது மக்களிடையே பெண் குழந்தைகளை வரவேற்கும் மன நிலையை உருவாக்கி வருகிறது.

இது தவிர தமிழ்நாட்டில் ஏற்கனவே தொட்டில் குழந்தை திட்டமும் 1992 இல் இருந்தே செயல்பாட்டில் உள்ளது. எனவே, பெற்றோர் தங்களால் குழந்தையை வளர்க்க முடியாது என்று கருதும் பட்சத்தில் அந்த குழந்தைகளை அரசு மருத்துவமனையில் இருக்கும் தொட்டிலில் போட்டு விடலாம். இதன் மூலம் பெண் குழந்தைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

### திட்டத்தின் சாதனைகள்

- கடலூர் மாவட்டத்தில் பிறப்பு பாலின விகிதம் 2015 ஆம் ஆண்டில் 886 ஆக இருந்தது 2017 ஆம் ஆண்டில் 915 ஆக உயர்ந்து உள்ளது
- உயர் தொடக்கப்பள்ளி மாணவிகளின் இடை நிறுத்தம் 1.5 சதவிகிதத்தில் இருந்து ஒரு சதவிகிதமாக குறைந்து உள்ளது.
- இடை நிலைப்பள்ளி மாணவிகளின் இடைநிறுத்தம் 3.26 சதவிகிதத்தில் இருந்து 1.5 சதவிகிதமாக குறைந்துள்ளது.
- சுகன்யா சம்ரிதி யோஜனா திட்டத்தின் கீழ் 59,491 பெண் குழந்தைகளுக்கு அஞ்சலகங்களில் சேமிப்பு கணக்கு துவங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பெற்றோர்கள் தங்களின் மகளின் எதிர்கால வாழ்விற்காக சேமிக்கும் பழக்கத்தை அரசு ஊக்குவித்துள்ளது.
- பெண் கல்வி கற்பதை உறுதி செய்யும் விதத்தில், பள்ளிகளில் ஒட்டுமொத்த கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு உள்ளன.

தமிழ்நாட்டின் பல அரசுத் துறைகளும் கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளும் ஒன்றிணைந்து செயல்பட்டத்தான் மூலம், கடலூர் மாவட்டத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் தொடர்ந்து இந்த மூன்று ஆண்டுகளில் அதிகரித்து வந்துள்ளது. இதனை அங்கீகரிக்கும் விதத்தில் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் நாள், புது டில்லியில் நடைபெற்ற தேசிய பெண்குழந்தைகள் தின விழாவில், மாண்பு மிகு பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் திருமதி மேனகா காந்தி அவர்களால் இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விருது வழங்கப்பட்டது.

### திட்ட விரிவாக்கம்

கடலூர் மாவட்டத்தில், பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளைப் படிக்க வைப்போம் என்ற திட்டத்தின் வெற்றிகரமான செயல்பாட்டினைத் தொடர்ந்து இந்த திட்டம் மேலும் 10 மாவட்டங்களுக்கு 2018-19 ஆம் ஆண்டு முதல் விரிவுபடுத்தப்பட்டு உள்ளது. அனைத்து நிலைகளிலும் பல்வேறு அரசுத்துறைகளுக்கு இடையேயான செயல்பாடுகளை ஒருங்கிணைத்து இந்த திட்டத்தினை செயல்படுத்த ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 50 இலட்சம் வீதம் மொத்தம் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது .

இந்தத் திட்டத்தை செயல்படுத்த கீழ்க்காணும் உத்திகள் நடைமுறைபடுத்தப்பட உள்ளன.



- பல துறைகளைச் சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும் விழிப்புணர்வு பயிற்சிகள் நடத்துதல்.
- குழந்தை பாலின விகிதம் குறைவாக உள்ள வட்டாரங்களுக்கு தனி கவனம் செலுத்துதல்.
- ஆரம்ப கால கர்ப்பம் சார்ந்த பதிவுகளை அதிகரித்தல்
- உயர்நிலைப் பள்ளிகளில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை உயர்த்துதல்.
- அவர்கள் கல்வி கற்க தேவையான தடைக் கற்களை அகற்றுதல் குழந்தை திருமண தடை சட்டத்தினை கூடுதல் கவனத்துடன் செயல்படுத்துதல்.
- பள்ளிகளை கழிப்பறை வசதி ஏற்படுத்துதல்.
- வயது வந்த பெண் குழந்தைகளுக்கு சுகாதார நாப்கின் வழங்குதல் மட்டுமின்றி, அதை அப்புறப்படுத்த தேவையான வசதிகள் ஏற்படுத்துதல்.

இதன் மூலம் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

## திட்ட செயல்பாடுகளை கண்காணித்தல்

மாநில அளவில் தலைமை செயலரின் தலைமையில் சுகாதாரம், பள்ளி கல்வித்துறை, சமூக நலத்துறை, ஊரகவளர்ச்சித் துறை உள்ளிட்ட பல துறைகளின் பிரதிநிதிகளை கொண்ட உயர் மட்ட செயற்குழு செயல்பட்டு வருகிறது. இதே போன்று மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சி தலைவர் தலைமையிலும், வட்ட அளவிலான மற்றும் கிராம அளவிலான குழுக்களும் உருவாக்கப்பட்டு திட்ட செயல்பாடுகளை கண்காணித்து வருகிறது.

## முடிவுரை

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் பெண் குழந்தைகளை காக்க தொட்டில் குழந்தை திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவியுடன் தங்கம் வழங்கும் திட்டம், வளரிளம் பெண்களுக்கு விலை இல்லாத சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டம், ஒன்பது மாதம் மகப்பேறு விடுப்பு, பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய அனைத்து மகளிர் காவல் நிலையம் என்று பல திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இது தவிர பணி புரியும் பெண்களுக்கான இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டத்துடன் அவர்கள் பாதுகாப்பாக தங்க அரசு விடுதிகள் ஆகியவற்றையும் நடத்தி வருகிறது. இப்படி கர்ப்ப காலம் முதல், அந்திம காலம் வரை பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் பல திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாட்டில், பெண் குழந்தைகளின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

கடலூர் மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு முதல் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் ஏழாம் நாள் பெண் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாளில் அரசு மருத்துவமனையில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு மட்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் கையெழுதிட்ட பாராட்டுச் சான்றிதழும் அந்த குழந்தைக்கு இலவசமாக ஒரு பலா மரக்கன்றும் வழங்கப்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டம் பண்ருட்டி பகுதியில் அதிக அளவில் பயிரிடப்படும் இந்த பலா மரம் நான்கு ஆண்டுகளில் பலன் கொடுக்க ஆரம்பிக்கும். அந்த சமயத்தில் பிறந்த பெண் குழந்தை பள்ளிக்கு செல்ல ஆரம்பிக்கும். இந்த குழந்தையின் வயது கூடும் பொழுது பலா மரத்தின் பலனும் அதிகரிக்கும்.

பண்ருட்டி வட்டம் நடுமேட்டுக் குப்பம் கிராமத்தில் மணி மற்றும் சந்தியா தம்பதியினருக்கு பிறந்த தீப்தி என்ற பெண் குழந்தைக்கு வழக்கப்பட்ட பலா மரக்கன்றினை அதன் தாய் கவனமாக பாதுகாத்து வளர்த்து வருகிறார். 17.2.2018 அன்று அந்த குழந்தையையும் பலா மரக்கன்றையும் பார்வையிட்ட பொழுது, அந்த தாய் பெருமையாக சொன்ன வாசகம்.

என் குழந்தை பெண்ணாக பிறந்ததால், அது பிறந்த அன்று மாவட்ட ஆட்சி தலைவர் நேரில் வந்து பார்த்து வாழ்த்து சொன்னார். இன்று இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு இன்னொரு ஐ.ஏ.எஸ் அதிகாரி என்னுடைய வீடு தேடி வந்து என் குழந்தைக்கு வாழ்த்து சொல்லி இருக்கிறார். இது எனக்கு அளவில்லாத பெருமையையும் சந்தோஷத்தையும் தருகிறது. எனவே நான் என் பெண் குழந்தையைப் படிக்க வைத்து அவளை ஒரு இந்திய ஆட்சி பணி அதிகாரியாக ஆக்குவேன் என்று சூளுரைத்தார்.

பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம் பெண் குழந்தைகளைப் படிக்க வைப்போம் என்ற இந்தத் திட்டத்தின் நோக்கம் நிறைவேறியதாகத் தோன்றியது.

எந்த ஒரு திட்டமும் அரசு அதிகாரிகள் மட்டுமே செயல்படுத்தும் பொழுது விளையும் பலன்களை விட, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஆதரவு இருக்கும் பொழுது திட்டப் பலன்கள் மேலும் அதிகரிக்கும். பல நேரங்களில் அரசுப் பணியாளர்கள் வெளியூரில் இருந்து வந்து பணி புரிபவர்களாக இருப்பார்கள். ஆனால் அதே ஊரிலேயே வசிக்கும் நபர்கள், அதிலும் பஞ்சாயத்து அமைப்பில் அதிகாரம் பெற்றவர்களாக இருந்துவிட்டால், அவர்களின் வார்த்தைக்கு கூடுதல் அழுத்தம் இருக்கும். வெறும் வார்த்தைகள் மட்டுமில்லாமல் கூடுதலாக பரிசும் கிடைத்தால் அது பழம் நழுவி பாலில் விழுந்த கதை தானே? அப்படி ஒரு செய்தி இதோ:

கடலூர் மாவட்டத்தின் மங்களூர் வட்டாரத்தில் இருக்கும் கல்லூர் பஞ்சாயத்தின் தலைவர் பொன் பெரியசாமி. இவர், அந்த கிராமத்தில் பிறந்த ஒவ்வொரு பெண் குழந்தையின் தாய்க்கும் தனது சொந்த செலவில் புடவையும், குழந்தைக்கு அரை கிராமில் தங்க மோதிரமும் பரிசாகக் கொடுத்தார். இதன் மூலம் திட்டத்தின் நோக்கம் எளிதாக அந்த கிராமத்தில் பரவி சாதகமான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது.

- **வே. அமுதவல்லி**, இ.ஆ.ப
ஆணையர், சமூக நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

●

## ஜூலை மாத இதழில்

# "எழுச்சி பெறும் இந்தியா"

**பற்றிய சிறப்புக் கட்டுரைகள் இடம்பெறும்.**

# பசுமை வழியில் நீலப்புரட்சி

- எஸ். பெலிக்ஸ்

இந்தியாவில் மீன் வளர்ப்பு மேம்படுவதற்கான நீலப்புரட்சி பசுமை வழியில் நடந்துவருகிறது. உலகு தழுவிய அளவில் உணவுக்காக மீன் வளர்ப்பு நடக்கிறது. இந்தப் பிரிவு ஆண்டுக்கு 7% என்ற வளர்ச்சி விகிதத்தில் வளர்ந்துகொண்டு வருகிறது. மீன் வளர்ப்பில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் உலக நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 சதவீத பங்களிப்பை மீன் வளர்ப்பு செய்கிறது. விவசாயம் 5.3% பங்களிப்பு செய்கிறது. இந்தியாவில் மொத்த மீன் உற்பத்தி 10.76 மில்லியன் டன்கள். உலக மீன் உற்பத்தியில் இது 4.4% ஆகும். உலக மீன் சந்தையில் இந்தியாவின் பங்கு 2.4%. இந்தியாவில் தனிநபர் மீன் நுகர்வு 9.8 கிலோ. பரிந்துரைக்கப்பட்டிருக்கும் தனி நபர் மீன் நுகர்வு 13 கிலோவாகும். 2020ஆம் ஆண்டில் இந்தியாவில் 3.21 மில்லியன் டன் மீன்கள் கூடுதலாகத் தேவைப்படும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேவையில் 90 சதவீதம், மீன் வளர்ப்பு மூலமாகவே நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கியமாக இறால், கெண்டை மீன்கள் ஈட்டித்தரும் அந்நிய செலாவணி மூலமாகவே தற்போது இந்தியாவில் மீன் வளர்ப்புக்கு ஏற்பு கிடைத்துள்ளது. மீன் வளர்ப்பு வளர்ச்சி விகிதம் பற்றிய பகுப்பாய்வு கர்நாடகா, மத்திய பிரதேசம் ஆகிய இரண்டு மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் கணிசமான வளர்ச்சி கண்டுள்ளது என்று தெரிவிக்கிறது. ஆந்திரப்பிரதேசம், கர்நாடக, கேரளா, மஹாராஷ்டிரா, ஒடிசா, மேற்கு வங்காளம் போன்ற சில மாநிலங்களில் கடல் மீன் உற்பத்தியை விடவும் உள்நாட்டு மீன்களின் உற்பத்தி கணிசமான வளர்ச்சி கண்டுள்ளது. ஆயினும், குஜராத், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் உள்நாட்டு மீன் உற்பத்தியைக் காட்டிலும், கடல் மீன்களின் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. எனவே, வளர்ந்து வரும் இந்தத் தொழில் துறை அந்தந்த மண்டலங்களின் தேவைகளுக்கு ஏற்ப எண்ணற்ற சவால்களை சந்தித்து வருகிறது.

பொருளாதார ரீதியாக இந்தத் துறை ஒப்பேறக்கூடியதாக இருக்கவேண்டுமானால் அமைப்பு முறை சார்ந்த, தொழில்நுட்பம் சார்ந்த தலையீடுகள் தேவைப்படுகின்றன.

### மீன் வளர்ப்பில் தற்போதைய சவால்கள்:

உள்நாட்டில் வளர்ப்பதற்கு தேவைப்படும் நீர்வாழ் மீன் இனங்களின் பற்றாக்குறை, மீன்குஞ்சு உற்பத்தியில் வீழ்ச்சி, அயற்பண்புகொண்ட மீன் இனங்களால் ஏற்படும் நோய்ப் பரவல், வேதிப்பொருள்கள், மருந்துப்பொருள்களின் அதிகமான பயன்பாடு, அச்சுறுத்தும் நோய்கள், மீன் குஞ்சுகள் வளர்ப்பில் தொழில்முனைவு இல்லாமல் இருத்தல், மீன்களின் அடைகாக்கும் பருவம், சிறுகுஞ்



சுப்பருவங்களில் ஊட்டச்சத்து சவால்கள், விலைமலிவான மூலப்பொருள்களின் பற்றாக்குறை, தொழில்நுட்ப வளர்ச்சிக்குறைவு, அலங்கார மீன் வளர்ப்பில் நிலவும் தேக்கநிலை, மண்டல சந்தைகளில் விலைகளில் ஏற்ற இறக்கம், சட்டப்பூர்வ சான்றளிப்பு இன்மை, மீன்வளர்ப்பினால் சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதிப்பு, பருவநிலைமாற்ற பாதிப்புகள், வளர்ப்பு மீன்களின் தரமற்ற குறைவான சதைப்பிடிப்பு, அறுவடைக்குப் பிந்தைய சங்கடங்கள், மூலவளங்களை அணுகுவதில் உள்ள சட்டப்பூர்வத் தடைகள், சமூகப் பொருளாதாரப் பிணக்குகள், உள்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை, மனித வளப் பற்றாக்குறை, தரவுகள் கிடைப்பதில் சுணக்கம், கடன் பெற முடியாத நிலை போன்றவை மீன்வளர்ப்பில் உள்ள தற்கால சவால்களாக இருக்கின்றன.

### சவால்களை சமாளிப்பதற்கான வழிகள்:


நீடித்து நிலவக்கூடிய வளர்ச்சியை உறுதிசெய்வதற்கு வள ஆதாரங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் திறமையை வளர்த்துக் கொள்ளவேண்டும். இதற்கு, தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். வளங்களின் பயன்பாடு, சமூக, பொருளாதாரக் கூறுகள், உலகமயம், நகர்மயம், மூலப்பொருள்களின் விலை (குறிப்பாக ஆற்றல்) ஆகியவற்றினால் மீன்வளர்ப்பு பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. இத்தகைய சவால்களை தொழில்நுட்ப சவால்கள், சுற்றுச்சூழல் சவால்கள், சந்தைப்படுத்துதல் சவால்கள், வள நிர்வாகச்சவால்கள் என்று பொதுமைப்படுத்தலாம்.

### தொழில்நுட்பம்:

மீன் வளர்ப்பு சிறப்பான வளர்ச்சி கண்டிருப்பதற்கு தொழில்நுட்பம் ஒரு முக்கியமான காரணமாகும். பலவிதமான வளர்ப்பு முறைகளுக்கும் ஏற்ற நவீன நீர்க்குட்டைக் கூண்டுகள் கழிவுகள் வெளியேறாத வண்ணம் அமைத்துத் தரப்படவேண்டும். மீன் வளர்ப்புக்கான தொழில்நுட்பங்கள் தற்போது ஆராய்ச்சி, மேம்பாட்டின் கவனத்தை ஈர்த்துவருகின்றன். ஒருங்கிணைந்த திறந்த நீர் மீன் வளர்ப்பு IMTA (Integrated Multitrophic Aquaculture) துடுப்புடைய மீன்கள், ஓடு உடைய மீன்கள், கடற்பாசிகள் ஆகிய பலவற்றையும் ஒன்றாக வளர்க்க உதவும். இதன் மூலம் நல்ல வருவாய் கிட்டும். இந்தத் தொழில்நுட்பத்தின் நம்பகத் தன்மையை சோதித்து அறிவதற்கு பல தரவுகள் தேவைப்படுகின்றன.



சந்தையில் தேவைப்படும் மீன் இனங்களை வளர்ப்பதற்கு உயிர்ப்புடைய கவனம் தேவைப்படுகிறது. ஊட்டச்சத்து வீணாவதைத் தடுப்பது அவசியம். சான்று தரப்பட்ட மீன் குஞ்சுகள், சுகாதாரமான இறக்குமதி அனுமதிகள் வலுப்படுத்தப்பட வேண்டும். உள்நாட்டு மீன், கடல் மீன் வளங்களின் இருப்பு பற்றியும், அவற்றை நீடித்துப் பயன்படுத்திக்



கொள்ளும் திறம் பற்றியும் வரையறை செய்யப்பட வேண்டும்.

சிறப்பான நிர்வாக நடைமுறைகளின் மூலம் மீன்வளர்ப்பு மேம்படுத்தப்பட வேண்டும். கூடுகளில் குஞ்சுகளை வளர்ப்பது மீன் உற்பத்திக்குத் துணைசெய்யும். விலைமதிப்புள்ள மீன்கள், நண்டுகள், இறால்கள் ஆகியவற்றின் உற்பத்திக்குத் துணை செய்வதற்கு இதனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கூண்டுகளில் வளர்க்கப்படும் மீன்களுக்கு திறம்பட உணவளிக்கும் aqua lingual போன்ற முறைகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். பிடிக்கப்படும் மீன்களை உயிரினங்கள் வளரும் சூழ்நிலைக்கு உகந்த வகையில் திறந்த வெளி நீரில் வளர்த்தல் மீன் வளர்ப்பில் புதிய சகாப்தத்தை உருவாக்கிடும். விவசாயத்தின் விரிவாக்கமாக சிறு, சிறு நீர் நிலைகளில் மீன் வளர்ப்பது சரிவரப் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

மீன்வளர்ப்புக்கு ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவு தேவை. தற்போதுள்ள மீன் உணவுகளைத் தவிர்த்து தாவரப் பொருள்களில் இருந்து ஊட்டசத்துப் பொருள்களை பிரித்துத்தரும் அணுகுமுறை அவசியம். செயற்கை அமினோ அமிலங்கள், என்சைம்கள், ஈர்ப்பிகள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம். மின்னணு கற்றை கதிர்வீச்சு, ஊட்டச்சத்திற்கு எதிரான இரசாயனக் கூறுகளைச் செயல் இழக்கச் செய்யும். இதன் மூலம் ஊட்டச்சத்து அதிகம் பெறப்பட்டு வளர்ச்சியும், உற்பத்தியும் அதிகரிக்கும். நீரின் வெப்பநிலை, உப்புத்தன்மை போன்றவற்றால் உருவாகும் அழுத்தங்களைக் குறைப்பதற்கு நியூட்ராசுயூடிக்கள்களைச் சேர்க்கலாம். மீன் வளர்ப்பில் பயன்படுத்தப்படும் பல்வேறு மருந்துகளின் பக்க விளைவுகள் மதிப்பீடு செய்யப்படவேண்டும்.

மீன்களின் சதைப்பிடிப்புத்தரம், கூடுதல் உணவு சேர்ப்பு மூலம் மேம்படுத்தப்படலாம். மீன்களுக்குத் தரப்படும் உணவில் உள்ள புரதத்தின் விகிதத்தை மாற்றியமைப்பதின் மூலம் மீன் உணவுப்பொருள்களைக் கெடாமல் பாதுகாத்து வைக்கும் கால அளவை அதிகரிக்க முடியும். மரபணு, உயிர்த்தொழில்நுட்பம் இவற்றின் துணைகொண்டு நோய்களை சமாளிப்பதற்கு வழிகள் காணப்படவேண்டும்.

**வள நிர்வாகம்:**

இந்தியாவில் மக்கள்தொகை மிகவும் அதிகம். பொருளாதாரம் மிக விரைவாக வளர்ந்துவருகிறது. எனவே மீன் வள ஆராய்ச்சிக்குப் போதுமான நிதி ஒதுக்கப்படவேண்டும்.

இந்தியாவில் 3.25 மில்லியன் ஹெக்டேர் பரப்பில் நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவற்றிள் உள்ள மீன்வளர்ப்பு வாய்ப்புகள் ஆராயப்படவேண்டும். இந்தியாவில் 8.56 மில்லியன் ஹெக்டேர் உள்நாட்டு உப்புநீர் வளம் உள்ளது. உப்பு நீரில் வளரக்கூடிய மீன்களை இவற்றில் வளர்க்கலாம்.



அலங்கார மீன்வளர்ப்பு பெரு நகரங்களில் பிரமிக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. பொது இடங்களில் மீன் காட்சியகங்கள் அமைப்பதற்கு நிதி தரப்படவேண்டும். இந்தத் துறையில் திறம் பெற்ற மனித வளம் அதிகரிப்பதற்கு துணை செய்யவேண்டும்.

**சுற்றுச்சூழல் பாதிப்பு நிர்வாகம்:**

இயற்கை நீர் நிலைகளில் அங்ககப் பொருள்கள் மாசாக சேர்வதைத் தடுப்பதற்கு நீரில் மெல்லுடலிகளை வளர்க்கலாம். இவை நைட்ரஜனை நீரில் இருந்து நீக்கிவிடும். மீன்வளர்ப்பில் உயிர் உரங்களைப் பயன்படுத்தலாம். பிறவிதமான மாற்றுவழிகளும் ஆராயப்படவேண்டும்.

**சந்தைப்படுத்துதல்:**

உயரிய தரம் உள்ள உற்பத்திப் பொருள்களுக்கான நுண் சந்தைகள் அமைக்கப்பட வேண்டும். ஏற்றுமதி வாய்ப்புகளும் திட்டமிடப்பட வேண்டும்.

மக்கள் வாங்க விரும்புவனவற்றை வளர்க்க வேண்டும். வேலை வாய்ப்புப் பெருக்கத்திற்கும், உயர் வருவாய்க்கும் மதிப்பு கூட்டப்பட்ட உற்பத்திப் பொருள்கள் தயாரிப்பு வழி செய்யும்.

மீன்வளர்ப்பு பற்றிய திறந்தவெளி கல்வி, பயிற்சி வசதிகள் உருவாகப்படவேண்டும். பொருத்தமான மீன்வளர்ப்புக் கொள்கைகள் உருவாக்கப்படவேண்டும்.

மீன் வளர்ப்பவர்களுக்கு அறிவியல் தொழில் நுட்பங்களை வழங்க வேண்டும். புதுமையாக்கப் பயிற்சிகள், விரிவாக்கப் பயிற்சிகள் ஆகியவற்றை வழங்கவேண்டும். சமூக ஊடகங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

**முடிவுரை:**

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் நீலப்புரட்சி ஏற்படுவதற்கு பலவிதமான நடவடிக்கைகள் தேவை. இதற்கென ஒரு தனி அமைச்சகம் உருவாக்கப்பட வேண்டும். உணவு உற்பத்தி வழிமுறைகளை பாதுகாக்கும் கடுமையான அமலாக்கங்களோடு தேசிய மீன்வளக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும். சுற்றுச்சூழலையும், பல்லுயிர்ப் பெருக்கத்தையும் பாதுகாக்கும் விதத்தில் ஒழுங்குமுறை அமைப்புகள் உருவாகப்பட வேண்டும். விழிப்புணர்வு, புரிதல் ஆகியவை ஏற்படுத்தப்பட்டு மீன்வளத்தைப் பெருக்குவதற்கான சிறப்பான நிர்வாக நடைமுறைகள் உருவாக வழி பிறக்கவேண்டும்.

---

**எஸ். பெலிக்ஸ்,** துணைவேந்தர், தமிழ்நாடு Dr.J.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம், தலைவர், உலக மீன்வளர்ப்பு கழகம்.

# தப்பியோடி வாழும் பொருளாதாரக் குற்றவாளிகள் சட்டம் 2018

- டாக்டர். வி. முரளி

இன்றைய உலகளாவிய பொருளாதார நிலைமை மிகவும் கொந்தளிப்பாக உள்ளது. இதோடுகூட நம் நாடும் உலகமயமாக்கலை ஏற்றுக்கொண்டுள்ளதால் தாக்கம் நமக்கும் தெரிகிறது. முன்பெல்லாம் உலகளவில் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகள் நம்மைத் தாக்காத வண்ணம் நம் பொருளாதாரம் அமைந்திருந்தது. தாராளமயமாக்கலுக்குப்பின் நாமும் தாக்கங்களை உணர்கிறோம். இந்திய வணிகம் பெருமளவு வளர்ந்து உலகெங்கிலும் வியாபித்துள்ளது. இதற்குத் தேவையான நிதிக்கு வங்கிகளை நாடுகிறார்கள். முன்பெல்லாம் சுணக்கம் காட்டிய வங்கிகள்கூட இப்போது கடன்களை வழங்குகின்றன. ஆனால், துரதிருஷ்டவசமாக இதன் கெடுபயன்களை அவர்கள் இப்போது உணர்கிறார்கள்.

இந்திய தண்டனைச் சட்டம், ஊழல் தடுப்புச் சட்டம், கருப்புப்பணத்தை வெள்ளைப்பணமாக மாற்றுவதைத் தடுக்கும் சட்டம் ஆகிய சட்டங்களிலிருந்தும் பொருளாதாரக் குற்றவாளிகளை எதிர்கொள்ள ஒரு புதிய சட்டம் தேவைப்படுகிறது. விஜய் மல்லையாவுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் இருக்கும் போது, அவர் நாட்டை விட்டு வெளியேறி ஒளிந்திருப்பதை அடுத்து, சட்டத்திற்குப் பயந்து பதுங்கி வாழும் பொருளாதாரக் குற்றவாளிகளின் சொத்துக்களை முடக்கி விற்று அவர்கள் செலுத்த வேண்டிய கடனை ஈடு செய்வதற்கான சட்டம் இயற்றப்படும் என்று தனது பட்ஜெட் உரையில் நிதி அமைச்சர் கூறினார். நீரவ் மோடி மற்றும் மெஹூல் சோக்ஸி ஆகியோர் செய்த பொருளாதார மோசடியினால் பஞ்சாப் நேஷனல் வங்கி பாதிக்கப்பட்டதை அடுத்து மத்திய அமைச்சரவை இப்படிப்பட்ட ஒரு சட்டத்திற்கு அனுமதி அளித்து பொருளாதார மோசடிக்காரர்களை எதிர்கொள்ளவும், முதலிடுவோர் மற்றும் வங்கிகளில் கணக்கு வைத்திருப்போருக்கு நம்பிக்கை ஊட்டவும் செய்திருக்கிறார்கள்.

## இந்த சட்டத்தின் அடிப்படையும் குறிக்கோள்களும்

வியாபாரங்களில் சரிவு ஏற்படுவதினால் கடன் வாங்கியோர் திரும்பக் கட்டமுடியாமல் வங்கிகள் பெரிதும் பாதிப்படைகின்றன. நிலைமை மோசமாகும் போது, இப்படிப்பட்ட பல மோசடிக்காரர்கள் நாட்டை விட்டே ஓடிவிடுகிறார்கள். சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு பதிலாக இந்த பெரும் பணக்காரர்கள், சட்டத்தின் தண்டனை பாயும் முன்பே சட்ட அமைப்புகளிடமிருந்து தப்பி வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகின்றனர். அவர்கள் கட்டவேண்டிய கடன் பலகோடி ரூபாய்களாகும். இந்திய வங்கிகளுக்கும், குற்றங்களை கண்டுபிடித்து தண்டனை




வழங்கும் அமைப்புகளுக்கும் கடுக்காய் கொடுத்து கொள்ளையடித்த பணத்தை வெளிநாடுகளில் வங்கிகளில், பலவிதங்களில் பதுக்கி வைத்து இந்தக் குற்றவாளிகள் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்கிறார்கள். தற்போதுள்ள சிவில் மற்றும் குற்றவியல் தடுப்புச் சட்டங்கள் இவர்களை பிடிக்க போதுமானதாக இல்லை.

வெளிநாட்டில் பதுங்கி இருக்கும் இவர்களை இந்தியாவிற்கு கொண்டுவருவது

மிகவும் கடினமானதாகவும் பல ஆண்டுகள் எடுப்பதாகவும் உள்ளது. இப்படி வெளிநாடுகளுக்கு ஓடும் பொருளாதாரக் குற்றவாளிகளை கடுமையாக தண்டிக்க தற்போது சட்டத்தில் உள்ள எல்லா குறைபாடுகளையும் நீக்கி, கடுமையான சட்டத்தை நிறைவேற்ற அரசு முடிவு செய்துள்ளது. இந்தக் குற்றவாளிகள் சேர்த்து வைத்துள்ள சொத்துக்களை அரசு எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் இவர்கள் சட்டத்திலிருந்து தப்பியே இருப்பார்கள். தற்போது, பொருளாதாரக்குற்றங்கள், பலவிதமான பிறவகைக்குற்றங்களில் ஈடுபட்டிருப்போர் வெளிநாடுகளுக்கு தப்பி ஓட நினைத்தாலும் அவர்களை நாம் எதிர்கொள்ள முடியும். உலக நாடுகள் மாநாட்டின் தீர்மானங்களின்படி ஊழல் செய்தவர்களின் சொத்துக்களை நீதிமன்றத் தீர்ப்பிற்கு முன்பே ஒடுக்கமுடியும். ஆகவே, பொருளாதாரக் குற்றவாளிகள் அவர்கள் சார்ந்த வழக்குகள் நீதிமன்றங்களில் இருக்கும் போதோ, அதற்கு முன்போ தப்பி ஓடுவதைத் தடுக்க இந்த சட்டம் முயல்கிறது.

நடவடிக்கைகளை எதிர்கொள்ளாமல் ஒளிந்து இருக்கும் பொருளாதாரக் குற்றவாளிகள் சட்டம், 2018 நாடாளுமன்ற மக்களவையில் 12 மார்ச், 2018இல் அறிமுகம் செய்யப்பட்டது. “சட்டத்திற்கு பயந்து ஒளிந்து சட்ட நடவடிக்கைகளிலிருந்து விலகி, நீதிமன்றங்களின் எல்லைக்கு வெளியே பதுங்கியிருப்பவர்களைத் தடுக்கவும், இந்தியாவின் சட்ட செயல்பாட்டைப் பாதுகாக்கவும் போதிய நடவடிக்கைகள் உருவாக்கப்படுகின்றன” என்று இந்த சட்ட வடிவின் நோக்கம் விவரிக்கப்பட்டுள்ளது.

**சட்டம்**

இந்த சட்டத்தின்கீழ் ரூ.100 கோடிக்கும் மேல் பொருளாதார குற்றம் இழைத்தவர்கள் விசாரிக்கப்படுவார்கள். இந்த சட்டத்திற்குப் பயந்து பதுங்கி வாழும் பொருளாதாரக் குற்றவாளிகள் கட்டாயமாக இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டு, அவர்கள் செய்த குற்றங்களுக்காக விசாரிக்கப்படுவார்கள். அவர்களுடைய சொத்தும் முடக்கப்படும். இதனால், இப்படி ஒளிந்திருக்கும் குற்றவாளிகளின் சொத்துக்களால் கடன் வழங்கிய வங்கிகள் பயன்பெறும்.

சட்டத்திற்கு பயந்து ஒளிந்திருப்பவர் என்று அறிவிக்கப் படுவதற்கு முன்பாகவே குற்றம் சாட்டப்பட்டவர், இந்தியா திரும்பி சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தின் முன் சரணடைந்தால் சொத்துக்கள் முடக்கத்திலிருந்து அவருக்கு விலக்கு அளிக்கப்படும். இந்த சட்டத்தின் கீழ், பொருளாதாரக் குற்றவாளிகள் வழக்கறிஞர்கள் மூலம் நீதிமன்றங்களில வாதாடவும் சாட்டப்பட்டுள்ள குற்றங்களுக்கு பதிலளிக்கவும், இந்தியாவில் இருந்தாலும், வெளிநாடுகளில் இருந்தாலும் சம்மன்கள் அனுப்பவும் சட்டம்சார்ந்த தகுந்த பாதுகாப்புகள் அளிக்கப் பட்டுள்ளன. இந்த சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ள சொத்துக்களைப் பராமரிக்கவும், கடன்களை திருப்பிக் கொடுப்பதற்காக அவைகளை விற்கவும் ஒரு நிர்வாகியை அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த சட்டம், கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்குவதைத் தடுக்கும் முந்தைய சட்டங்களின் அடுத்த கட்ட நடவடிக்கையாக அமைந்துள்ளது.

**சட்டத்திற்கு பயந்து ஒளிந்திருக்கும் பொருளாதாரக் குற்றவாளி என்பவர் :**

குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு குற்றத்திற்காக இந்தியாவில் உள்ள ஏதாவது ஒரு நீதிமன்றத்தின் மூலம் கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருப்பவர்.

i. குற்றவியல் விசாரணையைத் தவிர்க்க நாட்டைவிட்டு வெளியேறுபவர் அல்லது

ii. வெளிநாட்டில் இருந்து கொண்டு குற்றவியல் விசாரணையில் பங்குபெற இந்தியாவிற்கு வராமல் இருப்பவர்.

**செயல்பாடு**

இயக்குநர் என்பவர், கருப்புப்பணத்தை வெள்ளைப் பணமாக்குவதை தடுக்கும் சட்டம் 2002இன் பிரிவு 49 (1) இன் கீழ் நியமிக்கப்பட்ட இயக்குநர். துணை

இயக்குநர் என்பவர், கருப்புப்பணத்தை வெள்ளைப் பணமாக்குவதை தடுக்கும் சட்டம் 2002இன் பிரிவு 49 (1) இன் கீழ் நியமிக்கப்பட்ட துணை இயக்குநர்.

இப்படி நியமிக்கப்பட்ட இயக்குநரோ, துணை இயக்குநரோ கருப்புப்பணத்தை வெள்ளைப் பணமாக்குவதை தடுக்கும் சட்டம் 2002இல் குறிப்பிட்டுள்ள சிறப்பு நீதி மன்றத்தின் முன்பாக, குறிப்பிட்ட நபர் சட்டத்திற்கு பயந்து ஒளிந்திருக்கும் பொருளாதாரக் குற்றவாளி என்பதை தாக்கல் செய்யவேண்டும். இந்த மனுவில், கீழ்க்கண்டவை இருக்க வேண்டும்:

i. ஒரு பொருளாதாரக் குற்றவாளி சட்டத்திற்குப் பயந்து எப்படி ஒளிந்திருக்கிறார் என்பதை விளக்க வேண்டும்.

ii. அவர் எங்கே இருக்கிறார் என்பது பற்றி தகவல் தெரிவிக்கவேண்டும்.

iii. அவர் செய்த எந்தப் பொருளாதாரக் குற்றத்தின் மூலமாக எந்தெந்த சொத்துக்களை சேர்த்திருக்கிறார் எவைகளை முடக்கவேண்டும் என்ற பட்டியல்.

iv. மற்றவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள முடக்கப்பட வேண்டிய சொத்துக்கள் அல்லது வெளிநாடுகளில் உள்ள சொத்துக்கள்.

v. அப்படிப்பட்ட சொத்துக்களில் உரிமை கோரும் நபர்களின் பெயர்கள். (இந்த சொத்துக்களில் சிறிதளவு உரிமை கோருபவர் உட்பட உரிமை கோருபவர்கள் எல்லோரும்)

மேற்கண்ட தகவல்கள் அடங்கிய மனு பெறப்பட்டபின் சிறப்பு நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக, இந்த சட்டத்தின் 10வது பிரிவின்கீழ ஒரு அறிவிப்பு வெளியிட்டு அந்த அறிவிப்பு பிறப்பிக்கப்பட்ட ஆறு வாரத்திற்குள் அவர் அந்த சிறப்பு நீதிமன்றத்தின் முன் ஆஜராகவேண்டும் என்று அறிவிப்பு செய்திடும். அப்படி அவர் ஆஜராகவில்லை என்றால், சட்டத்திற்கு பயந்து ஒளிந்திருப்பவர் என்பதாக அவர் பிரகடனப்படுத்தப்பட்டு, இந்த சட்டத்தின்படி அவருடைய சொத்துக்கள் முடக்கப்படும். அந்த நபர் தகுந்த நேரத்திற்குள் குறிப்பிட்ட சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜரானால் இந்த சட்டத்தின்கீழ் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

## சொத்துக்கள் முடக்கம், கையகப்படுத்துதல்

மேற்கூறப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தின் ஆணையைப் பெற்று இயக்குநர் அல்லது துணை இயக்குநர் சம்மந்தப்பட்ட சொத்துக்களை முடக்கலாம்.

## தற்காலிக முடக்கம்

சிறப்பு நீதிமன்றத்தின் முன் இயக்குநர் அல்லது துணை இயக்குநர் மனு தாக்கல் செய்வதற்கு முன்பாகவும்இ சம்மந்தப்பட்ட சொத்துக்கள் முடக்கப்படுவதற்கு முன்பாகவும் வேறுவிதத்தில் அவை மாற்றிவிடப்படக்கூடும் என்ற சந்தேகம் எழும்போது, முன்னதாகவே தற்காலிக முடக்கம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், அப்படி தற்காலிக முடக்கம் செய்த 30 நாட்களுக்குள் இயக்குநர் அல்லது துணை இயக்குநர் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் விவரங்களைப் பதிவு செய்யவேண்டும். சிறப்பு நீதிமன்றம் நீட்டித்தாலன்றி இந்த தற்காலிக முடக்கம் 100 நாட்கள் வரை மட்டும் நீடிக்கும்.

அப்படி சொத்துக்கள் முடக்கப்படும் போது, சம்மந்தப்பட்ட பொருளாதாரக் குற்றவாளி அந்த சொத்துக்களை அனுபவிக்கலாம் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. வழக்கு முடிந்தபின் சம்மந்தப்பட்ட நபர் சட்டத்திற்கு பயந்து ஒளிந்திருக்கும் பொருளாதாரக் குற்றவாளி இல்லை என்று நிரூபணமானால் சொத்து முடக்கம் நீக்கப்படும்.

## இயக்குநரின் அதிகாரங்கள்

இந்த சட்டத்தின்கீழ் இயக்குநர் என்று குறிப்பிடப்பட்டவருக்கு சிவில் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒருவர், சட்டத்திற்கு பயந்து ஒளிந்திருக்கும் பொருளாதாரக் குற்றவாளி என்று நம்பப்படுவதற்கான ஆதாரங்கள் இருக்கும் நிலையில், (அவற்றை எழுத்தில் பதிவு செய்யவேண்டும்) அவர் தன் பகுதிக்கு உட்பட்ட எந்தவொரு இடத்திற்குள்ளும் நுழையலாம். பிற பகுதிகளில் நுழைவதற்கு அந்தப்பகுதிக்கு பொறுப்புள்ள அதிகாரியின் அனுமதி தேவை.

அப்படி அவர் உட்புகும் இடத்தில் அதன் சொந்தக்காரரையோ, அங்கு வேலை செய்பவரையோ, அல்லது அங்கிருக்கும் பிறரையோ தான் அங்குள்ள பதிவேடுகள், சொத்துக்கள் ஆகியவற்றையோ சோதனை செய்யவும், பொருளாதாரக் குற்றத்தால் விளைந்த சொத்துக்கள் அங்கிருக்கிறதா என்பதைக் கண்டறியவும் அனுமதி கோரமுடியும். அங்கு உள்ள பதிவேடுகள், பிற பத்திரங்கள் ஆகியவற்றில் குறிப்பீடுகள் செய்யவும், அவற்றின் பிரதிகளை எடுக்கவும், சொத்துக்களைப் பட்டியலிடவும் மேற்கூறப்பட்ட நபர்களின் வாக்குமூலத்தைப் பதிவு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### சட்டத்திற்கு பயந்து ஒளிந்திருக்கும் பொருளாதாரக் குற்றவாளி என அறிவிப்பு

மனுவின் மீது விசாரணை நடத்தியபின் சிறப்பு நீதிமன்றம் ஒருவரை சட்டத்திற்கு பயந்து ஒளிந்திருக்கும் பொருளாதாரக் குற்றவாளி என அறிவிக்கலாம். அதன்பிறகு, அந்தக் குற்றத்தின் பயனாக பெறப்பட்டுள்ள சொத்துக்கள் அவர் பெயரிலோ, மற்றவர் பெயரிலோ இருந்தாலும், இந்தியாவில் இருந்தாலும் வெளிநாடுகளில் இருந்தாலும் அவற்றைக் கைப்பற்ற முடியும். அப்படி கைப்பற்றப்பட்ட அனைத்து சொத்துக்களின் உரிமைகளும், மத்திய அரசுக்கு வந்துவிடும். அந்த சொத்துக்கள் மீது பிறர் யாருக்கும் உரிமை இருக்காது.

### நிர்வாகி

இந்த சட்டத்தின் 15வது பிரிவின் கீழ் மத்திய அரசு, இந்த சொத்துக்களின் மேலாண்மைக்காக ஒன்று அல்லது பல நிர்வாகிகளை நியமிக்கமுடியும் (அவர்கள் மத்திய அரசின் இணைச் செயலாளர்கள் நிலைக்குக் குறைவாக இருக்கக்கூடாது). அப்படிப்பட்ட நிர்வாகி, தன் பொறுப்புக்கு அளிக்கப் பட்டிருக்கும் சொத்துக்களை நிர்வகிப்பார். மத்திய அரசு, அறிவிக்கும் உத்தரவுகளின்படி அவற்றை அவர் விற்கலாம். ஆனால், நீதிமன்ற உத்தரவுக்கு அடுத்த 90 நாட்களுக்குள் இதை அவர் செய்யக்கூடாது.



### மேல்முறையீடு

இந்த சிறப்பு நீதிமன்றத்தின் ஆணைக்கு எதிரான மேல்முறையீட்டை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யலாம். சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இதைச் செய்யவேண்டும். 30 நாட்களுக்குள் அவரால் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்ய இயலாத காரணங்கள் இருக்கும் நிலையில் உயர்நீதிமன்றம் மேலும் அவகாசம் கொடுக்கலாம். ஆனால், சிறப்பு நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்குப்பின் 90 நாட்களுக்கு மேல் இந்த அனுமதி கிடைக்காது.

### முடிவாக

பொருளாதாரக் குற்றங்களை இழைத்துவிட்டு வழக்குகளிலிருந்து தப்பிப்பதற்காக வெளிநாடுகளுக்குச் சென்று ஒளிந்திருப்பவர்களின் சொத்துக்கள் இந்த சட்டத்தினால் முடக்கப்படும் வாய்ப்புள்ளது. அவர்களின் சொத்துக்கள் விற்கப்படும் போது, அரசுக்கும் பலன்கள் கிடைக்கும். இதுபோன்ற குற்றங்களைச் செய்ய நினைப்பவர்களுக்கு ஒரு அச்சுறுத்தலாகவும் இருக்கும்.

**- டாக்டர். வி. முரளி, தலைவர்,** அகில இந்திய வரி செலுத்துவோர் சங்கம். முன்னாள் தலைவர், தென்னிந்திய பகுதி கவுன்சில், இந்திய சார்ட்டர்டு அவுண்டன்ட்ஸ் இன்ஸ்டிடியூட்., தென்னிந்திய பகுதி கவுன்சில், இந்திய காஸ்ட் அக்வுணட்ஸ் இன்ஸ்டிடியூட்.,

•

## EMPLOYMENT NEWS வார இதழுக்கு சந்தா செலுத்துவது எப்படி?

EMPLOYMENT NEWS இதழ் அச்சிடப்பட்ட பத்திரிகையாகவும், மின்னிதழாகவும் கிடைக்கிறது. இவற்றில் ஏதேனும் ஒன்றிற்கோ அல்லது இரண்டுக்குமாகவோ நீங்கள் சந்தா செலுத்தலாம்.

Employment News WEEKLY

Online e-Version

EMPLOYMENT NEWS மின் இதழுக்கு சந்தா செலுத்த www.employmentnews.gov.in

என்ற இணைய முகவரியைப் பயன்படுத்தி உள்ளே நுழையுங்கள். eversion என்ற பொத்தானையோ, அல்லது https://en.eversion.in என்ற இணைப்பின் மூலமோ சந்தா செலுத்தலாம்.

EMPLOYMENT NEWS மின் இதழின் ஆதாயங்கள் என்னென்ன?

அச்சு வடிவில் வெளிவரும் அதே இதழ் மின் இதழ் வடிவிலும் கிடைக்கிறது.

அனைத்து பதிப்புகளையும் ஒரே இடத்தில் காணமுடியும்.

சிறிதளவு கூடுதல் கட்டணம் செலுத்தி பழைய இதழ்களைப் படிக்கலாம்.

தேடிப் பார்த்தல், பெரிதாக்கிப் பார்த்தல், சேமித்து வைத்தல், பதிவிறக்கம், பிரதிஎடுத்தல் ஆகிய வசதிகளும் உள்ளன.

Employment News WEEKLY

EMPLOYMENT NEWS அச்சில் வெளிவரும் இதழுக்கு சந்தா செலுத்துவது எப்படி?

www.employmentnews.gov.in என்ற இணைய முகவரியைப் பயன்படுத்தி உள்ளே நுழையுங்கள். Print version என்ற பொத்தானையோ அல்லது https://en.eversion.in என்ற இணைப்பின் மூலமோ சந்தா செலுத்தலாம்.

பதிவு செய்துகொள்ளுங்கள் – பணம் செலுத்துங்கள் – சந்தாதாரர் ஆகுங்கள்

| சந்தாத் திட்டங்கள் | அச்சாகி வரும் இதழ் | மின் இதழ் |
|---|---|---|
| 1 ஆண்டு | ரூ. 530/- | ரூ. 400/- |
| 2 ஆண்டுகள் | ரூ.1000/- | ரூ. 750/- |
| 3 ஆண்டுகள் | ரூ.1400/- | ரூ.1050/- |

சந்தாத் தொகையை EMPLOYMENT NEWS, GOVERNMENT OF INDIA, PAYABLE AT NEW DELHI என்று எடுக்கப்பட்ட வங்கி கேட்புக் காசோலை (DEMAND DRAFT) மூலமாகவும் செலுத்தலாம்.

காசோலைகளை அனுப்பவேண்டிய முகவரி:

EMPLOYMENT NEWS, PUBLICATION DIVISION, CIRCULATION SECTION, MINISTRY OF INFORMATION AND BROADCASTING, GOVERNMENT OF INDIA, 7TH FLOOR, SOOCHNA BHAVAN, CGO COMPLEX, LODHI ROAD, NEW DELHI 110 003.

சந்தா செலுத்தியதிலிருந்து 3 முதல் 4 வாரங்கள் கழித்தே பத்திரிகை வந்து சேரும். EMPLOYMENT NEWS இதழ் அஞ்சல்துறையின் மூலம் சாதாரண அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

# பிரதமமந்திரி பாரத மக்கள் மருந்துத்திட்டம்
# பிரதமமந்திரி பாரதிய ஜன ஔஷதி பரியோஜனா (PMBJP)

- பிப்லப் சட்டர்ஜி

## அறிமுகம்


நாடு சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகளுக்குப் பிறகும், 40 சதவிகித மக்களால்தான் நவீன மருந்துகளை வாங்கமுடிகிறது என்பது கவலை அளிக்கும் செய்தியாகும். பிராண்ட் மருந்துகளின் சந்தை என்பது இந்தியாவில் 1,20,000 கோடி ரூபாய் அளவில் உள்ளது. இந்த பிராண்ட் மருந்துகளை 10இல் 6 பேர் வாங்க இயலாமல் உள்ளனர். அதே சமயத்தில், அடிப்படை மருந்துகளை சுமார் 200 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் மற்ற நாடுகளைக் காட்டிலும் இந்தியா முன்னிலையில் உள்ளது. உலகளவில் பயன்படுத்தப்படும் 6 மருந்துகளில் ஒன்று இந்தியாவில் தயாரிக்கப்பட்டது. நம்நாட்டில் 10 பேரில் 6 பேருக்கு நல்ல மருந்து கிடைக்காத அதே நேரத்தில் உலகத்தின் நான்கு பெரும் மருந்து உற்பத்தி நாடுகளில் இந்தியா ஒன்றாக விளங்குவது ஒரு நிதர்சன நிலைமையாகும். இந்த நிலைமையைச் சீராக்க பிரதமமந்திரி பாரத மக்கள் மருந்துத்திட்டம் முனைகிறது. ஜாதி, மத, பொருளாதார பேதமின்றி எல்லா இந்திய குடிமக்களும் வாங்கக்கூடிய விலையில் தரமான மருந்துகளை வழங்குவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் எல்லா மக்களுக்கும் சுகாதாரப் பாதுகாப்பை வழங்குவதே நோக்கமாகும்.

எல்லா மக்களுக்கும் அவர்கள் வாங்கக்கூடிய விலையில் அடிப்படை மருந்துகளை வழங்க மத்திய அரசின் இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மருந்து உற்பத்தித் துறை, மக்கள் மருந்துத் திட்டத்தை நவம்பர் 2008இல் துவக்கியது. இந்தத் திட்டத்தை பொதுத்துறையில் மருந்துகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் கூட்டமைப்பு செயல்படுத்துகிறது. ஆனால், 2015வரை இது போன்ற பிரதமமந்திரி பாரத மக்கள் மருந்துத் திட்டமையங்கள் 99 மட்டுமே செயல்பட்டன. செப்டம்பர் 2015இல் மக்கள் மருந்துத் திட்டம், பிரதம மந்திரி மக்கள் மருந்துத்திட்டம் என்று மாற்றப்பட்டது. இந்தத் திட்டத்தை மேலும் முனைப்பாக்க டிசம்பர் 2016இல் அது பிரதமமந்திரி பாரத மக்கள் மருந்துகள் திட்டம் என்று மாற்றியமைக்கப்பட்டு நாடெங்கிலும் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது.

## திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- ஏழைகள், வறுமையில் உழல்வோர் உள்ளிட்ட எல்லா மக்களுக்கும் தரமான மருந்துகளை கிடைக்கச் செய்தல்.
- அடிப்படை மருந்துகளை வழங்குவதன் மூலம் தனிநபர் மருத்துவ சிகிச்சையின்

இந்திய மருந்துப் பொருள்கள் கண்காட்சி 2018



செலவைக் குறைத்தல். உலக சுகாதார நிறுவனத்தின் அமைப்புகள் மற்றும் பொதுத்துறை மருந்து உற்பத்தி நிறுவனங்களின் மூலம் தரமான மருந்துகள் கொள்முதல் செய்து, மருந்துகள் தயாரிப்புக் கூடங்களின் தேசிய தர அங்கீகார நிறுவனத்தின் மூலம் விநியோகிக்கப்படும்.

- விலை உயர்ந்த மருந்துகள்தான் தரமான மருந்துகள் என்ற பொதுமக்களின் தவறான எண்ணத்தைப் போக்க விழிப்புணர்வு இயக்கங்கள் மேற்கொள்ளுதல்.
- அரசின் பொதுத்துறை மற்றும் தனியார்துறை நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பிற அமைப்புகளோடு இணைந்து பொதுவான திட்டத்தைச் செயல்படுத்துதல்.
- எல்லா மருத்துவ சிகிச்சைகளுக்கும் தேவையான அடிப்படை மருந்துகளை வழங்கி, சிகிச்சை செலவைக் குறைப்பது.
- தனிநபர்கள் மக்கள் மருந்துகள் மையத்தைத் துவக்க ஊக்குவித்து, வேலை வாய்ப்பை அதிகரித்தல்.

### இத்திட்டத்தால் தொழில் முனைவோருக்கும் மையத்தை நடத்துபவர்களுக்கும் பலன்கள்

- இந்த மையத்தை செயல்படுத்துபவர்களுக்கு, அதற்குத் தேவையான இடத்தை இலவசமாக வழங்குபவர்களுக்கு ரூ.2.5இலட்சம் நிதி ஆதரவு வழங்கப்படும்.
- இரயில்வே, மாநில போக்குவரத்துக்கழகங்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள், தபால்நிலையங்கள், பாதுகாப்பு மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவை இந்த மையத்திற்குத் தேவையான இடத்தை இலவசமாக அளித்தால், இந்த மையத்தை நடத்த ரூ.2.5 இலட்சம் நிதி ஆதரவு அளிக்கப்படும்.
- இந்த மையத்தை துவக்கி நடத்தும் எல்லா தனி நபர் தொழில் முனைவோருக்கும் ரூ.2.5இலட்சம் நிதி ஆதாரமாக வழங்கப்படும்.
- ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் ஷெட்யூல்டு பழங்குடி வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் இந்த மையத்தைத் துவக்கும் போது ஆரம்பத்தில் கூடுதலாக ரூ.50,000 மதிப்பிலான மருந்துகள் இலவசமாக வழங்கப்படும்.

### 2016-17 மற்றும் 2017-18இல் இந்தத் திட்டத்தின் கீழ் அடைந்த முன்னேற்றங்கள் (31.3.2018 வரை)

- இந்த மையத்தின் மூலம் 700க்கும் மேற்பட்ட மருந்துகளும், 154 மருத்துவ சிகிச்சை சார்ந்த பொருட்களும் கிடைக்கின்றன. விரைவில் இது 1000 மருந்துகள் என்று உயரும்.
- மத்தியக்கிடங்கில் போதுமான அளவில் அடிப்படை மருந்துகளும், பொருட்களும் உள்ளன. நாட்டில் உள்ள எல்லா மையங்களுக்கும் இவை சென்றடைய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எல்லா மைங்களுக்கும் இந்த மருந்துகளை வழங்க எட்டு விநியோக முகவர்கள் அமைக்கப்பட்டுள்ளனர்.
- அனைத்து மாநிலங்களிலும் 54 விநியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- மருந்துகளைத் தொடர்ந்து வழங்குவதற்கு சிறப்பான அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த பல மாநில அரசுகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.

### மருந்துகள் கிடைக்கும் நிலைமை

பிரதமமந்திரி பாரத மக்கள் மருந்துமையங்கள் 33 மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் செயல்படுவது எண்ணிக்கையில் 3500ஆக உயர்ந்துள்ளது.

- ஒவ்வொரு மையத்திலும் தினமும் சராசரி ரூ.3300 அளவிற்கு மருந்துகள் விற்கப்படுகின்றன. பிராண்டு மருந்துகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது விற்பனை மதிப்பு ரூ.15000 அளவில் இருக்கும்.



- ஒவ்வொரு நாளும் நான்கு அல்லது ஐந்து மையங்கள் நாட்டில் துவக்கப்படுகின்றன.
- பிரதமமந்திரி பாரத மக்கள் மருந்துகள் மையங்கள் தற்போது அனைத்து மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் செயல்படுகின்றன.
- இந்தத் திட்டம் நாட்டிலுள்ள 718 மாவட்டங்களில் 584 மாவட்டங்களில் செயல்படுகிறது.

**பிரதமமந்திரி பாரதிய ஜனஔஷதி பரியோஜனா (PMBJP)**

பிரதமமந்திரி பாரத மக்கள் மருந்துத்திட்டம் செயல்படுவதை அடுத்து தரமான மருந்துகள் விலை குறைந்து இவை ஏழைமக்கள் உள்ளிட்ட பெரும்பான்மையினருக்கும் சென்றடைந்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் மருந்துகளின் விலைகள் 50 முதல் 90 சதவிகிதம் வரை குறைந்திருப்பதால் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளது போல மக்களுக்கு ரூ.400 கோடி அளவிற்கு சேமிப்பு கிடைத்துள்ளது.

| வரிசை எண் | மருந்தின் பெயர் | சிகிச்சைத் துறை | சராசரி சந்தை விலை ரூ. | பிரதம மந்திரி பாரத மக்கள் மருந்துத் திட்ட விலை | % சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | அம்லோடிபின் 5 மிகி 10 மாத்திரைகள் | இதய இரத்தநாளத்துறை | 20 | 3.24 | 83.80 |
| 2 | ராமிப்ரில் 5 மிகி 10 மாத்திரைகள் | இதய இரத்தநாளத்துறை | 80 | 8.53 | 89.33 |
| 3 | பாக்லிடாக்சல் ஊசி 100 மிகி | புற்றுநோய் | 3458 | 540 | 84.38 |
| 4 | பான்டாபிரசோல் 40மிகி + டாம்பெரிடோன் 30மிகி கேப்சுல் | வயிறு குடல்சார் மருத்துவம் | 103.30 | 18.48 | 82.11 |
| 5 | க்ளிம்பிரிட் 2மிகி மாத்திரைகள் | நீரிழிவு நோய் | 52.90 | 3.54 | 93.20 |
| 6 | டீரமடால் 50மிகி மாத்திரைகள் | வலி நிவாரணி வீக்கம் தடுப்பு | 29.77 | 2.52 | 91.53 |

- **பிப்லப் சட்டர்ஜி**, தலைமை செயல் அலுவலர்,
பொதுத்துறை மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் அமைப்பு,
பிரதமமந்திரி பாரதிய ஜனஔஷதி பரியோஜனா
(BPPI - PMBJP)

●

# சந்தாதாரர் ஆவதற்கான மாதிரிப்படிவம்
## (புதிய சந்தாதாரர்/சந்தா புதுப்பிப்பு/முகவரி மாற்றம்)

**நான் சந்தா செலுத்தவிரும்புகிறேன்:**

Yojana/ Kurushetra/ Ajkal இதழ்கள் ஒவ்வொன்றிற்கும்: ஓராண்டுக்கு: ரூ.230/- இரண்டு ஆண்டுகளுக்கு: ரூ.430/- மூன்று ஆண்டுகளுக்கு: ரூ.610/-

Balbharathi இதழுக்கு சந்தா: ஓராண்டுக்கு: ரூ.160/- இரண்டு ஆண்டுகளுக்கு: ரூ.300/- மூன்று ஆண்டுகளுக்கு: ரூ.420/-

நீங்கள் சந்தா செலுத்த விரும்பும் இதழின் பெயரையும், சந்தா செலுத்தும் காலஅளவையும் குறிப்பிடவும்:

-----------------------------------------------------------------------------------------------------------------------------

DEMAND DRAFT/POSTAL ORDER/MONEY ORDER NO. ---------------------------------------------------

DATE: -------------------

சந்தாதாரரின் பெயர்:-----------------------------------------------

முகவரி: ------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------

அஞ்சல் குறியீட்டு எண்: ------------------------

சந்தாதாரர் வகை: ஆசிரியர்/மாணவர்/நிறுவனம்/மற்ற வகையினர்

சந்தா கட்டணத்தை காசோலையாக (DEMAND DRAFT) செலுத்துவோர், ADG (I/C), PUBLICATIONS DIVISION, MINISTRY OF INFORMATION AND BROADCASTING, GOVERNMENT OF INDIA என்ற பெயரில் புதுதில்லியில் பணம் பெறத்தக்கதாக காசோலை எடுத்து அனுப்பவேண்டும். மேற்காணும் படிவத்தையும் நிரப்பி காசோலை/அஞ்சல் ஆணை ரசீது/ பணவிடை இரசீது உடன் சேர்த்து,

THE BUSINESS MANAGER (JOURNALS), PUBLICATIONS DIVISION, MINISTRY OF INFORMATION AND BROADCASTING, ROOM NO.48 – 53, SOOCHNA BHAVAN, CGO COMPLEX, LODHI ROAD, NEW DELHI 110 003,

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

முதல் இதழ் சந்தாதாரருக்கு வந்துசேர 4 முதல் 6 வாரங்கள் ஆகலாம். சந்தா புதுப்பிப்பு/முகவரி மாற்றம் ஆகியவற்றிற்கு மறவாமல் உங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதவேண்டும்.

இணையதளம் வழியாகவும் சந்தா செலுத்தலாம்;

இணையதள முகவரி: http://publicationsdivision.nic.in/

**திட்டம் இதழுக்கான சந்தா தொகை:** ஓராண்டுக்கு: ரூ.230/- இரண்டு ஆண்டுகளுக்கு: ரூ.430/- மூன்று ஆண்டுகளுக்கு: ரூ.610/-

**திட்டம் இதழுக்கு சந்தா செலுத்துவோர்**, சந்தா கட்டணத்தை காசோலையாக (DEMAND DRAFT) ASSISTANT DIRECTOR, THITTAM, PUBLICATIONS DIVISION, CHENNAI என்ற பெயரில் சென்னையில் பணம் பெறத்தக்கதாக காசோலை எடுத்து அனுப்பவேண்டும். மேற்காணும் படிவத்தையும் நிரப்பி காசோலை/அஞ்சல் ஆணை ரசீது/ பணவிடை ரசீது உடன் சேர்த்து, உதவி இயக்குநர், திட்டம், வெளியீட்டுப்பிரிவு, A Wing, இராஜாஜி பவன், பெசன்ட் நகர், சென்னை 600090 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

**திட்டம் இதழுக்கு இணையதளம் வழியாகவும் சந்தா செலுத்தலாம்;**

இணையதள முகவரி: http://publicationsdivision.nic.in/

# அடல் புதுமையாக்கத் திட்டம்

அடல் புதுமையாக்கத் திட்டம் (Atal Innovation Mission - AIM) இந்திய அரசாங்கத்தின் தலையாயத் திட்டமாகும். புதுமையாக்கத்தையும், தொழில்முனைவையும் நாட்டில் புதுமுறையில் ஊக்குவிப்பதற்கான திட்டமாகும் இது. எதிர்வரும் ஆண்டுகளில் இந்தியாவில் புதுமையாக்கம், தொழில்முனைவுத்தேவைகள் பற்றிய விரிவான ஆய்வுக்கும், ஆழ்ந்த சிந்தனைக்கும் பிறகு நிதிஆயோக் அமைப்பினால் இந்தத்திட்டம் உருவாக்கப்பட்டது.

மத்திய மாநில அரசுகளுக்கிடையே புதுமையாக்கத் திட்டங்களை சீரமைத்து, புதுமையாக்கத்திற்கும், தொழில் முனைவிற்கும் ஏதுவான சூழ்நிலையை பல்வேறு நிலைகளிலும் உருவாக்கி, நிறுவி, அதனை மேம்படுத்துவதற்கு ஊக்கமளிக்கும் மேற்குடை போன்ற அமைப்பாக செயல்படுவதற்கு அடல் புதுமையாக்கத் திட்டத்திற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. மேல்நிலைப்பள்ளிகள், அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், உயர் கல்வி நிறுவனங்கள், சிறு குறு நிறுவனங்கள், குறு,சிறு, நடுத்தரத்தொழில் அமைப்புகள், பெருநிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியன இந்தப் படிநிலைகளில் அடங்கும்.

அடல் புதுமையாக்கத் திட்டம் மையமான இரண்டு செயல்பாடுகளைக் கொண்டது.

1. சுயவேலைவாய்ப்பு, திறமைகளைப் பயன்படுத்திகொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் தொழில்முனைவை அபிவிருத்தி செய்வது. இதன் மூலம் புதுமையான முயற்சிகளை மேற்கொள்வோருக்கு ஆதரவளித்து, அவர்களுக்கு வழிகாட்டி, வெற்றிகரமான தொழில் முனைவோராக உருவாக்குதல்.
2. புதுமையாக்கத்தை ஊக்குவித்தல்: புதுமையான யோசனைகள் உருவாவதற்கான தளத்தை அமைத்துக்கொடுத்தல்.
3. இத்தகைய நோக்கங்களை அடைவதற்காக முழுமையான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் பின்வரும் துணைக்கூறுகள் இடம்பெற்றுள்ளன:

அடல் இணைப்புப் பணி ஆய்வகங்கள் பள்ளிகளில் புதியன படைக்கும் படைப்பாற்றலை மேம்படுத்துதல்

நாடு முழுவதிலும் உள்ள மாவட்டங்களில் அனைத்து வசதிகளும் கொண்ட ஆய்வகங்களை பள்ளிகளில் அடல் புதுமையாக்கத்திட்டம் நிறுவிவருகிறது. இந்த ஆய்வகங்கள் 1200 முதல் 1500 சதுர அடி இடத்தில் புதுமை படைக்கும் பணியிடங்களைக் கொண்டதாக உள்ளது. இங்கு முப்பரிமாண அச்சுப்பொறிகள், ரோபோக்கள், நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புகொள்ள உதவும் வகையில் இணைய இணைப்பு தரும் Internet of Things ( IOT) அமைப்புகள், சிறுவடிவ மின்னணுக்கருவிகள் போன்ற அண்மைக்கால தொழில்நுட்பங்களில் மாணவர்கள் அவர்களாகவே பரிசோதனைகள் செய்து பார்ப்பதற்கான பல ஆய்வுக்கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. ரூ.20இலட்சம் மானியத் தொகையைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இத்தகைய ஆய்வகங்களில் ஆறு முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்கள் இணைப்பு வேலைகள் செய்து பார்த்து புதிய தீர்வுகளை உருவாக்கப் பழகிக்கொள்வார்கள். நாடு முழுவதும் உள்ள பல இலட்சக்கணக்கான மாணவர்கள் பிரச்னைகளைத் தீர்க்கும் திறனையும், புதுமைபடைக்கும் சிந்தனையையும் பெறுவதற்கு இத்தகைய ஆய்வகங்கள் உதவும்.

இதுநாள் வரை, அடல் இணைப்புப் பணி ஆய்வகங்கள் அமைப்பதற்கான மானியம் பெறுவதற்காக 2441 பள்ளிகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டு இறுதிவாக்கில் 5000க்கும் அதிகமான பள்ளிகளில் அடல் இணைப்புப் பணி ஆய்வகங்கள் செயல்படும். நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இந்த ஆய்வகங்கள் இடம்பெற்றிருக்கும்.

மானியம் பெறுவதோடு நின்றுவிடாமல், தங்கள் சமூகத்திலும் அதனைச் சுற்றிலும்

# அடல் புதுமையாக்கத் திட்டம்




நிலவும் பிரச்சினைகளை மாணவர்களும், ஆசிரியர்களும் அடையாளம் கண்டு, அவர்களின் வசிப்பிடத்தில் இருந்தபடியே அவற்றிற்கான புதுமையான தீர்வுகளை உருவாக்குவதற்கு, அடல் இணைப்புப் பணி ஆய்வகத் திட்டங்கள் களம் அமைத்துத் தருகின்றன. அடல் இணைப்புப் பணி ஆய்வகத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி திட்டங்களின் நோக்கங்களை சாதிப்பதற்கு வழிசெய்து தரப்படுகிறது. அகில இந்திய தொழில்நுட்பக்கல்வி அமைப்பு அருகிலுள்ள பள்ளிகள், பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பங்கேற்று மாணவர்களுக்கு அறிவுரை கூறி வழிகாட்டுவதற்கு உதவிடும். அடல் இணைப்புப் பணி ஆய்வகத் திட்டங்களின் துணைக்கூறுகளின் படி இணைப்பு மாரத்தான்கள் அண்மையில் நடத்தப்பட்டன. இந்த மாரத்தானில் 35000 மாணவர்கள் பங்கேற்றனர். ஏறத்தாழ 650 சிறப்பான புதுமையாக்கங்கள் மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றில் வெவ்வேறு ஆறு பிரிவுகளில் ஆகச் சிறந்த 30 புதுமை முயற்சிகள் தேசிய திட்டங்களுடன் சேர்க்கப்பட்டன. அங்கீகாரத்திற்காக 17 மாநிலங்களும் 3 யூனியன் பிரதேசங்களும் அடையாளம் கண்டறியப்பட்டுள்ளன. சிறந்த புதுமையாக்கங்களை இன்னும் மேம்படுத்தி அவற்றில் சிலவற்றை உற்பத்தி செய்திடும் முயற்சிகளும் நடைபெறுகின்றன. அடல் இணைப்புப் பணி ஆய்வகத் திட்ட சமுதாய நாள் ஏப்ரல் 14, 2018 அன்று 50000க்கும் மேற்பட்ட குழந்தைகளின் பங்கேற்புடன் அடல் இணைப்புப் பணி ஆய்வகத் தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கும் நாளாகக் கடைபிடிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஒவ்வொரு பள்ளியையும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடல் இணைப்புப் பணி ஆய்வகத்தை அணுகும் வாய்ப்புள்ளதாக உருவாக்குவதும், மாநில கல்வி அமைச்சகங்களின் உதவியுடன் நாடு முழுவதும் அவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பதும் இலட்சியமாக உள்ளது. அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், பெண்கள் பள்ளிகள், மலை மாவட்டப் பள்ளிகள், வட கிழக்கு மாகாணங்களில் உள்ள பள்ளிகள் ஆகியவற்றிற்கு அடல் இணைப்புப் பணி ஆய்வகங்கள் அமைப்பதற்கு சிறப்பு முன்னுரிமை தரப்படும்.

அடல் பெருக்க அமைவுகள் (Atal Incubators) பல்கலைக்கழகங்களிலும், தொழிற்சாலைகளிலும் அமையும்.

தொழில்முனைவை ஊக்குவித்தல்:

பல்கலைக்கழகங்கள், தொண்டு நிறுவனங்கள், சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பெருநிறுவனங்கள் ஆகியவற்றில் உலகத்தரம் வாய்ந்த அடல் பெருக்க அமைவுகளை (Atal Incubators), அடல் புதுமையாக்கத்திட்டம் அமைக்கிறது. ஒவ்வொரு பிரிவிலும் / ஒவ்வொரு மாநிலத்திலும் நீடித்து நிலவக்கூடிய புதிய தொழில்களின் வெற்றிகரமான வளர்ச்சியைத் தூண்டுவதுடன், நம் நாட்டுத் தொழில் முனைவோரையும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவோரையும் உயர்வு பெறச்செய்து, இந்தியாவின் வணிக, சமூகத் தொழில் முனைவுகளில் அடல் புதுமையாக்கத் திட்டம் அக்கறை செலுத்தும். ஏற்கனவே இருந்துவரும் பெருக்க அமைவுகளுக்கும் ஆதரவளித்து அவற்றின் செயல்திறனை அதிகரித்துக்கொள்ள அடல் புதுமையாக்கத்திட்டம் உதவிடும். இவைகளுக்காக ரூ.10கோடி வரை

மானியங்கள் வழங்கப்படுகின்றன. அடையாளம் காணப்பட்டுள்ள 110 சீர்மிகு நகரங்களும், ஒவ்வொரு மாநிலத்திலும் முன்னணியில் உள்ள 5 முதல் 10 கல்வி நிறுவனங்களும், தொழில் நிறுவனங்களும் உலகத்தரம் மிக்க பெருக்க அமைவுகளை (Atal Incubators) முனைந்து பெற்று இளைஞர்களும், தொழில் தொடங்க முன்வருவோரும் பல்கலைக்கழகங்களிலும், தொழிற்சாலைகளிலும் தொழில்களைத் தொடங்குவதற்கு வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும். இது நாள் வரை, 19 அடல் பெருக்க அமைவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 2018-19 முடிவில் 50க்கும் மேற்பட்ட அடல் பெருக்க அமைவுகள் செயல்பாட்டிற்கு வரும். பெண்கள் முன்னின்று நடத்தும் பெருக்க அமைவுகளும், தொழில் முனைவுகளைத் தொடங்குவோர் நடத்தும் முனைவுகளும் அடல் புதுமையாக்கத் திட்டத்தால் மும்முரமாக ஊக்குவிக்கப்படும்.

**அடல் புதுமையாக்கத் திட்டத்தின் அண்மைக்கால பணிகள் :**

அடல் புதிய இந்தியா சவால்களும், அடல் மாபெரும் சவால்களும் (New India Challenges and Atal Grand Challenges) சமூக, வணிகத் தாக்கங்களை உண்டாக்குவதற்கு தொழில்நுட்பத்தால் வழிநடத்தப்படும் புதுமையாக்கங்களையும், பொருள் உற்பத்தியையும் அதிகரித்தல்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஆற்றலை சேமித்துவைத்தல், பருவநிலைக்கு உகந்த துல்லிய வேளாண்மை, அனைவருக்கும் குடிநீர், தூய்மைபாரதம், போக்குவரத்து, கல்வி, ரோபோக்களைப் பயன்படுத்தி உடல்நலம் பேணல், IOT தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு, மெய்நிகர் தோற்றம், பாட்டரி தொழில்நுட்பங்கள் போன்ற குறிப்பிட்ட சில பிரிவுகளிலும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சில பிரிவுகளிலும் சமூகப்பொருளாதாரத் தாக்கங்களை உருவாக்கும் குறிப்பிடத்தக்க உற்பத்திப்பொருள் புதுமையாக்கங்களை உருவாக்குவதற்கு அடல் புதிய இந்தியா சவால்கள், அடல் மாபெரும் சவால்கள் (New India Challenges and Atal Grand Challenges) திட்டங்களை அடல் புதுமையாக்கத் திட்டம் செயல்படுத்துகிறது. இவற்றில் பெரும்பாலான பிரிவுகள் அண்மையில் வெளியிடப்பட்ட பொருளாதாரக்கணக்கெடுப்பு 2017-18 உடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. 17 சவால்கள் அடங்கிய அடல் புதிய இந்தியா சவால்களின் முதல் தொகுப்பு ஏப்ரல் 26, 2018 வெளியிடப்பட்டது. இந்தியாவிற்கென பிரத்யேகமாக இருக்கும் பிரச்சினைகளுக்கான சிறப்புத் தீர்வுகளை அடையாளம் கண்டறிவதற்கான தேவையை நிதிஆயோக் அமைப்பின் தலைமைச் செயல் அலுவலர் வலியுறுத்தியுள்ளார். அடல் புதிய இந்தியா சவால்கள் பிரிவில் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு ஒரு கோடி ரூபாயும், அடல் மாபெரும் சவால்கள் பிரிவில் தேர்வு பெறுபவர்களுக்கு 30 கோடி ரூபாய் வரையிலும் அதிக அளவு மானியத்தொகையும் வழங்கப்படும்.

அடல் புதிய இந்தியா சவால்கள் பிரிவின் கீழ் கவனம் செலுத்துவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ள 17 பகுதிகள் உள்ளன. பருவநிலையைத் தாக்குப்பிடிக்கும் வேளாண்மை, பனிப்புகையின் ஊடாகவும் எதிரில் உள்ளதைப் பார்த்தறியக் கூடிய சாலை, ரயில் போக்குவரத்து அமைப்புகள், மாற்று எரிபொருள் அடிப்படையில் இயங்கும் போக்குவரத்து, விரைவாக இயங்கும் நிலைமை, நீரின் தரத்தை உடனடியாக அளவிட்டறியும் கையடக்கக் கருவி, குறைவான செலவில் நீரிலிருந்து உப்பை நீக்கும் / மறுசுழற்சி செய்யும் தொழில்நுட்பம், கழிவு நிர்வாகம், மறுசுழற்சி, மறு உபயோகக் கருவிகள், தரமான தொழு உரம், பொது இடங்களில் கழிவுகள், குப்பைகள் போடுவதற்கெதிரான அறிவுரைகள் கூறுதல் ஆகியவை இதில் அடங்கும்.

அடல் புதுமையாக்கத் திட்டங்களுக்கான விண்ணப்பங்களை ஜூன் 10, 2018 வரை http://aim.gov.in/atal-new-india-challenge.php என்ற இணையதள முகவரி மூலம் அனுப்பலாம்.

முன்னதாக, மார்ச் 2018இல், அடல் புதுமையாக்கத் திட்டம் அதன் நோக்கம் பற்றிய அறிக்கையில் (Statement of Intent - SOI) ஜெர்மன் தொழில்நுட்ப கம்பெனியுடன் கையொப்பம் இட்டுள்ளது. புதுமையாக்கத்தையும், தொழில்முனைவையும் வளர்த்தெடுப்பதற்கு இது உதவும். இதன் ஒரு பகுதியாக 2018இல் 100 அடல் இணைப்புப் பணி ஆய்வகங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு தத்து எடுத்துக்கொள்ளப்படும். அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் (Science, Technology, Engineering and Mathematics - STEM) ஆகியவற்றை பயில்வதை இடைநிலைப் பள்ளி மாணவர்கள் மத்தியில் இது உற்சாகமளித்து வளர்க்கும். ●